வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வாரமலர் ஈழநாடு




Email : news@eelanadu.lk மலர் : 04 04.05.2023 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 177 பக்கங்கள் : 20


07
2048இல் தேசத்தை கட்டியெழுப்பும் ரணிலின் திட்டம்


08
குற்றச் செயல்மயமான அரசியலும் அரசியல்மயமான குற்றச்செயல்களும்


09
அரசியல் வாதிகளின் வாரிசுகளுக்கு என்ன நிகழ்ந்தது?


10
உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு: சவால்களும் சந்தேகங்களும்

# வடக்கு-கிழக்கில் பௌத்த மயமாக்கலை கட்டுப்படுத்துவதற்கு இந்தியா உதவாது!

## சுட்டிக்காட்டுகிறார் மனோ கணேசன்

கொழும்பு, ஜூன் 04

**தமிழர்கள் அதிகளவில் வாழும் வடக்கு கிழக்கில் பௌத்த மயமாக்கலைக் கட்டுப் படுத்த இந்தியாவின் உதவியை கோருவ தால் எவ்வித பயனும் இல்லை என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.**

தமது நாட்டில் தோன்றிய பௌத்தத்தை மற்ற இடங்களிலும் வளரவேண்டும் என்றே இந்தியா விரும்பும் என்பதனால் இந்த விட யத்தில் தமிழ் அரசியல்வாதிகளுக்கு இந்தியா வின் ஆதரவு கிடைக்கும் என்பதில் சந்தேகமே என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பௌத்த மயமாக்கலை கட்டுப்படுத்த இந்தியாவின் உதவியை கோருவதற்கு பதிலாக, இந்தப் பிரச்னைக்குத் தீர்வு 19



## எரிபொருள் விநியோகம் இன்று சீராகும்

கொழும்பு, ஜூன் 04

எரிபொருள் விநி யோக நடவடிக்கை கள் இன்று ஞாயிற்றுக் கிழமை சீராகிவிடு மென எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித் தார்.

போதியளவு எரி பொருள் கையிருப்பில் வைக்காத அல்லது எரி பொருளை உரிய வகையில் 19



## தையிட்டியில் நேற்றும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 04

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றக் கோரி மீண்டும் போராட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது. தமிழ் தேசிய மக்கள் முன்னணியின ரால் 3 ஆவது கட்டமாக நடத்தப்படும் இந்தப் 19

## பௌத்தமயமாக்கல் தொடர்ந்தால் இந்தியாவின் ஆதரவை கோருவோம்

### கூறுகிறார் விக்னேஸ்வரன் எம்.பி.

கொழும்பு, ஜூன் 04

வடக்கு மற்றும் கிழக்கில் பௌத்தமயமாக்கல் நட வடிக்கைகள் தொடருமானால் இந்தியாவில் உள்ள இந்து மத அமைப்புகளின் ஆதரவை கோருவோம் என பாராளு மன்ற உறுப்பினர் சி.வி. விக்கனேஸ்வரன் தெரிவித் தார்.

இந்த விவகாரம் தொடர்பாக இந்தியாவில் உள்ள பல இந்து அமைப்புகளுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அவர் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்தியாவிலுள்ள இந்து 19

## பொருளாதார மீட்சி இலங்கையில் தொடர்ந்தும் சவாலாகவே உள்ளது

### சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 04

இலங்கையின் பொரு ளாதாரத்தில் தற்காலிக முன்னேற்றத்திற்கான அறிகுறிகள் தென்படு கின்றபோதிலும், பொரு ளாதார மீட்சி என்பது தொடர்ந்தும் சவாலா கவே உள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கென்ஜி ஒக்காமுரா தெரிவித்துள் ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டதன் பின் னர், வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இத னைத் கூறியுள்ளார்.

அவர் தனது அறிக்கையில், ஆக்கபூர்வமான 19

## தேர்தல், அரசியல் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர்!

### ஜனாதிபதி ரணில் கருத்து

கொழும்பு, ஜூன் 04

நாட்டு மக்களில் பெரும்பாலானோர் தேர் தல் மற்றும் அரசியல் மீது நம்பிக்கை இழந்து விட்டனர் என ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நுவரெலியாவில் இடம்பெற்ற '2023/ 2024 தேசிய சட்ட மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற் றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரி விக்கையில்- 19

## ஐ.நா. பொதுச்சபை துணைத்தலைமை பொறுப்பினை ஏற்கின்றது இலங்கை!

கொழும்பு, ஜூன் 04

ஐ.நா பொதுச் சபை யின் 78ஆவது கூட்டத் தொட ரின் துணைத் தலைவர்களாக ஆசிய - பசிபிக் பிராந்தியத்தைச் சேர்ந்த ஈரான், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, உஸ் பெகிஸ்தான் ஆகிய நாடு கள் தேர்ந்தெடுக்கப்பட் டுள்ளன. அதன்படி 2023 செப்ரெம்பர் முதல் 2024 செப்ரெம்பர் வரை ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் சார்பாக இலங்கை இந்த முக்கியமான 19





# மூன்று ரயில்கள் ஒன்றோடொன்று மோதி ஒடிசாவில் கோர விபத்து!

## 261 பேர் உயிரிழப்பு! 900 பேர் காயம்!!

புதுடில்லி, ஜூன் 07

இந்தியாவின் ஒடிசா மாநிலத் தில் இடம் பெற்ற மிக மோசமான ரயில் விபத்த்தில் 261 பேர் உயிரிழந் துள்ளனர். 900 பேர் காயமடைந் துள்ளனர்.

மூன்று ரயில்கள் மோதியதால் நேர்ந்த இந்தக் கோர விபத்தில் பலி யானோரது எண்ணிக்கை முந்நூறை நெருங்கும் எனக் கூறப்படுகின்றது. குறைந்தது 900 பேர் காயமடைந் துள்ளனர்.

மேற்கு வங்க மாநிலம் ஷாலி மார் நகரில் இருந்து சென்னை மத் திய ரயில் நிலையத்துக்குச் சென்று கொண்டிருந்த கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் - கர்நாடகாவின் 19

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# அரசுக்கு எதிரான போராட்டங்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்களே உதவி!

## குமார வெல்கம குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 04

**இலங்கையில் நடந்த போராட்டத்துக்கு அரசசார்பற்ற நிறுவனங்களே பணத்தை செலவிட்டதாகவும் புத்த பகவானை அவமதிக்கும் சம்பவங்களின் பின்னணியிலும் இந்த நிறுவனங்கள் இருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.**

களுத்துறையில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உண்மையான போராட்டக்கார்கள் தற்போது இல்லை. உண்மையான போராட்டக்காரர்கள் போராட்டத்தை நிறுத்திவிட்டனர். பணத்துக்கு பின்னால் செல்பவர்களே தற்போது போராட்டத்தில் உள்ளனர்.

இவர்களே அரச சார்பற்ற நிறுவனங்களுடன் போராட்டத்தின் பின்னணியில் இருக்கின்றனர்.

போராட்டம் நடந்த இடத்தில் சிலர் சாப்பிட்டார்கள், குடித்தார்கள், வேறு வேலைகளையும் செய்தனர்.

அரசியலும் அதில் சம்பந்தப்பட்டுள்ளது. முன்னாள் தலைவர்களும் சம்பந்தப்பட்டுள்ளனர்.

புத்த பகவானை அவமதிக்கின்றனர். இதனை இன்னுமொரு அணி பணத்துக்காக செய்கிறது.

நாட்டில் பெரிய குழப்பத்தை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றனர். இது சர்வதேச சூழ்ச்சித்திட்டம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷவினருக்கு உதவினால், மிக விரைவாக விரட்டப்படுவார்.

இது புற்றுநோய் போன்றது. பணத்துக்கு பின்னால் சென்றவர்கள் தற்போது கட்சிகளுக்கு சென்றுள்ளனர்.

தனிஸ் அலி எமது கட்சியுடன் இருப்பதாகக் கூறுகின்றனர். அவர் எமது கட்சியில் இல்லை.

அவர் கட்சியின் தலைமைய கத்துக்கும் வந்ததில்லை. இப்படியானவர்களே தற்போது போராட்டத்தின் தலைவர்கள்.

இவர்களை போன்றவர்கள் பாராளுமன்றத்துக்குள் வந்தால், எம்மைப் போல தெரிவார்கள்.

முதலில் இவர்களை விரட்ட வேண்டும். நாட்டில் பிரச்னையை ஏற்படுத்த வெளிநாட்டு அணிகளே ஆலோசனை வழங்கின.

சில கட்சிகளுக்கு சர்வதேச நாடுகள் உதவுகின்றன. அரசாங்கத்திற்கு எதிரான கட்சிகளுக்கே வெளிநாடுகள் உதவுகின்றன - என்றார். (அ)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமானத்திலிருந்து விழுந்தவர் பலி!

கொழும்பு, ஜூன் 04

இலங்கை வழியாக கனடா செல்வதற்காக வந்த இந்தியப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இறங்கும்போது விமானத்தில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது. கே.ஜோர்ஜ் (வயது-65) என்ற பயணியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பயணி உயிரிழந்துள்ளார். (அ)

# வங்கி அட்டையை திருடி தங்கம் கொள்வனவு செய்த பெண் கைது

கொழும்பு, ஜூன் 04

வெளிநாட்டில் இருந்து வந்த பெண்ணொருவரின் வங்கி அட்டையைத் திருடி தங்க ஆபரணங்கள் உட்பட பொருட்களைக் கொள்வனவு செய்த பெண்ணை தாம் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டில் வசித்து வரும் பெண்ணொருவர் வவுனியா குருமன்காடு பிரதேசத்தில் உள்ள தனது உறவினர் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

அப்போது அவரை சந்திக்க வந்த பெண், அவரது வங்கி அட்டையை திருடி, அதனைப் பயன்படுத்தி 13 இலட்சத்து 8 ஆயிரத்து 899 ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் மற்றும் பொருட்களைக் கொள்வனவு செய்துள்ளார்.

இது குறித்து வன்னி மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய வவுனியா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதனையடுத்து சந்தேக நபரான பெண்ணை பொலிஸார் கைது செய்தனர்.

கிளிநொச்சி பிரதேசத்தை சேர்ந்த 24 வயதான பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

பெண்ணிடம் நடத்திய விசாரணைகளை அடுத்து அவர் கொள்வனவு செய்திருந்த இரண்டு தங்க வளையல்கள், தங்கச்சங்கிலி, இரண்டு தங்க மோதிரங்களைப் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# உலகின் இராட்சத கடல் ஆமை பாணந்துறைக் கடற்கரையில்!



கொழும்பு, ஜூன் 04

உலகின் மிகப்பெரிய கடல் ஆமை இனமாகக் கருதப்படும் ஆமை ஒன்று நேற்றுப் பிற்பகல் பாணந்துறை கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ளது.

இலங்கையைச் சுற்றியுள்ள கடற்பரப்பில் இந்த ஆமைகள் மிகவும் அரிதாகவே காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

பாணந்துறை கடற்கரையில் கரை ஒதுங்கிய ஆமை 6-7 அடி நீளமுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பேசிய ஆமை பாதுகாப்பு திட்டத்தின் திட்டத் தலைவர் துஷான் கபுருசிங்க,

இலங்கை, அந்தமான் மற்றும் நிக்கோபார் போன்ற வெப்பமண்டல தீவுகளின் கடற்கரைகளுக்கு இந்த கடல் ஆமைகள் முட்டையிடுவதற்காக மட்டுமே செல்வது வழக்கம்.

இவை கரைக்கு வரும் நேரத்தில் முட்டையிடும், முட்டையிட்ட பிறகு, அவை உடனடியாக கடலுக்குத் திரும்புகின்றன.

மேலும் குறித்த கடல் ஆமைகள் 1970 முதல் அழிந்து வரும் உயிரினங்களின் பட்டியலில் உள்ளன-என்றார். (அ)

# பொன் சிவகுமாரனின் நினைவேந்தலில் அரசியல் பேதமின்றி பங்கேற்கவேண்டும்

## ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 04

தியாகி பொன் சிவகுமாரனின் நினைவேந்தலின்போது அரசியல் கட்சிகள் எவ்வித அரசியல் பேதமுமின்றி பங்கேற்க வேண்டுமென நினைவேந்தல் குழு அழைப்பு விடுத்துள்ளது.

தியாகி பொன் சிவகுமாரின் 49வது ஆண்டு நினைவேந்தல் எதிர்வரும் 5ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

அது தொடர்பான ஊடக சந்திப்பு நினைவேந்தல் குழுவினரால் நேற்று நடத்தப்பட்டது.

அதில் அவர்கள் கருத்து தெரிவிக்கையில்-

தியாகி பொன் சிவகுமாரனின் 49 ஆவது நினைவேந்தல் நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் உரும்பிராயில் உள்ள அவரது நினைவிடத்தில் அனுஷ்டிக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நினைவேந்தலில் அரசியல் கட்சிகள் அரசியல் பேதமின்றி பங்கேற்கவேண்டும். மேலும் பல்கலைக்கழக மாணவர்கள் நினைவேந்தல் இடத்துக்கு வந்து அஞ்சலியை மேற்கொள்ள வேண்டும் - என்றனர். (அ)

# நாடு முழுவதும் தென்மேற்கு பருவமழை

கொழும்பு, ஜூன் 04

நாடு முழுவதும் தென்மேற்குப் பருவமழை அடுத்த சில நாட்களில் படிப்படியாக நிலைபெறக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும்.

இதேவேளை, சப்ரகமுவ மாகாணத்திலும் காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் சில இடங்களில் சுமார் 100 மில்லிமீற்றர் அளவில் பலத்த மழை பெய்யக் கூடும்.

வடமேற்கு மாகாணத்தில் பல தடவைகள் மழை பெய்யும். ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

நாட்டில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-45 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். (அ)

# இலங்கையில் விவசாயத்துறையை மேம்படுத்த முன்வரும் பில்கேட்ஸ்

கொழும்பு, ஜூன் 04

உலகப் புகழ்பெற்ற மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் உரிமையாளரான பில் கேட்ஸின் அறக்கட்டளை இலங்கையில் விவசாயத்தை மேம்படுத்த முன்வந்துள்ளது.

விவசாயத் துறையில் உற்பத்தி மற்றும் ஊட்டச் சத்தை அதிகரிக்கும் நோக்கில் டிஜிற்றல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் மென் பொருளை அறிமுகப்படுத்தி இந்த நாட்டில் விவசாயத்தை அதிகரிக்க பில் கேட்ஸ் அறக் கட்டளை முன்வருவதுடன் இதற்கான ஆரம்ப கட்ட கலந்துரையாடல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நாட்டில் விவசாயத் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக 250 மில்லியன் டொலர்கள் மானியம் பெறப்பட்டுள்ளதுடன், நெல் மற்றும் ஏனைய பயிர்களின் ஊட்டச் சத்தை அதிகரிப்பதற்காக விவ சாயத் துறையில் தரவுகளைச் சேகரிப்பதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையின் அதிகாரிகள் கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தபோது இந்தத் திட்டத்திற்கு தமது இணக்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

உரப் பாவனையின் மூலம் உற்பத்தித் திறனை நேரடியாகப் பெறுவதற்கும் பெறப்பட்ட உற்பத்தித் திறனைப் பேணுவதற்கும் தேவையான வழிகாட்டல்களை புதிய மென்பொருள் வழங்கும் என ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற ஆரம்ப கட்ட கலந்துரையாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கூடுதலாக, பில் கேட்ஸ் அறக்கட்டளை சமூக பாதுகாப்பு அமைப்பை டிஜிற்றல் மயமாக்குவதில் உறுதியாக உள்ளது. இது தவிர, நாட்டின் நிதி அமைப்பு மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான துறைகளும் இந்த மென்பொருள் மூலம் டிஜிற்றல் மயமாக்கப்படும்.

இந்த செயற்பாடுகள் ஜனாதிபதி செயலகத்தின் பிரதானி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரின் மேற்பார்வையில் இடம்பெறும். (அ)

# இராஜாங்க அமைச்சர்கள் பணியாற்றுவதற்கு தடை

## டயானா கமகே குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 04

**அமைச்சரவை அமைச்சர்கள் தமக்குக் கீழ் உள்ள இராஜாங்க அமைச்சர்களைச் சுதந்திரமாகப் பணியாற்ற அனுமதிப்பதில்லை என சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே குற்றம் சுமத்தியுள்ளார்.**

பொதுஜன பெரமுனவின் அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் மாவட்டத் தலைவர்களின் விசேட கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போதே சுற்றுலாத் துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் இவ்வாறு தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர்கள் பணியாற்றுவதற்கு அமைச்சரவை அமைச்சர்கள் அந்த அமைச்சுக்களின் பொறுப்புக்களைப் பகிர்ந்தளிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், தனக்கு மட்டுமல்ல, அரசாங்கத்தில் உள்ள பெரும்பாலான இராஜாங்க அமைச்சர்களுக்கும் இந்த பிரச்னையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் சுற்றுலாத்துறைக்கு பொறுப்பான அமைச்சரவை அமைச்சர் ஹறின் பெர்னாண்டோவும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)



# யாழ்.சிறையில் இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 04

யாழ். சிறைச்சாலையில் நேற்று மாபெரும் இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் 100ஆவது சிறைச்சாலை பாதுகாவலர் அணியின் 8ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்த இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் குருதிக் கொடையில் ஈடுபட்டனர். அதன்பின்னர் இந்த நிகழ்வின் நினைவாக மரக்கன்றுகள் வழங்கப்பட்டதுடன், மரக் கன்றுகள் நாட்டியும் வைக்கப்பட்டன. (அ)

# நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக உயர்வு

கொழும்பு, ஜூன் 04

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருவதாக தொற்றுநோயியல் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

2023 இல் பதிவாகியிருந்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 40,000 ஐத் தாண்டியுள்ளதுடன் தொடர்ந்தும் இலங்கை டெங்கு நோய்த் தாக்க அபாயத்திலிருந்து வெளியேறவில்லை எனவும் அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

தொற்றுநோயியல் பிரிவின் அறிக்கையின்படி, ஜூன் 03 ஆம் திகதி வரை, 2023 இல் இதுவரை மொத்தம் 40,206 பேர்வரை டெங்கு நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அதிகபட்சமாக கம்பஹா மாவட்டத்தில் 8,970 பேர் டெங்கு நோய்த் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், மேல் மாகாணத்தில் 20,000 இற்கும் மேற்பட்டவர்கள் டெங்கு நோய்த்தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மாகாணங்களின் அடிப்படையில் இந்த எண்ணிக்கை மிக அதிகமாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், டெங்கு நோய் பரவும் இடங்கள் அதிகமாக காணப்படும் 60 அதிக ஆபத்துள்ள பகுதிகளை தொற்றுநோயியல் பிரிவு அடையாளம் கண்டுள்ளது.

அத்துடன், மே மாதத்தில் 9,290 பேர் டெங்கு நோய்த் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், ஜனவரி 2023 முதல் மொத்தம் 25 இறப்புகள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், டெங்கு பரவலைத் தடுக்கும் வகையில், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருப்பதுடன், நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழிக்குமாறும், சுகாதாரத் துறை அதிகாரிகள் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ். கதிர்காம பாதயாத்திரிகர்களுக்கு காரைதீவில் கால் கழுவி பெருவரவேற்பு!

காரைதீவு, ஜூன் 04

யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து புறப்பட்டு ஐந்து மாவட்டங்களைக் கடந்து அம்பாறை மாவட்டத்திற்கு சென்றுள்ளத ஜெயாவேல் சாமி தலைமையிலான கதிர்காம பாதயாத்திரை குழுவினருக்கு நேற்று முன் தினம் காரைதீவில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த 26 நாட்களாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய ஐந்து மாவட்டங்களைக் கடந்து நேற்று முன்தினம் காரைதீவிற்கு சென்றபோது மஞ்சள் நீரால் கால்கழுவி பெருவரவேற்பு அளிக்கப்பட்டது.

பாதயாத்திரை குழுவின் ஆலோசகர் வி.ரி.சகாதேவ ராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன், மாவட்ட இந்து கலாச்சார உத்தியோகத்தர் கு. ஜெயராஜ், நீராகாரம் வழங்கிய முருகபக்தர் எஸ்.தேவதாஸ் ஆகியோர் வரவேற்பளித்தனர்.

பின்னர் அவர்கள் காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தை தரிசித்து காரைதீவில் முழு நாளும் தங்கியிருந்தனர்.

எதிர்வரும் 11ஆம் திகதி உகந்தை மலையை அடைந்து 12ஆம் திகதி காட்டுப்பாதை திறக்கப்பட்டதும் முதல் நாள் காட்டுக்குள் பிரவேசிக்க இருக்கின்றார்கள். (அ)



# சட்டவிரோதமான மதுபான விற்பனை நிலையம் மட்டக்களப்பில் முற்றுகை!



மட்டக்களப்பு, ஜூன் 04

மட்டக்களப்பில் சட்டவிரோத மதுபான விற்பனை நிலையம் நேற்றுக் காலை பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்டது.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய புண்ணச்சோலை, குமாரபுரம் ஆகிய பகுதிகளில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது அனுமதிப் பத்திரம் இன்றி சட்ட விரோத முறையில் மதுபான விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவர் மதுபானப் போத்தல்களுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மதுபான விற்பனையில் ஈடுபட்ட பெண்ணிடம் இருந்து 180 மில்லி லீற்றர் கொள்ளளவு உடைய 165 மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் மதுபான விற்பனை ஈடுபட்ட பெண்ணையும் கைது செய்துள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கஜேந்திரகுமார் மீதான கொலை முயற்சி இலங்கை அரசின் இனவாத கோர முகம்!

## சீமான் கடும் கண்டனம்

சென்னை, ஜூன் 04

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான படுகொலை முயற்சி இலங்கை அரசின் இனவாத கோரமுகத்தின் மற்றொரு வெளிப்பாடு என சீமான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரை சுட்டுப் படுகொலை செய்வதற்கு இலங்கை புலனாய்வுத்துறையினர் முயன்றுள்ளது பெரும் அதிர்ச்சி ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் இருப்பையும் திரைமறைவில் அழித்தொழிக்கும் இலங்கை இனவெறி அரசின் சதிச்செயலே இக்கொலை முயற்சி நிகழ்வு என்றும் அவர் சாடியுள்ளார்.

தமிழர்கள் மீதான இலங்கை அரசின் இனவெறி அடக்குமுறைகள் இன்னும் நிறைவடையவில்லை என்பதை இந்த சம்பவம் மூலமாவது பன்னாட்டுச்சமூகம் உணர்ந்துகொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேநேரம், அரசியல் உரிமையைப் பெற்றிட கனடா உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்து பொதுவாக்கெடுப்பு கோரும் தீர்மானத்தை ஐ.நா. சபையில் கொண்டுவந்து நிறைவேற்றிட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# வாக்காளர் பட்டியல் திருத்தம் கணக்கெடுப்பு பணி ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 04

இவ்வருடத்திற்கான வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான சனத்தொகை கணக்கெடுப்பு பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்ள இது வரை வீடுகளுக்கு வரவில்லையென்றால், அதுபற்றி தெரிவிக்குமாறு இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி எதிர்வரும் 16 ஆம் திகதியுடன் முடிவடைய உள்ளது.

எவ்வாறாயினும், கிராம உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக வாக்காளர் பட்டியல் திருத்தத்தை அன்றைய தினம் முடிக்க முடியாது என அதன் தலைவர் கமல் கித்சிறி தெரிவித்துள்ளார். (அ)

# நாங்கள் ஆட்சிக்கு வந்தால் திருடர்களைப் பிடிப்போம்!

## கூறுகின்றார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, ஜூன் 04

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு திருடர்களைப் பிடிக்க முடியாதபோதிலும் தமக்கு திருடர்களைப் பிடிக்க முடியும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

திஸ்ஸமஹாராம பிரதேசத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் வாழும் 220 இலட்சம் மக்கள் காரணமாக நாடு வங்குரோத்து அடையவில்லை. நாட்டின் வளங்களை கொள்ளையிட்ட ராஜபக்ஷ அரசாங்கம் காரணமாகவே நாடு இந்த நிலைமையை அடைந்தது.

இதன் காரணமாக நாட்டில் வாழும் பெரும்பாலான மக்கள் அநாதரவாகியுள்ளனர். வங்குரோத்து நிலைமையில் இருந்து மீளப் பணம் அவசியம்.

தரகு, இலஞ்சம் மூலம் பெற்ற கோடிக்கணக்கான டொலர்களைத் திரும்பப் பெறுவதே இந்த நிலைமையை போக்க இலகுவான வழியாக இருக்கும்.

இந்த பணத்தை நாட்டுக்கு பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற போதிலும் திருடர்களை நம்பி வாழும் தலைவருக்கு அதனைச் செய்ய முடியாது.

நாட்டை அழித்து கொள்ளையிட்ட ராஜபக்ஷ பரம்பரை மற்றும் அவர்களின் ஆதரவாளர்களே தற்போதைய ஜனாதிபதியின் அடிப்படைப் பலமாக இருக்கின்றது.

கொள்ளையிட்ட பணத்தைக் கொண்டு வருவதன் மூலமே நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்பதுடன் நாட்டுக்கு புது யுகத்தை ஏற்படுத்த முடியும்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தவுடன் திருடர்களை கைது செய்து, அவர்கள் கொள்ளையிட்ட பணத்தை கைப்பற்றி, அவற்றை நாட்டின் அபிவிருத்திக்காக பயன்படுத்துவோம் - என்றார். (அ)



# அச்சுவேலி பகுதியில் நேற்று வர்த்தக நிலையத்தில் தீ!

யாழ்ப்பாணம், ஜூன் 04

யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியில் நேற்று வர்த்தக நிலையமொன்றுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி தெற்கு விக்னேஸ்வரா பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்றே இவ்வாறு தீ வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். மாநகரசபை தீயணைப்பு வாகனத்தின் உதவியுடன் தீப்பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட போதும் தீப்பரவலால் வர்த்தக நிலையம் சிறிதளவு சேதம் அடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

வர்த்தக நிலையத்துக்கு விஷமிகள் சிலர் தீ வைத்திருக்கலாமெனவர்த்தக நிலைய உரிமையாளர் சந்தேகம் வெளியிட்டுள்ளதுடன் அச்சுவேலி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸாருடன் இணைந்து தடயவியல் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# வீரவன்ஸவுக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு

கொழும்பு, ஜூன் 04

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸவுக்கு எதிராக ஐக்கிய இளைஞர் சக்தி, குற்றவியல் விசாரணை திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

வீரவன்ஸ எழுதி வெளியிட்டுள்ள நவய செங்கவுனு கதாவ என்ற நூல் காரணமாக தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டம் நடந்தபோது இராணுவத்தின் நிலைப்பாடு சம்பந்தமாக வீரவன்ஸ, பாரதூரமான குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளதாகவும் இராணுவம் ஜனாதிபதியின் உத்தரவுகளை ஏற்கவில்லை எனவும் அமெரிக்கத் தூதுவரின் தாளத்துக்கு ஏற்றபடி ஆடியதாகவும் குற்றம் சுமத்தியுள்ளதாக ஐக்கிய இளைஞர் சக்தி குறிப்பிட்டுள்ளது.

சில இராணுவ அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரின் நற்பெயருக்கு களங்கள் ஏற்படுத்துவதே வீரவன்ஸவின் நூலுக்கு பின்னால் இருக்கும் நோக்கம் எனவும் முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. (அ)

# அச்சு இயந்திரத்தில் சிக்கி இளைஞர் பலி

கொழும்பு, ஜூன் 04

ஆடை தொழிற்சாலையின் அச்சு இயந்திரத்தில் தலை சிக்கியதில் இளைஞர் ஒருவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

வஸ்கடுவ பொக்குணவத்த வீதியில் அமைந்துள்ள ஆடை உற்பத்தி நிறுவனம் ஒன்றில் அச்சு இயந்திரத்தைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

இந்த இயந்திரம் திடீரென இயங்கிய காரணத்தினால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 3 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

படுகாயமுற்ற இளைஞர் களுத்துறை போதனா வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லும் போது உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் களுத்துறை வடக்கு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# இரும்பு உற்பத்திகளுக்கு தரச்சான்றிதழ் கட்டாயம்

கொழும்பு, ஜூன் 04

இரும்பு உற்பத்திகளுக்கு தரச்சான்றிதழ் கட்டாயமாக்கப்படவுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

எஸ்.எல்.எஸ். தரச்சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியாத இரும்பு உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறினார்.

எஸ்.எல்.எஸ்.தரச்சான்றிதழ் பெறப்படாத நிறுவனங்கள் இரும்புக் கம்பிகளை உற்பத்தி செய்து வருவதாக முறைப்பாடு கிடைத்ததாகவும் அதன் அடிப்படையில், குறித்த தரப்பினரை அழைத்து கலந்துரையாடியதாகவும் வர்த்தக அமைச்சர் கூறினார்.

எஸ்.எல்.எஸ். தரச்சான்றிதழை பெற்றுக்கொள்ளாத நிறுவனங்களின் தொழிற்சாலை செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கட்டுமானத்துறையுடன் தொடர்புடைய பொருட்கள் தொடர்பில் உரிய தரத்தைப் பேண வேண்டிய தேவை உள்ளதாகவும் இதன் காரணமாக இரும்பு உற்பத்திகளுக்கு எஸ்.எல்.எஸ். தரச்சான்றிதழை கட்டாயமாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

# பெற்றோலிய கணினிக் கட்டமைப்பில் தவறான தரவு பதிவாகியமை அம்பலம்

## சி.ஐ.டியினர் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 04

கடந்த 2022 ஆம் ஆண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட 582 எரிபொருள் பௌசர்கள் மீண்டும் எண்ணெய் சேமிப்பு முனையத்திற்கு கொண்டுவரப்பட்டதாகக் கூறி எண்ணெய் சேமிப்பு முனைய நிறுவனத்தின் கணினி அமைப்பில் தவறான தரவுகள் பதியப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதன்படி, இது தொடர்பில் உடனடியாக தடயவியல் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு அறிக்கையை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் சமர்ப்பித்து மேலதிக விசாரணைக்கு உட்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டபோதிலும், எண்ணெய் சேமிப்பு முனைய நிறுவனங்களும், எண்ணெய்க் கூட்டுத்தாபன அதிகாரிகளும் அதற்கு மௌனம் சாதித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

அதன்படி, கடந்த 2022ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி முதல் ஓகஸ்ட் 15ஆம் திகதி வரையான நான்கு மாதங்களில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் இறக்குமதி மற்றும் விநியோகத்தில் முறைகேடுகளை இழைத்துள்ளதா என்பதை ஆராயுமாறு அமைச்சர் மேற்படி முறைப்பாட்டின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

முறைப்பாட்டின் பிரகாரம் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சென்று வர்த்தக திணைக்களம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திணைக்கள அதிகாரிகளிடம் வாக்குமூலம் பெற்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இந்தக் காலப் பகுதியில் அதிக விலைக்கு விலை மனுக்களை சமர்ப்பித்தவர்களிடம் இருந்து எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டமை இந்த விசாரணைகளின்போது தெரியவந்துள்ளதோடு, பத்திரங்களைச் சமர்ப்பிக்காதவர்களிடம் இருந்தும் எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு 14, ஏ. எச். விமலதுங்க பெற்றோல் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்ட 6600 லீற்றர் டீசல் அடங்கிய பவுசர் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு வழங்கப்படாமல் மீண்டும் களஞ்சியசாலைக்கு கொண்டு வரப்பட்டமை இரண்டு முறை கணினி அமைப்பில் உள்ளீடு செய்யப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(அ)

# பல அடுக்குமாடி கட்டடங்கள் இடிந்து விழும் அபாய நிலை!

கொழும்பு, ஜூன் 04

அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ள பல அடுக்குமாடி கட்டடங்கள் இடிந்து விழும் அபாயத்தில் இருப்பதாக கொழும்பு மாவட்ட செயலகம் நடத்திய கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

கொழும்பு, திம்பிரிகஸ்சாய, கொலன்னாவ, இரத்மலானை மற்றும் மொரட்டுவை ஆகிய பகுதிகளே இவ்வாறு ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், ஒரு அடுக்குமாடி கட்டடத்தில் சுமார் 908 வீடுகள் உள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த அடுக்குமாடி கட்டடங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபை, கொழும்பு மாநகர சபை, தொழில் திணைக்களம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.

கொழும்பு மாவட்ட செயலகத்தின் பிரகாரம் கொழும்பு பிரதேச செயலகத்தில் 420 வீடுகளும், திம்பிரிகஸ்சாய பிரதேச செயலகத்தில் 120 வீடுகளும், கொலன்னாவ பிரதேச செயலகத்தில் 60 வீடுகளும், இரத்மலானை பிரதேச செயலகத்தில் 01 வீடும், மொரட்டுவை பிரதேச செயலகத்தில் 307 வீடுகளும் இடிந்து விழும் நிலையில் உள்ள அடுக்குமாடி கட்டடங்களாகும்.

கொழும்பு மாவட்டத்தில் பல அடுக்குமாடி குடியிருப்புகள் பாழடைந்த நிலையில் காணப்படுவதாகவும் இக்கட்டடங்கள் பாவனைக்கு தகுதியற்றவை எனவும் தேசிய கட்டட ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
04.06.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 21

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# இந்து அமைப்புக்களிடம் செல்லுதல்?

முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்ரன், பௌத்த மேலாதிக்கம் தொடர்ந்தால், இந்தியாவிலுள்ள இந்து அமைப்புக்களின் உதவியை கோரவுள்ளதாக தெரிவித்திருக்கின்றார். இது தொடர்பில் பலரும் அவ்வப்போது பேசியிருக்கின்றனர். ஆனால் எவரும் இது வரையில் அதற்கான காத்திரமான முயற்சிகளை முன்னெடுக்கவில்லை. ஆனால் இதில் ஒரு சிக்கலுமுண்டு. இந்தியாவிலுள்ள இந்து மத அமைப்புக்கள் ஈழத் தமிழர்களை எவ்வாறு நோக்குகின்றன? ஒரு மத அடிப்படையான சமூகமாக நோக்குகின்றனவா அல்லது, இன - அடிப்படையில் தமிழ் நாட்டோடு இணைத்து நோக்குகின்றனவா - ஏனெனில் ஈழத் தமிழர் அரசியல் தரப்புக்கள் இதுவரையில் தமிழ் நாட்டை தாண்டி, இந்தியாவில் செல்வாக்குமிக்க அரசியல் ஊடாட்டங்களை மேற்கொள்ளவில்லை.

அத்துடன், ஈழத் தமிழ் மக்களின் பிரச்னையை ஒரு பெரும்பான்மை இந்து தமிழர்களின் பிரச்னையாக இந்தியாவில் முன்னிறுத்தியதும் இல்லை. இதற்கான துணிவுள்ள அரசியல் தலைமைகளை இதுவரையில் ஈழத் தமிழ் சமூகம் சந்திக்கவுமில்லை. இலங்கை தமிழரசு கட்சியை உருவாக்கிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம் ஒரு கிறிஸ்தவர். ஆனால் அவர் ஓர் அடிப்படைவாதியல்ல. அவரது காலத்தில் தமிழ் நாட்டை அணுகுவதன் மூலம் புதுடில்லியின் ஆதரவை பெறும் முயற்சிகளை அவர் மேற்கொண்டிருந்தார். ஆனால் அன்றைய சூழலில் அது பெரியளவில் வெற்றியளிக்கவில்லை. நாங்களே பல்வேறு பிரச்னைகளை எதிர்கொண்டிருக்கும்போது, உங்களுக்கு எங்களால் எவ்வாறு உதவ முடியுமென்றே அன்றைய தமிழ் நாட்டு தலைவர்கள் பதிலளித்தனர்.

ஆனால் பிற்காலங்களில் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், தமிழ் நாட்டுத் தலைவர்களோடு நல்லுறவை பேணிக்கொண்டு, சமவேளையில், புதுடில்லியுடன் நெருக்கமான உறவிலிருந்தார். குறிப்பாக இந்திரா காந்தியுடன் அமிர்தலிங்கம் மதிப்புமிக்க நட்பை கொண்டிருந்தார். அமிர்தலிங்கத்திற்கு பின்னர் அவ்வாறானதொரு தகுதி நிலையுள்ள தமிழ் தலைவரை இது வரையில் ஈழத் தமிழ் சமூகம் சந்திக்கவில்லை. மேலும் அமிர்தலிங்கம் இந்தியாவின் உதவியின்றி, ஈழத் தமிழர் அரசியல்ரீதியில் முன்னோக்கிப் பயணிக்க முடியாதென்பதிலும் தெளிவான நிலைப்பாட்டை கொண்டிருந்தார்.

மோடி தலைமையில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைத்த பின்புலத்தில்தான், இந்து அமைப்புக்களை அணுகவேண்டுமென்னும் சிந்தனை துளிர்விட்டது. அது தற்போது முன்னர் எப்போதுமில்லாதளவுக்கு ஒரு குறிப்பிட்ட தரப்பினர் மத்தியில், ஒரு சிந்தனைப் போக்காகவும் மாறியிருப்பது போல் தெரிகின்றது. ஆனால் இதற்கு தலைமையேற்கக் கூடிய வலுவான ஆளுமைகள் எவரும் தமிழ் சமூகத்தில் இல்லை. விக்னேஸ்வரனுக்கு அவ்வாறான தகுதிநிலைகள் இருக்கின்றன. அவரது தோற்றம், இந்துமதத்தின் மீதான ஈடுபாடு, அவரது நீதிபதி அடையாளம் - இவ்வாறான விடயங்களை ஒரு மூலதனமாகக் கொண்டு அவரால் இந்து அமைப்புக்களை இலகுவாக நெருங்க முடியும்.

விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்தவேளையில், புதுடில்லியில் இடம்பெற்ற சர்வதேச இந்து மகாநாட்டுக்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார். அங்கு விக்கினேஸ்வரனுக்கு உயர்ந்த மதிப்பளிக்கப்பட்டிருந்தது. குறித்த நிகழ்வில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் தலைவர் மோகன் பகவத், திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா ஆகியோருக்கு அருகில் விக்னேஸ்வரன் அமர்ந்திருந்தார். ஆனாலும் விக்னேஸ்வரனுக்கு அந்தச் சூழலை கையாளத் தெரிந்திருக்கவில்லை. அந்தத் தொடர்புகளை முன்கொண்டு செல்வதற்கு அவர் முயற்சிக்கவும் இல்லை - அவருக்கு அதனை முன்கொண்டு செல்லத் தெரியவுமில்லை. ஆகக் குறைந்தது இப்போது அவர் பேசுவதையாவது, நிரூபிப்பதற்கான செயலில் இறங்குவாரா? தமிழ் அரசியல் தலைவர்களின் பிரச்னையே, 'பேச்சுப் பல்லக்கு தம்பி பொடிநடை'. முதலில் பேசுவதற்கு உண்மையாக இருக்க முயற்சிக்க வேண்டும். கடந்த 14 வருடங்களின் பலரும் பல விடயங்களை பேசியிருக்கின்றனர் - ஆனால் தாங்கள் பேசுவதற்கு ஆகக் குறைந்தளவு அர்ப்பணிப்பைக் கூட, எவருமே நிரூபிக்கவில்லை.

# இளைஞன் சடலமாக மீட்கப்பட்ட இடத்துக்கு அருகில் வீட்டு உரிமையாளர் மீது தாக்குதல்

*யாழ்ப்பாணம், ஜுன் 04*

பருத்தித்துறைப் பகுதியில் இளைஞன் ஒருவர் வீடொன்றுக்கு அருகில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட நிலையில் அந்த வீட்டின் உரிமையாளர் மீது இனம் தெரியாத நபர்கள் வாள் வெட்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

பருத்தித்துறை 3ஆம் குறுக்கு தெருவை சேர்ந்த சுப்பிரமணியம் சுகுமார் (வயது 50) என்பவரே மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, இரண்டாம் குறுக்கு தெருவைச் சேர்ந்த தியாகராஜா சந்திரதாஸ் (வயது-33) எனும் இளைஞன் கடந்த 28ஆம் திகதி அவரது வீட்டுக்கு அருகில் உள்ள மூன்றாம் குறுக்கு தெருவில் உள்ள சுகுமார் என்பவரின் வீட்டுக்கு வெளியே அதிகாலைவேளை சடலமாக மீட்கப்பட்டார்.

இந்நிலையில் சுகுமாரின் வீட்டினுள் , அத்துமீறி நுழைந்த மூவர் கொண்ட குழு அவர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

உயிரிழந்த இளைஞன் இரவு நேரம் எதற்காக அந்த வீட்டுக்கு அருகில் சென்றார் என்பது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில் , இளைஞனின் சடலம் மீட்கப்பட்ட இடத்துக்கு அருகில் உள்ள வீடொன்றில் வன்முறைக் கும்பல் புகுந்து தாக்குதல் நடத்தி உள்ளமை பொலிஸாருக்கு பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

# பொத்துவில் கனகர் கிராமத்தில் மக்களை 33 வருடங்களின் பின் குடியேற்ற ஏற்பாடு!



*காரைதீவு, ஜுன் 04*

1990களில் இடம் பெயர்ந்த பொத்துவில் அறுபதாம் கட்டை கனகர் கிராம மக்கள் 33 வருடங்களின் பின் மீள்குடியேற வசதியாக காடு மண்டி கிடந்த அப் பிரதேசத்தில் இரண்டாம் கட்டமாக நேற்று சனிக்கிழமை துப்புரவாக்கல் பணி இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் அங்கு சமுகமளித்திருந்தார்.

இப்பிரதேசம் ஜே.சி.பி. இயந்திரம் மூலம் துப்புரவாக்கப்பட்டு வருகின்றது.

பொத்துவில் பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும் சமூக செயற்பாட்டாளருமான பெருமாள் பார்த்தீபன் அரச அனுமதியுடன் இப் பணியில் ஈடுபட்டு வருகிறார். கனகர் கிராம மக்களும் படையினரும் சமுகமளித்திருந்தனர்.

226 பேரில் முதல் கட்டமாக 76 பேருக்கு காணியை விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. ஒருவருக்கு 1 ஏக்கர் 20 பேர்ச்சஸ் காணி வழங்கப்படும். பயிர்ச்செய்கைக்காக 1 ஏக்கர் காணியும் வீடு அமைக்க 20 பேர்ச்சஸ் காணியும் வழங்கப்படவிருக்கின்றது. (அ)

# கோப்பாயில் பொசன் அன்னதானம்

*யாழ்ப்பாணம், ஜுன் 04*


பொசன் பண்டிகையை முன்னிட்டு கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் அன்னதானம் வழங்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

பொசன் பண்டிகையை முன்னிட்டு மக்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வு கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் ஏற்பாட்டில்கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்,யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் இராணுவத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸார் கலந்துகொண்டு அன்னதானம் வழங்கும் செயற்பாட்டில் ஈடுபட்டனர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -80

# இடைவெளி! அவசியமானதொன்று?

கணபதி சர்வானந்தா

இடைவெளி என்பது பலரால் பலவாறு உணரப்பட்ட ஒரு விடயம்.பொதுவாக எல்லா விடயங்களிலும், எல்லா விடயங்களுக்கும் இடைவெளி உண்டு. மாரி மழையும் இடைவெளி விட்டுத்தான் பெய்கிறது. கோடை வெயிலுக்கும் இடைவெளி உண்டு. மரங்களும் இடைவெளிவிட்டுத்தான் காய்க்கிறது. பசுவும் இடைவெளிவிட்டே கன்றுகளை ஈன்றளிக்கின்றன.ஆழ்ந்து அறிந்தால் அனைத்து விடயங்களிலும் இடைவெளி ஒரு முக்கிய விடயமாகப் பேணப்படுகின்றது..

தொடர்ந்து பணியை மேற்கொள்ளும் ஒரு பணியாளன் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள ‘தேநீர்’ என்ற சிறிய இடைவெளிக்காகத்தான் காத்திருக்கிறான்.அந்தச் சிறிய இடைவெளிக்குள் தனது பணிகளில் இருந்து விலகி அனைத்து வழிகளிலும் தன்னை இற்றைப்படுத்திக்கொள்ள அந்த குறுகிய காலத்தை அவன் பயன்படுத்திக் கொள்ளுகிறான். இன்றைய நவீன உலகத்தில் மேற்கு நாடுகளிலுள்ளவர்கள் இது போன்ற இடைவெளிகளை நன்றாகப் பயன்படுத்துக் கொள்ளுகின்றனர்.

இவ்வாறெல்லாம் இடைவெளி என்ற விடயம் இருக்க – சிறுவர் கல்வி என்ற விடயத்தில் இடைவெளி என்ற விடயம் பற்றிக் கவனம் கொள்ளாதது ஏன்? கல்விப் பொருளாதார சாதாரணப் பரீட்சையில் தோற்றி அதன் பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கும் ஒரு மாணவனை சுயமாக இயங்கவிடாது, உடன் உயர்தரப் பரீட்சைக்குத் தயாராக்கத் தொடங்கிவிடுகிறார்கள். அவர்களை, அவர்கள் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கக் கூடச் சந்தர்பத்தைக் கொடுப்பதில்லை. பொதுவாகவே சிறார்களிடத்தே காணப்படும் இயல்புகளை அறிந்தவர்கள் அவர்கள் தொடர்பில் சிறப்பாகச் செயற்பட்டிருக்கிறார்கள்.சிறுவர் உலகம் வேறு, அவர்கள் எண்ணங்கள் வேறு, அவர் விருப்பங்கள் வேறு என்றெல்லாம் அறிந்து கொண்டு செயற்பட்டால் அவர்கள் கல்வியைச் சிறப்புற அமைத்துக் கொள்ளப் பெற்றோர்கள் பல சிறந்த புதிய வழிகளை வடிவமைத்துக் கொள்ளலாம்.

பொதுவாகக் கற்றல் மகிழ்ச்சி கொண்டதாகவும், விடுதலை உணர்ச்சி தருவதாகவும் ஆக்கம் தரும் ஊக்கலை முன்னெடுப்பதாக வும் இருத்தல் வேண்டும். கற்றலை விரும்பிக் கற்கின்ற அந்தப் படிநிலைக்குப் பிள்ளைகளை உயர்த்துவதே பெற்றோரின் தலையாய கடன் என்று அறிதல் முக்கியம். அதற்கு அவர்கள் அவர்களது பெற்றோர்களால் நன்கு அவதானிக்கப்பட்டு இடைவெளி உண்டென்று காணுமிடத்து அதனை சீராக்க அவர்கள் முயற்சிக்க வேண்டும்.

நாம் இடையிடையே தலைமுறை இடைவெளி பற்றியும் பேசிவருகிறோம்.தலை முறை இடைவெளி என்றால் என்ன?

தலைமுறை இடைவெளி என்பது, கருத்துப் பரிமாற்றத்திலும் புரிந்துகொள்ளுதலிலும் இருக்கக் கூடிய இடைவெளி. அது பொதுவாக, இளையவர்களுக்கும் பெரியவர்களுக்கும் இடையே இருப்பதாகக் கருதப்படுகிறது. எண்ணப்போக்கிலும் இலட்சியங்களை நோக்கிச் செல்வதிலும் இந்த இடைவெளி தோன்றுகிறது. இந்த இடைவெளியை அதிகப்படுத்துவதில் பெரியவர், சிறியவர் என்ற இரு பக்கத்தினருக்குமே பங்கிருக்கிறது. ஆர்வம், சாதிக்கும் வெறி, துணிச்சல் எல்லாம் இளம் தலைமுறையினருக்கு அதிகம் உண்டென்பதில் என்பதில் சந்தேகம் இல்லை. அதே நேரத்தில், அனுபவமும் ஞானமும் பெரியவர்களுக்கு அதிகம் உண்டு என்பதையும் மறுக்க முடியாது. ஆக, வெவ்வேறு பலங்கள் கொண்ட இரு சாராருமே இணைந்து செயற்பட்டால் அதிக நன்மை உண்டு.

இருசாராருமே ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட்டு, நல்லவற்றை மற்றவர்களிடமிருந்து கிரகித்துக் கொள்ளும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளவேண்டும். ஏற்படும் விரிசலுக் குக் காரணம் சொல்லாமல், பாலம் அமைக்க வழிகள் கண்டுபிடிப்பது தான் சரியான வழி. – என்கிறார் உளவள ஆலோசகர் றினோஸ் ஹனீபா.

தலைமுறை இடைவெளி என்பது புலத்தில் ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தைவிட புலம்பெயர் தேசத்தில் ஏற்படுத்திருக்கும் தாக்கமும் பாதிப்பும்தான் அதிகம் எனலாம். “திண்ணை” என்ற இணையத்தில் இவ்வாறு சொல்லப்படுகிறது.

தலைமுறை இடைவெளி என்பது மனிதர்கள் மத்தியில் எப்போதும் காணப்படுவதொன்றாகும். ஏனெனில் பெற்றோரது சிந்தனைப் போக்குக்கும் பிள்ளைகளது சிந்தனைப் போக்குக்கும் இடையே எப்போதும் மாறுபாடுகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன.அதுவும் மூத்தோருக்கும் இளையோருக்கும இடையே நாகரிகத்திலும், தொழில்நுட்பத்திலும் சிந்தனைப் போக்கிலும் உலகம் விரைவாக மாறுதலடைவது இதற்கு அடிப்படையான காரணமாகும். சொந்த நாட்டில் வாழும் போது ஒவ்வொரு சந்ததியைச் சோந்தவரும் அடுத்த சந்ததி பற்றிக் குறைப்பட்ட போதும் அது மிகப் பெரிய விஷயமாக இருக்கவில்லை. ஆனால் புலம்பெயர்ந்து வாழ ஆரம் பித்த பின்னர் பெற்றோருக்கும் அவர்களுக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் இடையில் உள்ள இடைவெளி அதிகரித்து விட்டிருப்பது போல தெரிகிறது. இதற்கு நிறையவே காரணங்கள் உள்ளன.

ஒவ்வொரு தலைமுறைக்கும் அவர்களுக்கென அவர்கள் வாழும் காலத்திற்கு ஏற்ற நாகரிகம், அரசியல் தொழில்நுட்பம் எல்லாவற்றிற்கும் மேலாக வாழ்வு பற்றிய கருத்து உள்ளது. அதனால் தலைமுறைகளிடையே சிந்தனைப் போக்கு செயற்பாடு என்பன வேறுபட்டன. ஆயினும் ஒரே காலத்தில் வாழும் மூன்று தலைமுறையினரிடையே அதாவது பெற்றோர் அவர்களது பிள்ளைகள் பின் அவர்களது பிள்ளைகள் ஆகியோருக்கு இடையில் ஒருவித பந்தம் ஏற்படாது போவதில்லை என்பதையும் நாம் காணலாம். மனித வரலாற்றில் ஒவ்வொரு தலைமுறையும் ஏதோ ஒரு வகையில் தம்மை அடையாளப்படுத்த முயன்றுள்ளது.

இன்றைய பிள்ளைகள் நினைப்பது போல முந்திய சந்ததியினர் வேற்றுக் கிரகத்திலிருந்து வந்தவர்களல்லர். பிள்ளைகள் தமது பெற்றோர் பேரர்களிடமிருந்து வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றியும் வாழ்க்கையின் அர்த்தம் பற்றியும் அறிந்து கொள்ளும் அதே வேளையில் பெற்றோர் பிள்ளைகளிடமிருந்து புதிய விஷயங்கள் பற்றியும் அறிந்து கொள்வதே ஆரோக்கியமானதாகும். நாம் கடந்த காலத்துடன் தொடர்புறும் அதே நேரத்தில் எதிர்காலத்துடனும் தொடர்புறுதல் மிக முக்கியமானதாகும். •

# இந்தவார ராசிபலன் 04.06.2023 - 10.06.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - வைகாசி 21
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 9.00 - 10.00 திதி : பௌர்ணமி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

காரியங்கள் சிலவற்றை சிந்தித்துச் செய்து சிறந்த பலனை அடைவீர்கள். முக்கியமான வேலை ஒன்றை முடிப்பதற்காக தீவிரமாக பணியாற்றுவீர்கள். உயர் அதிகாரிகளின் ஆதரவோடு அலுவலகத்தில் சில சலுகைகளை பெறுவீர்கள். கூட்டுத்தொழில் வியாபாரம் சுமாராக நடந்தாலும், வழக்கமான லாபம் கிடைப்பதில் சிரமம் இருக்காது. பணப் பொறுப்பில் உள்ளவர்கர்ளை அடிக்கடி கண்காணிப்பது அவசியம்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

முன்னேற்றமான பலன்களை அடைவதற்கு, செய்யும் செயல்களில் அதிக முயற்சிகளை மேற்கொள்வீர்கள். சில கா ரியங்களில் வெற்றிபெற சிறிது மதமாகக் கூடும். தன வரவுகள் திட்டமிட்டபடி கிடைத்தாலும் செலவினங்கள்எதிர்பாராதவாறு வந்துசேரும். எதிர்பார்த்த முக்கிய தகவல் கிடை த்து மகிழ்ச்சியளிக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரியின் விருப்பப்படி அவசியமான வேலையை விரைவாகச் செய்து கொடுத்துப் பாராட்டுப் பெறுவீர்கள். சொந்தத் தொழிலில் வேலைப் பளு அதிகரிக்கும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

திட்டமிட்டு செயலாற்றுவதால் வெற்றியைப் பெறுவீர்கள். தக்க நபர்கள் இல்லாத காரணத்தால், சில காரியங்களில் காத்திருக்க நேரலாம். வரவேண்டிய பணம் சிறிது தாமதத்துடன் வந்துசேரும். வெளியூர் பயணங்களுக்கு குடும்பத்துடன் செல்லும் நிலை உருவாகலாம். திடீர் செலவுகள் ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சிலருக்கு அலுவலகத்தில் வரவேண்டிய கடன் தொகை கைக்கு வந்து சேரலாம். தேவையில்லாத பேச்சுகளால் சக நண்பர்களிடத்தில் மனவேறுபாடு உண்டாகலாம்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

செய்யும் காரியங்கள் சிலவற்றில் சிறப்பான முயற்சியுடன் செயல்பட்டு முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். மிகவும் அவசியமான காரியங்களை, கவனத்துடனும், நிதானத்துடனும் செய்வது நல்லது. சிலருக்கு அலுவ லகத்தில் அதிகப் பொறுப்புள்ள பணிகள் கிடைக்கும். சொந்தத் தொழில் செய்பவர்கள், வாடிக்கையாளரின் அவசியமான வேலையை விரைந்து கொடுக்க நேரிடும். அவர் மூலம் தொழிலில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படக்கூடும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

உற்சாகத்துடன் வேலைகளில் ஈடுபட்டு வெற்றிகரமான பலன்களைப் பெறுவீர்கள். நண்பர்களின் ஆதரவு உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். பணம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்கள், சொந்தத் தொழிலில் அதிக லாபமுள்ள பணிகள் வந்து சேரும். குறைந்த காலத்தில் பணி செய்து கூடுதல் வருமானத்தைப் பெறுவீர்கள்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

உங்கள் முயற்சிகளில் சிறு சிறு தடைகள் இருந்தாலும், பல காரியங்களில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். ஆவலுடன் எதிர்பார்த்த செயல் ஒன்று வெற்றிகரமாக அமையும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்கள் செயல்களில் குறைகளை காண்பர் என்பதால், பணிகளில் கவனம் செலுத்துங்கள். எதிர்பார்க்கும் காரியங்கள் தள்ளிப் போகலாம். சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். ஓய்வின்றி செயல்படுவதால், உடலில் களைப்பு உண்டாகக்கூடும். பண வரவுகள் தேவைக்குத் தக்கபடி கிடைக்கும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

உற்சாகத்துடன், அவசியமான செயல்களில் முயன்று வெற்றிகரமான பலன்களைப் பெறுவீர்கள். பணம் கொடுக்கல், வாங்கல்களிலும், காசோலைகளில் கையெழுத்து இடும் போதும் கூடுதல் கவனத்தோடு இல்லாவிட்டால் பிரச்சினைகளைச் சந்திக்க நேரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்குப் புதிய பதவிகள் ஏற்படக்கூடும். அதிக வருமானமுள்ள வேலைகளும் கிடைக்கும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் எதிர்பார்க்கும் லாபம் பெறக்கூடும்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

செய்யும் செயல்கள் சிலவற்றில் சிறப்பான வெற்றி கிடைக்கும். சில செயல்களில் அதிக முயற்சிகள் தேவைப்படலாம். பணவரவுகள் சிறிது தாமதித்தாலும் குறையின்றி கைகளுக்குக் கிடைக்கும். சொந்த பந்தங்களுக்குள் ஏற்படும் சிக்கலைத் தீர்த்து வைக்கும் முயற்சியில் இறங்குவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்குப் பொறுப்புகள் அதிகமாகும். சொந்தத் தொழில் புரிபவர்கள் புதிய வாடிக்கையாளர் பணியைச் செய்து முடிக்க விரைந்து செயல்படுவர்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

எடுத்த காரியங்களில் முன்னேற்றமான பலன்களைப் பெறுவீர்கள். வெள்ளிக்கிழமை அன்று சந்திராஷ்டமம் உள்ளதால் சில செயல்கள் எதிர்பார்க்கும் திருப்தியைத் தராமல் போகக்கூடும். உத்தியோகத்தில் எதிர்பார்க்கும் பண உதவிகள் கிடைக்கும். சகப் பணியாளர்களின் குடும்ப விஷயங்களில் தலையிடாமல் இருப்பது அவசியம். சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு, வாடிக்கையாளர்கள் மூலம் உதவிகள் ஏற்படலாம்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

சனிக்கிழமை முதல் திங்கள் காலை 7.38 மணி வரை சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் எடுத்த காரியங்கள் சிலவற்றில் மட்டுமே வெற்றி காண இயலும். காரியங்களில் வெற்றியடைய தக்க நபர்களின் உதவியை நாடுவீர்கள். வரவேண்டிய திட்டமிட்ட வருமானமும் சிறிது தாமதத்திற்குப் பிறகு வந்து சேரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு வேலையில் மாற்றங்கள் ஏற்படக்கூடும்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அலுவலகத்தில் செல்வாக்கு அதிகமாகும். சிலர் பதவி உயர்வும், சம்பள உயர்வும் பெறக்கூடும். சக ஊழியர்களின் ஆதரவு இருக்கும். சிலருக்கு அரசாங்கம் மூலம் பண உதவிகள் கிடைக்கும் நிலை ஏற்படலாம். கூட்டுத் தொழில் செய்பவர்கள் பணியாளர்களின் ஒத்துழைப்பு மூலம் வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பர். குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை காணப்படும். வேலைக்குப் போகும் பெண்களுக்கு பொருள் வரவு ஏற்படக் கூடும்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

கொடுக்கல் வாங்கலில் மிகுந்த கவனம் தேவை. எதிர்பார்க்கும் தனவரவுகள் திட்டமிட்டபடி வந்து சேரும். பிரியமானவர்களுடன் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும். உத்தியோகத்தில் பதவி உயர்வுக்காக எடுத்த முயற்சிகள் வெற்றியாகும். விரும்பிய இடத்துக்கு சம்பள உயர்வுடன் இடமாற்றம் ஏற்படும். சொந்தத் தொழில் செய்பவர்கள், தொழில் நுட்பம் அறிந்த உதவியாளர் ஒருவரை பணியமர்த்தத் திட்டமிடுவார்கள். கூட்டு வியாபாரம் செய்பவர்கள் வாடிக்கையாளர்களின் திருப்தியைப் பெறுவர். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை உருவாகும்.

# 2048இல் தேசத்தை கட்டியெழுப்பும் ரணிலின் திட்டம்:




## தீவிரமாகவும் நேர்மையாகவும் முன்வைக்கிறார்

வணக்கம். கடந்த சில காலமாக இந்தியாவில் நடக்கும் முக்கிய நிகழ்வுகள் குறித்து உரையாடி வந்ததில் உங்கள் நாட்டு விவகாரங்கள் குறித்த என் கருத்துகளைப் பகிராமல் இருந்துவந்தேன். இப்போது, என் கள்ளத் தோணியில் ஏறி, உங்களின் அழகிய சிறிய தீவுக்கு வர என்னை அனுமதியுங்கள். யாழ் - சென்னை விமானச் சேவை இருக்கும் போது எதற்குக் கள்ளத் தோணி? ஆம். மறந்தே போனேன். ‘அலயன்ஸ் எயர்’ நிறுவனம் யாழ் - சென்னை - யாழ் விமான சேவைக் கட்டணத்தை ஜூன் 1 முதல், 59,000 இலங்கை ரூபாய்களாகக் குறைத்திருப்பதாக நண்பர் ஒருவர் கூறினார்.

அலயன்ஸ் எயர் நிறுவனத்தை நடத்தும் நிர்வாகிகளான இந்திய தியமைச்சகமும் வெளியுறவுத் துறை அமைச்சகமும் ‘ஈழநாடு’ பத்திரிகையை வாசிக்கிறார்கள் என்பது குறித்து எனக்கு மகிழ்ச்சி. இரண்டு வாரங்களுக்கு முன்னர், என் ‘ஈழநாடு’ கட்டுரையில் இதன் அதிக கட்டணம் குறித்தும், வட இலங்கைக்கும் தாயகமாம் தமிழகத்துக்கும் இடையிலான போக்குவரத்துக்கு இந்த விமானச் சேவை மிகவும் முக்கியம் என்றும், இதன் கட்டணத்தைக் குறைக்கக் கோரியும் நான் எழுதியிருந்தேன். இந்திய அரசுக்குச் சொந்தமான அலயன்ஸ் ஏர் இதற்காக மானியம் வழங்குவது பொருளாதார இழப்பாகப் பார்க்கப்படாமல், இந்தியாவின் பிராந்திய நலன்களை ஒருங்கிணைக்கும் ஒரு நல்ல உத்தியாகப் பார்க்கப்படவேண்டும் என்று என் வாதத்தை முன் வைத்திருந்தேன். இன்னும்கூட இக் கட்டணம் குறைக்கப்படவேண்டும் என்பது இப்போதைய என் கோரிக்கை. யாழ். - சென்னை சேவை, இம் மாத நடுப்பகுதியிலிருந்து தினசரி சேவையாக உயர்த்தப்படவிருக்கும் செய்தியும் வெளியாகியிருக்கிறது.

என் கள்ளத் தோணித் திட்டத்தைக் கைவிட்டு, யாழ்ப்பாணத்துக்கு அலயன்ஸ் ஏர் விமானத்தைப் பிடிக்கிறேன். இலங்கையின் பொருளாதாரத்தையும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த, தனது சிறப்புத் திட்டத்தை விளக்கி, இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜூன் 1 அன்று, நாட்டிற்கு ஒரு சிறப்பு அறிக்கை விடுத்துள்ளது குறித்துத்தான் இப்போது நாடு முழுவதும் பேசுபொருளாகியிருக்கக்கூடும். 2048க்குள் இலங்கையை வளர்ந்த நாடாகத் தரமுயர்த்த முனைந்துள்ளதாகவும், சென்ற ஆண்டு இருந்ததுபோன்ற மோசமான நிலைக்கு நாட்டைக் கொண்டுசெல்ல யாரையும் அனுமதிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ச குடும்பத்திடமிருந்து ஆட்சியைப் பெற்றபோது நாட்டில் நிலவிய பதற்றமான சூழலை நினைவுகூர்ந்த ரணில், பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்சி பெற அரசு எடுத்த கடும் முடிவுகளை எதிர்கொண்ட மக்களின் ‘கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு உணர்வு’ குறித்துப் பேசினார். “நமது கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு உணர்வின் பலன்களைத் தற்போது நாம் அனுபவிக்கிறோம். 70 சதவிகிதத்தைத் தொட்டிருந்த பண வீக்கம், தற்போது 25.2 சதவிகிதமாகக் குறைந்து, நமது அன்றாட வாழ்வின் பாரத்தை இலகுவாக்கியுள்ளது. பொருளாதாரத்தில் நாம் பெற்றுள்ள முன்னேற்றத்தால் இலங்கையின் மக்கள் அனைவரும் ஒரு நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர்” என்றார் அவர்.

முதல் பார்வையில், விரைவான வாசிப்பில், ரணிலின் அறிக்கை வெற்று முழக்கமாகவே தோன்றியது - குறிப்பாக, அரசு எடுத்த நேர்மறை முடிவுகள் பற்றி அவர் தொடர்ந்து குறிப்பிட்டதும் “அது ஒரு குற்றமா?”, “அது தேச விரோதமா?”, “அது நாட்டை விற்பதாகுமா?” என்ற தொடர் கேள்விகளும். தனது அரசு, சில வெளிநாட்டு சக்திகளுக்கு - குறிப்பாக, சீனா மற்றும் இந்தியாவிற்குத் தடையற்ற அணுகலை வழங்கியுள்ளதாக எழுந்த விமர்சனங்களால் அவர் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்பது இதில் தெளிவாகத் தெரிகிறது. 2017இல் அம்பாந்தோட்டை துறைமுகத்தைச் சீனாவுக்கு எழுதிக்கொடுத்தது ரணில்தான் என்றாலும், உண்மையில் இவரைக் காட்டிலும் இவருக்கு முந்தைய ஆட்சியாளர்களான ராஜபக்ச குடும்பமும் மைத்திரியும்தான் இத்தகைய பொருளாதாரச் சரிவிற்குப் பொறுப்பேற்கவேண்டும்.

இந்த உறுதியான திட்டத்தை வகுக்கும்போது, மே 2009இல் ஆயிரக்கணக்கான அப்பாவிகளின் படுகொலையுடன் முடிவுக்கு வந்த 26 ஆண்டு கால ஈழப் போரில் அதிகம் பாதிக்கப்பட்ட வட, கிழக்கு மாகாணத் தமிழர்கள் மற்றும் இஸ்லாமியர்களின் அத்தியாவசிய தேவைகளைக் கருத்தில்கொள்ள ரணில் தவறிவிட்டார். சிறப்புக் கவனம் தேவைப்படும் மண்டலங்கள் குறித்த எந்தக் குறிப்பும் இன்றி, ஒட்டுமொத்த நாட்டுக்குமான



திட்டமாகவே இது தோன்றுகிறது. சிங்கள மேலாதிக்கத்தை எதிர்க்கக்கூடிய ஒரு வலுவான ஒருங்கிணைந்த முன்னணியை உருவாக்கத் தவறிய தமிழ்த் தலைவர்கள் தாம் ரணிலின் இந்த மறதிக்குப் பொறுப்பாவார்கள்.

பொருளாதார வீழ்ச்சி மற்றும் அதைத் தொடர்ந்த ஆட்சி மாற்றத்தை, பாராட்டத் தகுந்த அளவுக்குச் சிறப்பாகக் கையாண்ட, அனுபவமும் விவேகமுமுள்ள நிர்வாகியான ரணில், வரும் காலத்தில் இந்த வட, கிழக்கு மாகாணங்களுக்காகச் சிறப்புக் கவனம் செலுத்த முயற்சி எடுப்பார் என்று நான் நம்புகிறேன். அதை எதிர்பார்க்கிறேன்.

நான் முன்பே கூறியதுபோல், விரைவான வாசிப்பில், ரணிலின் இந்தத் திட்ட அறிக்கை வாசகரை ஊக்கமிழக்கவும், ஏமாற்றமடையவும் செய்யக்கூடும். முதலில் நானும் அப்படித்தான் உணர்ந்தேன். ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து இந்தியா விடுதலை பெற்ற 75 ஆண்டு நிறைவு சுதந்தர தின விழா உரையில் எங்கள் பிரதமர் நரேந்திர மோடி, “அடுத்த 25 ஆண்டுகளில்” நாட்டைக் காலனித்துவ மனப்பான்மையிலிருந்து மீட்டு, ஒரு வளர்ந்த நாடாக மாற்ற, தான் உறுதி பூண்டிருப்பதாக டில்லி செங்கோட்டையில் முழங்கியது எனக்கு இங்கு நினைவு வருகிறது. ரணிலின் 2048 என்ற கெடுவும் அதே 25 ஆண்டுகளைத்தான் கணக்கிடுகிறது.

அதிபர் ரணிலின் அறிக்கையை மேலோட்டமாகப் படித்தபின் சுயநலமாகச் சிந்தித்தால் தோன்றக்கூடியது, “அட, அப்போது எனக்கு 90 வயதுக்கும் மேலாகியிருக்கும், நான் உயிருடன்கூட இருக்க மாட்டேன். இதெல்லாம் வெற்று முழக்கம்” என்பதுதான். உண்மையில், நான் அப்படிக் கருதவில்லை. இந்த அறிக்கை வரைவுக்குப் பின்னால் மிகுந்த கடின உழைப்பு இருப்பதை நான் காண்கிறேன். இதில் குறிப்பிடப்பட்டிருக்கும் அர்ப்பணிப்பு உணர்வுக்கு, வரும் இலங்கை அரசுகள் மதிப்பளித்துச் செயலாற்றும் என்று நான் நம்புகிறேன். அரசு என்று குறிப்பிடாமல் அரசுகள் என்று நான் குறிப்பிட்டுள்ளேன். காரணம், இத்தனை ஆண்டுகளாக இலங்கையை ஆட்டிப்படைத்து வந்துள்ள அரசியல் ஸ்திரமற்ற தன்மையை நான்

## ஈழப் போர் தொடர்பிலான ரணிலின் மறதிக்கு தமிழ் அரசியல்வாதிகள் பொறுப்பானவர்கள்!

கருத்தில் கொண்டுள்ளேன். பாராளுமன்றத்தில் ராஜபக்ச குடும்பத்தையும், நிதியுதவிக்கு சர்வதேச செலாவணி நிதியம் (ஐ எம் எப்), உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி ஆகிய அமைப்புகளையும், இந்தியா, சீனா, ஜப்பான், பாரிஸ் க்ளப் மற்றும் பங்களாதேஷைக்கூட நம்பித்தான் 74 வயது ரணில் நாட்டை ஆள்கிறார் என்பதை நாம் அறிவோம்.

ரணில் நீடிக்க, இந்த அத்தனை ஆதரவும் போல, நாடு முழுவதிலிருக்கும் மக்களின் ஆதரவும் அவசியம். அப்போதுதான், இந்த வாக்குறுதியை நிறைவேற்றி, அரசியல் ரீதியாகத் தன்னை நிலை நிறுத்தி, ஊழலை ஒழிக்க ஒரு வழிமுறையையும் கண்டறிய முடியும். “ஒழுங்குமுறை, கொள்முதல் மற்றும் அரசியல் உட்பட அனைத்துத் துறைகளிலும் ஊழலை எதிர்த்துப் போராட ஒரு சிறப்பு பணிக்குழு நிறுவப்பட்டுள்ளது. டிஜிட்டல் மயமாக்கல் போன்ற நவீன உத்திகள் மூலம் பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் அரசு வழிமுறையின் மூலம் ஊழலுக்கு எதிரான நடைமுறைகளை செயல்படுத்த நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்” என்ற அவரது வாக்குறுதி என்னை மிகவும் கவர்ந்தது. நாட்டைக் கட்டமைப்பதில் ‘நான்கு தூண்கள்’ குறித்த ரணிலின் அறிக்கையை நீங்கள் அனைவரும் படித்திருப்பீர்கள். சிலர் அதைப் புறந்தள்ளியிருக்கலாம், சிலர் அதைப் பரிகசித்திருக்கலாம். அந்த அறிக்கையை முழுவதுமாக, ஆழ்ந்து படித்து, அதைப் பத்திரமாக ஓரிடத்தில் பாதுகாத்து வைத்து, ரணிலுக்கு மட்டுமல்லாமல் அவரது படைத் தளபதிகள் அனைவருக்கும் அவருக்குப் பிறகு வரும் ஆட்சியாளர்களுக்கும்கூட, வரும் ஆண்டுகளில், இந்தக் கனவுகளை நினைவுபடுத்துமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன. பல்கலைக்கழக மாணவர்கள், பேராசிரியர்கள் மட்டுமல்லாமல், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், கணக்காளர்கள், இல்லத்தரசிகள் மற்றும் கல்விகற்ற அனைவரும்கூட, இதைப் பாதுகாத்து வைத்து, அரசின் உண்மையான செயல்பாட்டுடன் இதை ஒப்பிட்டு, மக்களின் எதிர்வினைகளையும் எடைபோடுவது நல்லது.

இது, செயல்திறனுக்கான வாக்குறுதி. செயல்திறனுக்கான மதிப்பீடு உங்கள் கையில் இருக்கவேண்டும். அவ்வப்போது மதிப்பீடு செய்வது, கேள்விகள் எழுப்புவது, பாராட்டுவது, விமர்சனம் செய்வது அனைத்தும் உங்கள் பொறுப்பு. இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது ரணிலின் கையில் மட்டும் இல்லை. மக்களான நீங்கள், உங்கள் மக்கள் அமைப்புகள் - தவிர, அரசியல்வாதிகள், பொது வாழ்வில் ஈடுபட்டவர்கள் - என அனைவரும் இந்த மிஷன் 2048 திட்டத்தில் ஈடுபடவேண்டும். இது மிக நீண்ட காலத் திட்டம் என்று நம்பிக்கை இழக்க வேண்டாம். நம் வாழ்நாளில் நடக்கப்போவதில்லை என்று சோர்வடையவேண்டாம். அரசாங்கங்கள் தற்காலிகமாகவோ ஓரிரண்டு வருடங்களுக்காகவோ வளர்ச்சித் திட்டங்களை வகுப்பதில்லை. ஆண்டாண்டுக்கும் பலனளிக்கும் உத்திகளையும் வழிமுறைகளையும் அவர்கள் வகுக்கிறார்கள். சீனா அடுத்த 50 ஆண்டுகளுக்கான திட்ட வரைவைத் தயார் செய்துள்ளதாக நான் படித்துள்ளேன். எனினும், கம்யூனிஸ சீனாவை நாம் ஓர் உதாரணமாகக்கொள்ளத் தேவையில்லை.

ரணிலின் இந்த ‘தேசத்தைக் கட்டியெழுப்பும்’ திட்டத்தின் செயல்பாடுகளை வெளிப்படையாகப் பொது மக்கள் எடைபோடும் ‘ஓப்பன் டே’ அம்சமும் பொதுமக்களிடையிலிருந்து ‘துறை நிபுணர்களை’ ஒன்றிணைக்கும் ‘பரிசோதனைக்கூட வழிமுறை’யும் அமைச்சர்கள், அதிகாரிகள், தனியார் துறையின் முக்கிய பிரதிநிதிகள் ஒருங்கிணைந்து குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் செயலாற்றி, இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் மீட்சிக்கும் வேகமளிக்கும் வாய்ப்பும், இவற்றின் மூலம் தொழில் உற்பத்தி, ஏற்றுமதி, வேலை வாய்ப்பு உருவாக்கம் போன்றவை மேம்பாடு அடையக்கூடும் என்பதும்தான் பொதுமக்களின் - குறிப்பாக, கற்றறிந்த சமூகத்தினரின் ஈடுபாட்டை நான் கோரக் காரணங்கள்.

எனது இந்தக் கட்டுரை ஜனாதிபதி ரணிலுக்கான விளம்பரமாக இருக்கவேண்டும் என்று நான் நினைக்கவில்லை. எனினும், கொடுக்கப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் ஒரு தலைமுறையினர் மிகவும் மூப்படைந்தோ இறந்தோகூடப் போய்விடக்கூடும் என்றாலும், அவர் தனது மிஷன் 2048 என்ற திட்டத்தை மிகவும் தீவிரமாகவும் நேர்மையாகவும் முன்வைக்கிறார் என்ற இந்த நம்பிக்கை விதையை விதைப்பது எனது கடமை எனக் கருதுகிறேன். அரசியல்வாதிகளின் பொய் வாக்குறுதிகளையே கேட்டுப்பழகிய பத்திரிகையாளர்கள் பொதுவாக விமர்சனங்களையே வெளியிடுவது வழக்கம் என்றாலும், வெள்ளத்தில் சிக்கிய ஒரு சிறு எறும்பு, உயிர் பிழைக்கக் கிடைக்கும் எந்த ஒரு காய்ந்த காம்பையும் ஆதாரமாகக்கொள்ளத் துடிக்கும் மன நிலையில்தான் நான் இப்போது இருக்கிறேன்.

மாணவர்கள், ஆசிரியர்கள், கற்றறிந்த மேதாவிகள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், கணக்காளர்கள், இல்லத்தரசிகள், மூத்த குடிமக்கள் என அனைத்து அசாதாரண மனிதர்களை உள்ளடக்கிய சாமானியர்களுக்காகவே எனது இந்த ‘ஈழநாடு’ கட்டுரை. இது, அரசியல்வாதிகளுக்காக அன்று. ஏனென்றால், அதிபரின் இந்த அறிக்கையில் உள்ள நியாயத்தையும் நேர்மையையும் காண மறுத்து இதை எதிர்த்தால்தான் அவர்கள் அரசியலில் பிழைக்க முடியும். தர்க்க அறிவின்றி எதிர்ப்பதையும் ஏமாற்றுவதையுமே நாம் அரசியலில் பார்த்துப் பழகிவிட்டோம். அரசு எதைச் செய்தாலும் - இப்போதைய இந்த ரணிலின் நியாயமான அறிக்கையையும்கூட - எதிர்க்கும் அரசியல்வாதிகள், தனிப்பட்ட முறையில் அரசுடன் சுயநல பேரங்கள் நடத்தலாம். அப்படிப் பேரம் பேசிய நிகழ்வுகளையும், பல தலைவர்களையும் நாம் பார்த்திருக்கிறோம். எனவே, உங்கள் எதிர்காலத்தைச் சீரமைக்கும் பொறுப்பை நீங்களே கையில் எடுங்கள். நம் தலையெழுத்தை எழுத, மை நம்மிடம் தான் உள்ளது, நண்பர்களே!

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# குற்றச்செயல்மயமான அரசியலும் அரசியல்மயமான குற்றச்செயல்களும்



வீரகத்தி தனபாலசிங்கம்

முன்னாள் பாராளுமன்ற செயலாளர் நாயகம் சாம் விஜேசிங்க முதலில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரச சட்டவாதியாக பணியாற்றினார். செயலாளர் நாயகம் பதவி முன்னர் பாராளுமன்ற எழுதுவினைஞர் (Parliament Clerk) என்றே அழைக்கப்பட்டது.

1960 களின் நடுப்பகுதியில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து விலகி விஜேசிங்க பாராளுமன்ற எழுதுவினைஞராக பணியில் இணைந்தபோது அவரை வரவேற்ற பழம்பெரும் இடதுசாரி தலைவரும் சட்டமேதையுமான கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா, "சாம் நீங்கள் இதுவரை கிறிமினல்கள் மீது வழக்கு தொடுப்பதற்கு உங்கள் நேரத்தைச் செலவிட்டீர்கள். இனிமேல் கிறிமினல்களுடன் சேர்ந்து பணியாற்றக் கற்றுக்கொள்ளவேண்டியிருக்கும்" என்று கூறினாராம்.

பாராளுமன்றத்தில் பெரும்பாலும் படித்தவர்களும் மக்கள் சேவைக்கு தங்களை அர்ப்பணித்த கண்ணியமிகு கனவான்களும் அங்கம் வகித்ததாக கூறப்பட்ட அந்த நாட்களிலும் கூட அதன் உறுப்பினர்கள் குறித்து பொது வில் எத்தகைய எண்ணம் நிலவியது என்பதை கலாநிதி சில்வாவின் அந்த கூற்று வெளிக்காட்டுகிறது.

விஜேசிங்க பாராளுமன்ற செயலாளர் நாயகமாக 1981 வரை பதவி வகித்தார். பின்னர் அவர் பாராளுமன்ற ஆணையாளராகவும் (குறைகேள் அதிகாரி) பல வருடங்கள் பதவி வகித்தார். இறுதிக் காலங்களில் அவர் புதிதாக தெரிவான உறுப்பினர்களுக்கு பாராளுமன்ற நடைமுறைகள் குறித்து விளக்கமளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்குகளில் உரையாற்றுவதற்கு அழைக்கப்படுவது வழமையாக இருந்தது.

அத்தகைய கருத்தரங்கொன்றில் ஒரு தடவை விஜேசிங்க புதிய உறுப்பினர்களைப் பார்த்து "நீங்கள் எல்லோரும் எதற்காக பாராளுமன்றம் வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டாராம். அதற்கு அவர்கள் ஏகோபித்த குரலில் "மக்களுக்கு சேவை செய்வதற்காகவே நாம் வந்திருக்கிறோம்" என்று பதிலளித்தார்களாம். "இல்லை, இல்லை நீங்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பயன்படுத்தி பெரும் பணம் பண்ணுவதை நோக்கமாகக் கொண்டே வந்திருக்கிறீர்கள்" என்று எந்த தயக்கமும் இல்லாமல் முகத்தில் அடித்தாற்போல் விஜேசிங்க மறுத்துக்கூறினாராம். அந்த சம்பவத்தை அவரே பிறகு ஒரு நேர்காணலில் கூறியிருந்தார்.

தனது ஆட்சிக்காலத்தில் பாராளுமன்றத்தில் அடிக்கடி இடம்பெற்ற அமளிதுமளியால் பெரும் வெறுப்படைந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பாடசாலை வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு மாணவர்கள் மத்தியில் உரையாற்றியபோது "மதுவுக்கும் போதைப் பொருளுக்கும் அடிமையானவர்கள் பிறகு அவற்றைத் தயாரித்து விற்பனை செய்வதை தொழிலாகக்கொண்டு சொத்துக்களைக் குவித்து இறுதியில் பாராளுமன்றத்துக்குள்ளும் வந்துவிட்டார்கள் " என்று கூறினார்.

முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் லண்டனுக்கு மேற்கொண்ட ஒரு விஜயத்தின் போது ஐக்கிய இராச்சியம் - இலங்கை சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரவு விருந்துபசாரத்தில் கலந்துகொண்டு உரையாற்றியவேளை "பிரிட்டனில் எம்.பி. க்களை கௌரவ உறுப்பினர்கள் என்று அழைப்பதில்லை. ஆனால் அவர்களில் சிலர் கௌரவமானவர்களாக இருக்கிறார்கள். இலங்கையில் எம்.பி.க்கள் கௌரவ உறுப்பினர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆனால் அவர்களில் சிலர் கௌரவமானவர்களாக இருப்பதில்லை" என்று கூறினாராம்.

இவற்றை எல்லாம் இன்று நினைவுபடுத்துவதற்கு காரணம் அண்மையில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம் துபாய் நகரிலிருந்து தங்கத்தை கடத்திவந்தபோது பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் சுங்க திணைக்கள அதிகாரிகளிடம் பிடிபட்டு அபராதம் செலுத்திய சம்பவமும் அவரை பாராளுமன்றத்தில் இருந்து இடைநிறுத்துமாறு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவை கேட்பதற்கு பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச தலைமையில் இடம்பெற்ற சபை அலுவல்கள் குழுவின் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமுமேயாகும்.

றஹீம் விவகாரம் தொடர்பில் 20 எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கடிதம் ஒன்றையும் கையளித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகளையும் இராஜதந்திர கடவுச்சீட்டையும் விமானநிலையத்தின் அதிமுக்கிய பிரமுகர்கள் ஓய்வறையின் ஊடாக தங்கத்தைக் கடத்துவதற்கு றஹீம் தவறாக பயன்படுத்தியிருக்கிறார். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கக் கோவையையும் அவர் முற்றாக மீறியிருக்கிறார். பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக அவர்களாலேயே நிறைவேற்றப்பட்ட சட்டங்களை மீறுவது அரசாங்கத்தினதும் எதிர்க்கட்சியினதும் உறுப்பினர்கள் மீதான மக்களின் நல்லெண்ணமும் நம்பிக்கையும் சீர்குலைவதற்கு வழிவகுக்கும். இதனால் நாட்டின் சட்டங்களை பின்பற்றி நடப்பதற்கு மக்கள் மறுக்கக்கூடிய நிலைமை ஏற்படக்கூடிய ஆபத்து இருக்கிறது என்று அந்த கடிதத்தில் கூறப்பட்டிருக்கிறது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை இடைநிறுத்துவதற்கான அதிகாரம் சபாநாயகருக்கு இருக்கிறது என்று பிரதி சபாநாயகர் தலைமையில் நடந்த கூட்டத்தில் கலந்துகொண்ட முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச கூறியதாக அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியான போதிலும், றஹீமுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை எடுப்பதற்கு தனக்கு அதிகாரம் இல்லை என்று சபாநாயகர் அபேவர்தன கூறியிருக்கிறார்.





**பெரும் பணபலமும் அடியாள் பலமும் அரசியலுக்கு முக்கியமான 'தகுதியாக' விளங்கும் இன்றைய மோசமான அரசியல் கலாசாரத்தில் அரசியல் குற்றச்செயல் மயப்படுத்தப்பட்டிருக்கிறது. குற்றச்செயல் அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கிறது.**

இங்கு கவனிக்கவேண்டிய சுவாரஸ்யமான விடயம் ஒன்று இருக்கிறது. அதாவது பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டங்களை மீறினால் அவர்கள் மீதான மக்களின் நல்லெண்ணமும் நம்பிக்கையும் சீர்குலைந்துவிடும் என்பதை றஹீம் விமானநிலையத்தில் தங்கத்துடன் கையும் மெய்யுமாக பிடிபடும்வரை எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிந்திருக்கவில்லையா?

தங்கள் மீது மக்களுக்கு இன்னமும் நல்லெண்ணம் இருப்பதாக இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்களா என்பது இன்னொரு கேள்வி.

பாராளுமன்ற உறுப்பினர்கள் சகலரையும் சட்டங்களை மீறுபவர்கள் என்றோ முறைகேடுகளில் ஈடுபடுபவர்கள் என்றோ இங்கு நாம் கூற முன்வரவில்லை. ஆனால் அதிகப்பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களை பொதுவில் அரசியல்வாதிகளை நல்லொழுக்கமுடையவர்களாக மக்கள் கருதவில்லை என்பது உண்மை. அல்லாவிட்டால் "அறகலய" மக்கள் கிளர்ச்சியின்போது மொத்தம் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் வீட்டுக்குப் போகவேண்டும் என்ற முழக்கம் எழுந்திருக்காது.

அதேவேளை நேர்மையான உறுப்பினர்களும் கூட நல்லொழுக்கம் இல்லாத தங்கள் சகாக்களின் முறைகேடான நடவடிக்கைகளினால் அவமானப்படவேண்டியிருக்கிறது என்பது துரதிர்ஷ்டவசமானது. மக்கள் பொதுவில் அரசியல்வாதிகளை பழிபாவத்துக்கு அஞ்சாத ஒரு கூட்டமாகவே நோக்குகிறார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சியில் இருந்தவேளை ஒரு தடவை பாராளுமன்ற கட்டிடத்தை சூழ்ந்திருக்கும் தியவன்ன ஓயாவில் உறுப்பினர்கள் சகலரையும் தூக்கிப்போடவேண்டும் என்று எவரோ கூறியதற்கு வேடிக்கையாக பதிலளித்த அவர் "அவ்வாறு செய்வது பெரிய தவறாக இருக்கும். ஏனென்றால் களனி கங்கை முழுவதுமே மாசடைந்துவிடும்" என்று கூறியது இப்போது நினைவுக்கு வருகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கக் கோவை பற்றி றஹீம் விவகாரத்துக்கு பிறகு பெரிதாக பேசப்படுகிறது. கரு ஜெயசூரிய சபாநாயகராக இருந்த போது ஒழுக்கக்கோவை ஒன்றை வகுப்பதற்கு பெரிதும் பாடுபட்டார். 2018 மார்ச்சில் ஒழுக்கக்கோவைக்கு பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியது. ஆனால், அதே வருடம் அக்டோபரில் அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமர் பதவியில் இருந்து விக்கிரமசிங்கவை அதிரடியாக நீக்கிவிட்டு அவரின் இடத்துக்கு மகிந்த ராஜபக்சவை நியமித்ததை அடுத்து மூண்ட அரசியலமைப்பு நெருக்கடியின்போது பாராளுமன்றத்திற்குள் நடந்த படுமோசமான களேபரத்தை எவரும் மறந்திருக்கமாட்டார்கள்.

மகிந்த அமைதியாக தனது ஆசனத்தில் அமர்ந்திருந்து பார்த்துக்கொண்டிருக்க அவருக்கு ஆதரவான பாராளுமன்ற உறுப்பினர்கள் சபைக்குள் நடத்திய அட்டகாசம் இலங்கை பாராளுமன்றத்தின் வரலாற்றில் இடம்பெற்றிருக்கக்கூடிய மிகவும் கேவலமான சம்பவங்களில் ஒன்று என்பதில் சந்தேகமில்லை. அது குறித்து விபரிக்க இங்கு இடவசதி போதாது.

அந்த சம்பவம் குறித்து விசாரணை செய்த பாராளுமன் றக்குழு ஒன்று 60 உறுப்பினர்களை குழப்பங்களுக்கு பொறுப்பானவர்கள் என்று கண்டது. அந்த குழுவின் அறிக்கை பாராளுமன்ற ஒழுக்கநியதி மற்றும் சிறப்புரி மைகள் குழுவுக்கும் சமர்ப்பிக்கப்பட்டது. அது மாத்திர மல்ல, இரகசியப் பொலிசாரும் தனியான விசாரணை நடத்தியதாகக் கூறப்பட்டது. ஆனால் குழப்பத்தை விழைவித்தவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த விவகாரம் அப்படியே கைவிடப்பட்டது. அதில் சம்பந்தப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு அனேகமாக முன்னைய தேர்தலில் பெற்றதையும் விட கூடுதல் வாக்குகள் பெற்று மீண்டும் பாராளுமன்றம் வந்து கோட்டாபய ஆட்சியில் மிக முக்கியமான அமைச்சர் பதவிகளை வகித்ததையும் கண்டோம்.

இன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கக்கோவை பற்றி சபாநாயகருக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச உட்பட எதிரணி உறுப்பினர்கள் அந்த 2018 டிசம்பர் சபைக் குழப்பம் பற்றி எதுவுமே பேசுவதில்லை.

கடந்த வருடம் அக்டோபரில் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான 21 வது திருத்தத்தின் பிரகாரம் இரட்டைக்குடியுரிமை கொண்ட எவரும் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கமுடியாது. தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களில் பத்துப்பேர் இரட்டைக்குடியுரிமை கொண்டவர்கள் என்று கூறப்படுகிறது. அத்தகைய பத்துப் பேர் இருப்பதாக முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க வெளிப்படையாகவே சொன்னார். ஆனால் அவர்களில் எவருமே இதுவரையில் பதவி துறக்கவில்லை. தங்கள் கட்சிகளில் இருக்கக்கூடிய இரட்டைக்குடியுரிமை பாராளுமன்ற உறுப்பினர்களை கண்டறிந்து அவர்களை பதவிதுறக்கச் செய்வதற்கு எந்த கட்சியின் தலைவரும் கூட இதுவரையில் முன்வரவில்லை. சட்டத்தை அவர்கள் மதித்து நடக்கும் இலட்சணம் இது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இரட்டைக்குடியுரிமை கொண்டவர்களாக இருக்கிறார்களா இல்லையா என்பதை கண்டறிவது பாராளுமன்றத்தின் பொறுப்பு அல்ல என்று சபாநாயகர் கூறிய அதேவேளை அவர்களின் குடியுரிமை குறித்து விசாரணை செய்வது தங்களது பொறுப்பு அல்ல என்று கூறிய தேர்தல் ஆணைக்குழுவும் இது விடயத்தில் எவரும் நீதித்துறையையே நாடவேண்டும் என்றது.

தங்களது இரட்டைக்குடியுரிமையை சில பாராளுமன்ற உறுப்பினர்கள் இரகசியமாக வைத்திருப்பது தொடர்பில் மூண்ட சர்ச்சை குறித்து குடிவரவு, குடியகல்வு திணைக்களம் அறிக்கையொன்றை சமர்ப்பிக்கும் என்று கூறப்பட்ட போதிலும் அத்தகைய அறிக்கை எதுவும் வெளிவந்து இரட்டைக்குடியுரிமை உறுப்பினர்கள் கண்டுபிடிக்கப்பட்டு பதவிதுறக்க வைக்கப்பட்டதாக இல்லை. ஆக, பாராளுமன்றத்தில் சட்டவிரோதமாகவும் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள் என்றாகிறது. சட்டத்தின் ஆட்சியை விட அரசியல் அனுகூலத்துக்குத்தான் முக்கியத்துவம்!

டயானா கமகே ஐக்கிய இராச்சியத்தின் குடியுரிமையைக் கொண்டவர். எதிர்க்கட்சி தலைவர் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் 6 தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான அவர் அரசாங்கப் பக்கத்துக்கு மாறி இப்போது சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சராக பதவி வகிக்கிறார்.

அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதற்கு எதிராக வழக்கு ஒன்றும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. எவ்வாறோ இலங்கை இராஜதந்திர கடவுச் சீட்டைப்

(18ஆம் பக்கம் பார்க்க)

# தமிழின விரோத செயற்பாடுகளை ஊதி வளர்க்கும் அரசியல்வாதிகளின் வாரிசுகளுக்கு என்ன நிகழ்ந்தது?

**பனங்காட்டான்**

இனவாதமும் மதவாதமும் ஒன்றுடனொன்று இணைந்ததாக இப்போது இலங்கையை ஆட்சி புரிகிறது. அரசியல்வாதிகளையும் ஆட்சியாளர்களையும் பொறுத்தளவில் இவையிரண்டும் அவர்களுக்கு செல்லப்பிள்ளைகள்.

எந்தக்கட்சி பதவிக்கு வந்தாலும் சிங்களமும் பௌத்தமுமே அவர்களுக்கு இரட்டைக் கண்கள். இதனை நன்குணர்ந்த ரணில் நன்றாகவே இதற்கு தீனி போட்டு வளர்க்கிறார். தமது சொந்தக் கட்சியின் பலமில்லாத இவரது அரசியல் வாழ்வுக்கு இது அத்தியாவசிய தேவையாகவுள்ளது.

ரணிலின் அரசியல்பாணி பற்றி பல தடவை இப்பந்தியில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. ஒரு பிரச்சனையை நன்றாக வளர்த்துவிட்டு, அதனை முக்கியமற்றதாக மாற்றுவதற்கு புதிய பிரச்சனையை உருவாக்குவதே இவரது பாணி.

இலங்கையின் இனப்பிரச்சனைக்கு கடந்த பெப்ரவரி 4ம் திகதிக்கு முன்னர் தீர்வு காணப்போவதாக முன்னர் அறிவித்தவர் இவர். இப்போது அதனை இந்த வருட இறுதிக்குள் தீர்க்கப்போவதாகக் கூறி மீண்டும் பேச்சுவார்த்தை என்ற நொண்டிக் குதிரையில் ஏறியுள்ளார். இங்குதான் மதவாதம் மீளுருவாக்கப்பட் டுள்ளது. தொல்பொருள் திணைக்களம், வனபரிபாலன திணைக்களம், மகாவலி வலயம் என்பவற்றுக்கூடாக மதப்பிரச் சனையை பூதாகரமாக்கி வளர்த்து வருகிறார்.

சமகாலத்தில் அதனை தீர்த்து வைக்கும் வல்லமையும் தமக்கேயுண்டு என்பது போன்ற தோற்றப்பாட்டையும் உருவாக்கி வருகிறார். இலங்கையில் சனத்தொகையில் சிங்களவர் அதிகமானவர்கள் என்பதை வைத்து அவர்களை பெரும்பான்மையினராகக் காட்டி, அவர்களின் மொழிக்கும் மதத்துக்கும் எல்லாவற்றிலும் முன்னுரிமை வழங்குவது சிங்களத் தேசியமாகிவிட்டது. இதற்கேற்ப சகல அரச இயந்திரங்களும் முடுக்கி விடப்பட்டுள்ளன.

சிங்களம் இலங்கையில் முதன்மையானது என்ற அடிப்படையில் 1944ம் ஆண்டு சட்டசபையில் ஓர் பிரேரணை கொண்டுவரப்பட்டது. இதனை கொண்டு வந்தவர் அதன் உறுப்பினராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன. ஆங்கிலத்துக்குப் பதிலாக சிங்களத்தை அரச கரும மொழியாக்க வேண்டுமென்று இப்பிரேரணையில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக்கு பிரித்தானியர் சுதந்திரம் கொடுப்பதற்கு முன்னரே, இலங்கையின் அரச கரும மொழியாக சிங்களம் ஏற்கப்பட வேண்டுமென முதன்முதலாக முன்மொழிந்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன என்பதை வரலாறு பதிவிட்டுள்ளது. 1956ல் பிரதமராகப் பதவியேற்ற எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க சிங்களம் மட்டும் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினார். 1944ல் ஜே.ஆர். விரும்பியதை பன்னிரண்டு ஆண்டுகளின் பின்னர் பண்டாரநாயக்கா அமலாக்கினார்.

இலங்கையில் அதிகாரப் பரவலாக்கத்துடனான பிரதேச நிர்வாக முறை வேண்டுமென பிரதமர் பதவி ஏற்பதற்கு முன்னர் கருத்துரைத்த பண்டாரநாயக்க, 1956ல் பிரதமராக பதவியேற்றதும் சிங்களம் மட்டும் சட்டத்தை நிறைவேற்றி, சிங்கள மக்களின் ஏகோபித்த தலைவராக நிலைநாட்ட முயன்றார்.

அவ்வேளை வெலிமட எம்.பியாகவிருந்த கே.எம்.பி.ராஜரட்ண மிக மோசமான இனவாதத்தை நாடாளுமன்றத்தில் கக்கினார். தமிழரின் தோலில் செருப்புத் தைத்து அணியும் நாளே தமக்கான பொன்னாள் என்று இவர் உரையாற்றியபோது நாடாளுமன்றத்தில் பண்டாரநாயக்க அணி எம்.பிக்கள் கையொலி எழுப்பி வரவேற்றனர். கே.எம்.பி. ராஜரட்ண சிங்கள மொழி முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி அதன் தலைவராக இருந்தவர். சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து தமிழ் எம்.பிக்கள் சத்தியாக்கிரகம் இருந்தபோது அவர்கள்மீது தாக்குதல் நடத்திய சிங்கள குண்டர்களுக்கு தலைமை தாங்கியவர்களில் இவரும் ஒருவர்.

இவரது மனைவி குசுமா ராஜரட்ண ஊவாபறணகம தொகுதியின் எம்.பியாக இருந்தவர். தமிழின எதிர்ப்புச் செயற்பாடுகளில் கணவருக்குச் சற்றும் இளைக்காதவர் இவர். இலங்கையில் இனவெறிக் கோசங்களை முன்னெடுத்த முதலாவது பெண் அரசியல்வாதி என்று இவரைக் குறிப்பிடுவார்கள்.

தமிழின விரோத செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்ட கே.எம்.பி. ராஜரட்ணவும் அவரது மனைவியும் அடுத்தடுத்த தேர்தல்களில் தோல்வியடைந்தனர். எனினும், சிங்கள தேசம் அவரை செனட்டராக நியமித்து மதிப்பளித்தது. இந்த மதிப்பளிப்பு தமிழினத்துக்குக் காட்டப்பட்ட அபாய எச்சரிக்கை.

1981ல் யாழ்ப்பாணப் பொதுநூலகம் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசின் அமைச்சர்களது முன்னெடுப்பில் தீமூட்டி எரிக்கப்பட்டது. இதற்குத் தலைமை தாங்கியவர்கள் காமினி திசநாயக்கவும், சிறில் மத்தியுவும். இதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்த சிறில் மத்தியு 1983 யூலை மாத தமிழினப் படுகொலைகளின் பிரதானி. தமிழின சங்காரத்துக்கு பேச்சாலும் செயலாலும் தொடர்ந்து வடிவம் கொடுத்து வந்தவர்.

"யாழ்ப்பாணத் தமிழர்கள் என்ன கருதுகிறார்கள் என்பது பற்றி எனக்கு அக்கறை இல்லை. அவர்கள் மீது மேலும் அழுத்தம் கொடுத்தால் சிங்கள மக்கள் மகிழ்வர். தமிழரை பட்டினி போட்டால் சிங்கள மக்கள் சந்தோசமடைவர்" என்று 1983 யூலை 11ம் திகதி லண்டன் ரெலிகிராப் பத்திரிகைக்கு கருத்துரைத்தவர் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன. இதனைத் தொடர்ந்து வந்த வாரத்தில் 83 யூலை இனஅழிப்பு இடம்பெற்றது.

நாட்டின் சகல இன மக்களுக்கும் பொதுவானவரான ஜனாதிபதி இவ்வாறு இனத்துவேசமாக கருத்துக் கூறியதை சிறில் மத்தியு முழுமையாக ஏற்று தமிழின அழிப்பை 83 யூலையில் மேற்கொண்டார். எனினும், 1984ல் இவர்கள் இருவருக்குமிடையில் ஏற்பட்ட ஏதோ முறுகல் காரணமாக சிறில் மத்தியுவை ஜே.ஆர்.கட்சியிலிருந்து நீக்கினார். ஆனால், ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியானதும் அவர் மீண்டும் கட்சிக்குள் இணைக்கப்பட்டதும், பௌத்தத்தை பாதுகாக்க எழுக, புலி என்பவர் யார் என்று சிறில் மத்தியு இரு நூல்களை வெளியிட்டதும், அரச ஆதரவுடன் இறுதிவரை இனவாதியாகவே அவர் வாழ்ந்தார் என்பதற்கு எடுத்துக்காட்டு.

1987ல் ஜே.ஆரும் ராஜீவும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நிறைவேற்றிய நாளன்று இடம்பெற்ற படை அணிவகுப்பில் கடற்படை சிப்பாய் ஒருவர் ராஜிவ் காந்தியை தாக்க முயற்சித்தார். இந்த சிப்பாய்க்கு அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் வேட்பாளர் இடம்கொடுத்து ரணசிங்க பிரேமதாச கௌரவப்படுத்தினார். தமிழருக்கு எந்த உரிமைகளும் வழங்கப்படக்கூடாதென்பதை இதனூடாக சிங்கள தேசம் வெளிப்படுத்தியது.

1989 காலப்பகுதியில் ஜே.வி.பி.யினரும் இதே வழியைத்தான் பின்பற்றினர். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எதிர்ப்பதாகக் கூறி தமிழ் வணிகர்களையும் தமிழ் பிரமுகர்களையும் கொழும்பில் படுகொலை செய்தனர். இது அப்பட்டமாக தமிழினத்தின் மீதான அரசியல் வழித் தாக்குதலாகவே வெளிப்பட்டது.

**தமிழரின் தோலில் செருப்பு அணிய விரும்பிய கே.எம்.பி. ராஜரட்ண, தமிழரை பட்டினி போடுவதில் மகிழ்ச்சி கண்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தன, சிங்களம் மட்டும் சட்டத்தை நிறைவேற்றிய எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்க, யாழ். பொது நூலகத்துக்கு தீமூட்டி நடனமாடிய காமினி திசநாயக்க, 83 யூலை தமிழின அழிப்பின் சூத்திரதாரி சிறில் மத்தியு போன்றவர்களின் குடும்ப வாரிசுகள் எத்தனை பேர் சிங்கள தேச அரசியலில் இன்று காணப்படுகிறார்கள். இவர்களை ஏன் சிங்கள தேச மக்கள் புறக்கணித்து வருகின்றனர்?**

கோதபாய ஆட்சியிலும் இன்றைய ரணிலின் ஆட்சியிலும் தமிழின விரோத செயற்பாடுகளுக்கு தலைமை தாங்குபவராக சரத் வீரசேகர என்ற எம்.பி. அடையாளம் காணப்படுகிறார். முன்னாள் கடற்படை அதிகாரியான இவர் சிங்கள - பௌத்த மக்களின் ஏகதலைவராக தம்மை காட்டிக்கொள்ள இனவாதம் என்ற ஆயுதத்தை கையில் எடுத்துள்ளார். 1980களில் யாழ்ப்பாணத்தில் ராணுவத் தளபதிகளில் ஒருவராக இருந்த மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகரவின் சகோதரர் இவர். ஆனந்த வீரசேகர ஓய்வு பெற்ற பின்னர் பௌத்த பிக்குவாக மாறி புத்தங்கல ஆனந்த என பெயர் சூடினார்.


1944 முதல் இன்றுவரையான இனவாதமும் மதவாதமும் பேரெழுச்சி கொண்ட சில நிகழ்வுகளை இங்கு நினைவுக்கு உட்படுத்தியதற்கு முக்கிய காரணம் உண்டு.

சிங்கள மக்களுக்காக அவர்களின் காவலர்களாகவும் உரிமைக்குரல்களாகவும் தங்களை அடையாளம் காட்டி அதற்காக இனவாதத்தை புகுத்தி, தமிழினத்தை கருவறுக்க முனைந்தவர்களை - அவர்களின் வாரிசுகளை அதே சிங்கள மக்கள் இன்று எவ்வாறு நினைவில் வைத்திருக்கிறார்கள்?


ஜே.ஆர்.ஜெயவர்த்தன, கே.எம்.பி. ராஜரட்ண, எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க, காமினி திசநாயக்க, சிறில் மத்தியு போன்றவர்களின் குடும்ப வாரிசுகளுக்கு சிங்கள தேசம் எத்தகைய மதிப்பு வழங்கி அவர்களை போற்றித் துதிக்கிறது. அவர்களது சொந்தத் தொகுதி மக்களே அவர்களை மறந்தவர்களாகியுள்ளனர்.

தமிழரின் தோலில் செருப்பு அணிய விரும்பிய கே.எம்.பி. ராஜரட்ண, தமிழரை பட்டினி போடுவதில் மகிழ்ச்சி கண்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தன, சிங்களம் மட்டும் சட்டத்தை நிறைவேற்றிய எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க, யாழ். பொது நூலகத்துக்கு தீமூட்டி நடனமாடிய காமினி திசநாயக்க, 83 யூலை தமிழின அழிப்பின் சூத்திரதாரி சிறில் மத்தியு போன்றவர்களின் குடும்ப வாரிசுகள் எத்தனை பேர் சிங்கள தேச அரசியலில் இன்று காணப்படுகிறார்கள். இவர்களை ஏன் சிங்கள தேச மக்கள் புறக்கணித்து வருகின்றனர்.

இன்று முன்னையவர்கள் பாணியில் இனவாதத் தாண்டவம் புரியும் சரத் வீரசேகரவும், விமல் வீரவன்ச - உதய கம்மன்பில போன்றவர்களும் சிங்கள தேச வரலாறு கற்றுத் தந்த பாடத்தை நினைவில் கொள்வார்களா? இதனை எப்போது புரிந்துகொள்ளப் போகிறார்கள்?.


ஜே. ஆர். ஜெயவர்த்தன



கே.எம்.பி. ராஜரட்ண


பண்டாரநாயக்கா


காமினி திசநாயக்க


சிறில் மத்தியூ

# உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்பு: சவால்களும் சந்தேகங்களும்



கந்தையா அருந்தவபாலன்

இலங்கையின் பிரதான வெளிநாட்டுக் கடன் வழங்குநர்களின் கடன் மறுசீரமைப்புக்கான இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே சர்வதேச நாணய நிதியம் தனது முதற்றொகுதிக் கடனைஇலங்கைக்கு வழங்கியதை நாம் அறிவோம்.தனது வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைப்பதில்முன்னேற்றம் கண்டுள்ள இலங்கை அதற்கிணையாக தான்பெற்ற உள்நாட்டுக் கடன்களையும் மறுசீரமைக்க வேண்டுமென்பது சர்வதேச நாணய நிதியத்தின் இன்னொரு நிபந்தனை அல்லது தேவைப்படுத்தலாகும். இதனால் வரும் செப்ரம்பர் மாதத்திற்கு முன்னதாக இலங்கையரசு தனது உள்நாட்டுக் கடன்களையும் மறுசீரமைக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இலங்கையரசின் தற்போதைய உள்நாட்டுப் படுகடனின்அளவு சுமார் 36 பில்லியன் அமெரிக்க டொலருக்குச் சமமான (சுமார்15 றில்லியன்)ரூபாக்களாகும்.இத்தகைய பெருங்கடனை மறுசீரமைப்பது என்பது அரசாங்கத்துக்கு இலகுவானதொரு விடயமாக அமையப்போவதில்லை.கடனைக் கணிசமான அளவு மறுசீரமைக்க வேண்டுமெனக் கோரும் நாணய நிதியம் ஒருபக்கம், மறுசீரமைப்பதால் உள்நாட்டில் முகங்கொடுக்க வேண்டிய பொருளாதார,சமூக, அரசியல் சவால்கள் மறுபக்கமென இருதலைக் கொள்ளி எறும்பின் நிலைக்கு அரசாங்கம் இன்று தள்ளப்பட்டுள்ளது. இதனால் இலங்கை அரசியலில் இது முக்கிய பேசுபொருளாக மாறியுள்ளது. இந்நிலையில் உள்நாட்டுப் படுகடன்,அதன் மறுசீரமைப்பு, எதிர்பார்க்கப்படும் விளைவுகள் தொடர்பாக நோக்குவது பயனுள்ளதாக அமையும்.

ஆண்டுதோறும் ஏற்படும் அரச வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு மூலங்களிலிருந்து அரசாங்கம் கடன்களையும் கொடைகளையும் பெற்றுவருகிறது. இவற்றுள் உள்நாட்டில் பெறப்படும் கடன்கள் உயர்ந்த மட்டத்தில் இருந்து வருகிறது. உள்நாட்டுக் கடன்களில் பெரும்பகுதி மத்திய வங்கி மற்றும் வணிக வங்கிகள் என்பற்றை உள்ளடக்கிய வங்கித்துறையிடமிருந்தே பெறப்படுகின்றன. அத்துடன் ஊழியர் சேமநல நிதியம் (EPF),ஊழியர் நம்பிக்கை நிதியம்(ETF) போன்ற சேமிப்பு நிதியங்கள்,மற்றும் தனியாரிடமிருந்தும் பெறப்படுகிறது. இவை திறைசேரி உண்டியல்கள், முறிகள் மற்றும் வேறு பிணைப்பத்திரங்கள் போன்றவற்றினால் திரட்டப்படுகிறது. இவ்வாறு திரட்டப்பட்ட கடன்களில் மீளளிக்க வேண்டிய நிலுவையாக 2022 ஆம் ஆண்டின் இறுதியில் சுமார் 36பில்லியன் அமெரிக்க டொலருக்குச் சமமான உள்நாட்டு ரூபாக்கள் இருந்தது. இக் கடன் தொகையையே அரசாங்கம் மறுசீரமைக்க வேண்டியுள்ளது.

கடன் மறுசீரமைப்பு பின்வரும் வழிமுறைகளில் இடம்பெறலாம்.

1. கடனுக்கான முதிர்ச்சிக்காலத்தை (மீளச்செலுத்துவதற்கான தவணை) நீடித்தல்.

2.செலுத்த வேண்டிய வட்டி வீதங்களைக் குறைத்தல்.

3.பெற்ற கடனை முழுமையாக அல்லது பகுதியைத் தள்ளுபடி செய்தல். அதாவது மீளளிக்க வேண்டிய கடப்பாட்டிலிருந்து முழுமையாகவோ அன்றிப் பகுதியாகவோ விடுபடுதல்.

இம்மூன்று வழிகளைத் தனித்தோ அன்றிக் கூட்டாகவோ கையாள்வதன் மூலம் கடன் மறுசீரமைப்பை அரசாங்கம் முன்னெடுக்க முடியும்.

இங்கு பிரச்சினை இவ்வழி முறைகளைக் கையாள்வதன்று. கையாள்வதன் மூலம் ஏற்படக் கூடிய பாதிப்புகளை எவ்வாறு தடுப்பது அல்லது குறைப்பது எனபதாகும். மத்திய வங்கி,வணிக வங்கிகள், சேமிப்பு நிதியங்கள் எவ்வடிப்படையில் அரசுக்குக் கடன் கொடுக்கின்றன என்பதை அறிந்து கொண்டால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை விளங்கிக் கொள்வது இலகுவாக இருக்கும். திறைசேரி உண்டியல்கள் போன்ற அரச கடன்பத்திரங்களை மத்தியவங்கி கொள்வனவு செய்யும்போது அதன் சொத்துக்கள் அதிகரிப்பதனால் அதன் அடிப்படையில் மத்தியவங்கி தன்னிடம் இருப்பிலுள்ள நாணயத்தை அல்லது புதிய பணத்தை வெளியிட்டு அரசுக்கு வங்குகிறது. அதேபோல வணிகவங்கிகள் தமது வாடிக்கையாளர்களின் வைப்புகளில் அன்றாடக் கொடுக்கல் வாங்கல்கள் பாதிப்படையாத வகையில் மிகக் குறைந்தளவு கையிருப்பைப் பேணிக் கொண்டு மிகுதியை அரச கடன் பத்திரங்களிலும் வேறு நடவடிக்கைகளிலும் முதலிடுகின்றன.மறுபக்கத்தில் சேமிப்பு நிதி நிதிநிறுவனங்கள் தமது உறுப்பினர்களுக்கு முதிர்வின் பின் சேமிப்புடன் அச்சேமிப்புக்கான வட்டியையும் வழங்கி வருவதால் தமது உறங்கும் நிதியை வட்டி வருமானம் உழைக்கும் நோக்கில் அரச கடன் பத்திரங்களில் முதலிடுகின்றன. எனவே இந்நிறுவனங்களிடம் பெற்ற கடன் மீதான எந்தவொரு சீரமைப்பு முயற்சியும் அந்நிறுவனங்களின் தொழிற்பாடுகளில் கணிசமான பாதிப்புக்களைக் கட்டாயம் தோற்றுவிக்கும்.

அரச கடன்பத்திரங்களிலான முதலீடு உயர்ந்த மட்டப் பாதுகாப்பு, உறுதியான வருமானம்,திரவத்தன்மை போன்ற சாதக நிலைமைகளைக் கொண்டிருந்ததனால் இலங்கையிலுள்ள வணிக வங்கிகள் அரசுக்கே கூடுதலான கடன்களை வழங்கி வந்துள்ளன. இதன் காரணமாகவே தனியார் துறைக்கான வங்கிகளின் கடன் போதியதாக இருக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் காணப்பட்டு வந்தது. இதனால் கடன் தள்ளுபடி, வட்டிவீதக் குறைப்புப் போன்ற மறுசீரமைப்பு நடவடிக்கைகள் வங்கிகளைப் பலவீனப்படுத்தும் என்பதற்கப்பால் வங்கித்துறையின் முறிவுக்கும் வழிவகுக்கக் கூடும்.உண்மையில் வங்கிகள் போன்ற நிதி நிறுவனங்கள் அவற்றின்மீது வாடிக்கையாளர் கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையிலேயே தமது தொழிலைச் செய்துவருகின்றன. அந்நம்பிக்கையில் ஒரு சிறு கீறல் விழுந்தால் கூட அவை உடைந்து விழுந்துவிடும். நாடொன்றில் வங்கித்துறை முடங்குமாயின் அந்நாட்டின் சகல நடவடிக்கைகளும் முடங்கி நாடு கையறு நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும்.அவ்வாறானதொரு நிலையின் முகவுரையைத்தான் நாம் சென்ற ஆண்டின் ஆரம்பத்திலும் அதற்கு முந்திய ஆண்டின் இறுதியிலும் நாம் அனுபவித்தோம். முகவுரையே அவ்வாறாயின் உள்ளடக்கம் எவ்வாறிருக்கும் என்பதை எதிர்வு கூறுவது கடினமன்று.வங்கிகளின் கடன்மீதான மறுசீரமைப்பில் கடன்களுக்கான முதிர்ச்சிக்காலத்தை நீட்டுவதே ஒப்பீட்டு ரீதியில் குறைவான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. இம்முறையில் கூட அரசின் கடன் சுமை குறயாது. பதிலாகச் சிறிது காலம் தள்ளி வைக்கப்படும். அதேவேளை திறைசேரி உண்டியல்களின் முதிர்ச்சிக்காலத்தை ஒரு வருடத்துக்கு மேல் நீடிக்கும்போது அவை பிணை முறிகளுக்கான இயல்புகளைப் பெறுவதும் தவிர்க்க முடியாததாகிவிடும். காலம் நீள நீள அதற்கான வட்டியும் சுமையாக மாறுவதற்கான ஏது நிலை உண்டு என்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும்.மேலும் தனியார் முயற்சிகளுக்கா வங்கிக் கடன்களிலும் பாதிப்பை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளுண்டு. இதனால் ஏலவே சுருக்கமடைந்துள்ள நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேலும் பாதிப்படையக் கூடும்.




சேமிப்பு நிதியங்களின் கடன் என்பது அதன் உறுப்பினர்களின் உழைக்கும் போதான கட்டாய சேமிப்புகளாகும். எடுத்துக்காட்டாக ஊழியர் சேமநல நிதியத்தை எடுத்துக் கொண்டால் தனியார் துறை மற்றும் அரசு சார் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர் பெயரில் பணியாளராலும் தொழில் வழங்குநராலும் செலுத்தப்படும் கட்டாய சேமிப்பாகும்.இவ்வாறான சேமிப்புகளில் அரசாங்கம் கைவைப்பது என்பது அதன் தற்கொலைக்குச் சம்மாகும்.அது மிக மோசமான சமூக, அரசியல் பிரச்சினைக்கு வழிவகுக்கும். ஏலவே ராஜபக்‌ஷ ஆட்சியில் அப்போதைய நிதி அமைச்சர் பஸிலும் மத்திய வங்கி ஆளுநர் கப்ராலும் ஊழியர் சேமநல நிதியத்தில் முறைகேடு செய்ததான குற்றச்சாட்டுகளும் உண்டு. இதனால்தான் ஏற்கனவே இது தொடர்பாக எழுந்த வதந்திகளுக்கும் எதிர்கட்சிகளின் கேள்விகளுக்கும் மத்தியில் அவசரமாக அரசாங்கமும் மத்தியவங்கியும் அவ்வாறு எதுவும் நிகழாதென உறுதி வழங்கியுள்ளன. அரசாங்கம் வழங்கும் உறுதி மொழிகள் எல்லாம் அவ்வாறே பின்பற்றப்படும் என்பதற்கான எந்த உத்தரவாதமும் இல்லை என்றாலும் அடுத்த ஜனாதிபதி தேர்தல் வெற்றியைக் குறியாகக் கொண்டு காய்களை நகர்த்தி வரும் ரணில் தனக்கே குழிபறிக்கும் முயற்சியில் நிச்சயமாக ஈடுபட மாட்டார் என்பதை நூறுவீதம் நம்பமுடியும்.

கடன் மறுசீரமைப்பதில் ஒப்பீட்டு ரீதியில் குறைவான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரே அணுகுமுறை மத்திய வங்கியிடமிருந்து பெற்ற கடனை மட்டும் மறு சீரமைப்பதாகும். ஆனால் அது எவ்வளவு தூரம் சர்வதேச நாணய நிதியத்தின் எதிர்பார்ப்புகளையும் அரச செலவுகளை கட்டுப்படுத்துவதையும் பூரத்தி செய்யப் போதுமானது என்பது கேள்விக்குறியாகும்.அதைக்கூட நாட்டின் நாணயத் தளத்தில் எதிர்மறையான விளைவுகளைத் தோற்றுவிக்காத வகையில் கையாள்வது இலகுவானதொன்றாக இருக்கப் போவதில்லை.


உள்நாட்டு அரச படுகடனை மறுசீரமைப்பது தொடர்பான உலக அனுபவங்கள் மிகக் குறைவானவையாகும்.இறுதியாக 2018ஆம் ஆண்டில் பாபடோஸ் நாட்டிலும் அதன்பின் ஸாம்பியாவிலும் இவ்வணுகமுறை முன்மொழியப் பட்டுள்ளது. எனினும் எதிர்பார்த்த வெற்றிகள் இன்னும் எதிர்பார்பாகவே உள்ளன. தற்போது இலங்கையில் முயற்சிக்கப்படுகிறது. இதகூடப் பெருமளவுக்கு ஒரு பரீட்சார்த்த முயற்சியாகத்தான் இருக்கப் போகிறது. அதன் பயனை எதிர் காலமே தீர்மானிக்கும். •

# மு.கருணாநிதி விட்டுச் சென்ற அரசியல் பாரம்பரியம் என்ன?

முரளிதரன் காசிவிஸ்வநாதன்

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதியின் நூறாவது ஆண்டு இது. தனது நீண்ட அரசியல் பயணத்தில் தமிழ் அரசியல் களத்தில் அவர் விட்டுச் சென்ற முக்கியமான தாக்கம் என்ன என்பதை ஆராய்கிறது இந்தக் கட்டுரை.

இந்திய அரசியல் களத்தில் அவ்வப்போது நிகழக் கூடிய பரபரப்பான திருப்பங்களின்போது, சமூக வலை தளங்களில் அடிக்கடி எழுதப்படும் வார்த்தை, "கருணா நிதி இருந்திருந்தால் என்ன செய்திருப்பார் தெரியுமா?" என்பதுதான். அவர் மறைந்து ஐந்தாண்டுகளாகப்



போகிறது. இருந்தபோதும், தமிழக அரசியல் அரங்கில் பல தருணங்களில் திரும்பத்திரும்ப நினைவுகூரப்படு கிறார் மு. கருணாநிதி.

1938 பிப்ரவரி 27ல் காஞ்சிபுரத்தில் நடந்த முதல் இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்குப் பிறகு, இந்தி எதிர்ப்புக் குரல் மாநிலம் முழுவதும் பரவியது. திருவாரூரிலும் அதன் எதிரொலியைக் கேட்டு, அரசியல் களத்தில் இறங்கிய கருணாநிதி, 2016ஆம் ஆண்டின் இறுதியில் உடல்நலக் குறைவால் தனது செயல்பாடுகள் முடங்கும் வரை திராவிட அரசியலின் ஆணிவேராக நீடித்து நின்றார்.

கிட்டத்தட்ட முக்கால் நூற்றாண்டுக்கு மேல் நீடித்த தனது அரசியல் பயணத்தில் சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக, முதலமைச்சராக அவர் ஏற்படுத்திய தாக்கமும் எழுப்பிய உரிமைக் குரல்களும், அவர் மறைந்து பல ஆண்டுகளுக்குப் பிறகும் அவரது வெற்றிடத்தை உணர வைக்கின்றன.

எழுத்தாளர், பத்திரிகையாளர், பேச்சாளர், நாடக ஆசிரியர், திரைக்கதை எழுத்தாளர், அரசியல் தலைவர் என பல களங்களில் செயல்பட்டவர் மு. கருணாநிதி. முதலமைச்சரான பிறகு மு. கருணாநிதி நடைமுறைப் படுத்திய சமூக நலத் திட்டங்கள், உருவாக்கிய புதிய கட்டமைப்புகள், மக்களுக்கான சலுகைகள், இலவசங் கள் ஆகியவற்றைவிட அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பும் வந்த பிறகும் நடத்திய போராட்டங்களுக் காகவே எப்போதும் நினைவுகூரப்படுவார்.


1953ஆம் ஆண்டில் திருச்சிக்கு அருகில் உள்ள கல்லக்குடி என்ற கிராமத்தின் ரயில் நிலையத்தின் பெயரை டால்மியாபுரம் என்று மாற்ற மத்திய அரசு முடிவெடுத்தது. இதனை வடஇந்திய மேலாதிக்கமாகக் காட்ட ஒரு பெரிய போராட்டத்தை நடத்த முடி வெடுத்த தி.மு.க., அந்தப் போராட்டத்தின் தலைவராக மு. கருணாநிதியை அறிவித்தது. இதில் அவருக்கு ஐந்து மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

இதற்குப் பிறகு 1965ல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று, தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, ஆறு மாத கடுங்காவல் சிறை தண்டனையைப் பெற்றார். இந்த சம்பவத்தை தனது அரசியல் வாழ்க்கையில் திருப்பு முனையாகக் குறிப்பிடுகிறார் கருணாநிதி.

இதற்குப் பிறகு நெருக்கடி நிலை காலகட்டத்தில், ஒரு முதலமைச்சராக இருந்தபடி மத்திய அரசை அவர் தொடர்ந்து எதிர்த்து வந்ததும், ஜார்ஜ் பெர்னான்டஸ் உள்ளிட்ட பாதுகாப்புக் கோரி வந்த தலைவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததும் அவரது அரசு கலைக்கப் பட காரணமாக அமைந்தன. இதற்குப் பிறகு, பல சோதனைகளுக்கு நடுவில் 13 ஆண்டுகள் கட்சியை சிதறாமல் வழி நடத்தி, மீண்டும் தி.மு.க. ஆட்சியைப் பிடிக்க வழிவகுத்தார் கருணாநிதி. இந்த போராட்ட குணம்தான் கருணாநிதியின் முக்கிய அடையாளம்.

முதலமைச்சர் அண்ணா மறைந்தபோது, திராவிட இயக்கத்தையும் தாண்டிய பேரிழப்பாக அமைந்தது. இருந்தாலும், அந்த இழப்பு தெரியாதபடி ஏழைகளுக் கும் சாமானியர்களுக்கும் ஆதரவான, மதவாதத்திற்கு எதிரான அண்ணாவின் கொள்கைகளின் அடிப்படை யில் தனது கட்சியையும் ஆட்சிகளையும் வழிநடத்தி னார் மு. கருணாநிதி.

மு. கருணாநிதி செயல்படுத்திய சமூகநலத் திட்டங்களைத் தாண்டி, அவர் வேறு ஒரு முக்கியமான விஷயத்திற்காக நினைவுகூரப்பட வேண்டியவர் என்கிறார் மூத்த பத்திரிகையாளரான வாஸந்தி. "தற்போ தைய சூழலில் அவர் மிகவும் தேவைப்படுகிறார். காரணம், "மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி" என்பதை முதலில் வலியுறுத்தியவர் அவர்தான். ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே மாதிரியான கல்வி என்ற குரல்கள் ஒலிக்கும் இந்த நேரத்தில் கருணாநிதியின் மாநில சுயாட்சிக் குரல் மிக முக்கியமானது. இந்த ஒரு



விஷயத்திற்காக அவர் நிச்சயம் என்றென்றும் நினைவு கூரப்படுவார்.

கூட்டாட்சி என்பது எவ்வளவு முக்கியம் என்பதை சரியாகப் புரிந்துகொண்டவர் கருணாநிதி. தமிழ்நாட் டில் இந்தத் தத்துவம் சரியாக புரிந்துகொள்ளப்பட காரணம், அவர் போட்ட அடித்தளம்தான்" என்கிறார் வாஸந்தி.

இந்தியாவில் உண்மையான கூட்டாட்சி அமைவதில் மு. கருணாநிதி தொடர்ந்து ஆர்வம் காட்டினார். 1969ல் முதல்வராகப் பதவியேற்ற உடனேயே மத்திய - மாநில அரசுகளின் அதிகாரங்களைப் பகிர்வது குறித்து ஆராய, நீதிபதி ராஜமன்னார் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார். 1971ல் அந்தக் குழு அளித்த பரிந்துரைகள் இப்போதும் கவனிக்கத்தக்கவையாக, தற்போது இந்தியாவில் பா.ஜ.க. அல்லாத மாநிலங்கள் எதிர் கொள்ளும் நெருக்கடிகளுக்குத் தீர்வாக இருக்கின்றன.

வாஜ்பாயி பிரதமராக இருந்தபோது 2002ஆம் ஆண்டு நீதிபதி வெங்கடாச்சலையா தலைமையி லும் மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது 2010ல் நீதிபதி பூஞ்ச் தலைமையிலும் மத்திய - மாநில உறவுகள் பற்றி ஆராய குழுக்கள் அமைக் கப்பட்டன. இதன் பின்னணியில் தி.மு.கவின் அழுத்தம் இருந்தது.

மாநிலங்கள் சமமான கூட்டாளியாக கருதப்படும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றம் வேண்டும் என்பது தி.மு.கவின் கோரிக்கைகளில் ஒன்று. நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக் கையை அதிகரிக்க மத்திய அரசு யோசிப்ப தாக கூறப்படும் நிலையில் கூட்டாட்சி தொடர்பாக கருணாநிதி முன்வைத்த சில கருத்துகள், இப்போதும் கவனிக்கத்தக் கவையாக உள்ளன. 1970ல் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் பேசிய மு. கருணாநிதி, மாநிலங்களவையைப் பொறுத்தவரை எல்லா மாநிலங்களில் இருந்தும் சமமான எண்ணிக்கையில் உறுப்பினர்களை அனுப்ப வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

அம்மாதிரியான ஒரு ஏற்பாடு இந்தியாவில் தற்போது சாத்தியமில்லாத நிலையில், பல மாநிலக் கட்சிகளும் பிரதானமாக இடம்பெறக்கூடிய கூட்டணி அரசை அமைப்பதில் தி.மு.க. தொடர்ந்து ஆர்வம் காட்டியது. 80களின் இறுதியில் உருவான தேசிய முன்னணி, 1996ல் உருவான ஐக்கிய முன்னணி ஆகிய வற்றை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகித்ததன் மூலம், தனது கூட்டாட்சிக் கனவை சற்று ஆற்றிக் கொண்டார் மு. கருணாநிதி.

மாநிலங்களுக்கென தனியாகக் கொடி வேண்டும் எனப் பேசிய கருணாநிதி, அதில் முடிவெடுக்கப்படாத நிலையில், சுதந்திர தினத்தன்று முதலமைச்சர்களுக்கு கொடியேற்றும் அதிகாரம் வேண்டுமென வலியுறுத்தி னார். அதனைப் பிரதமர் இந்திரா காந்தி ஏற்றதாலேயே இப்போது இந்தியா முழுவதும் மாநில முதல்வர்கள் சுதந்திர தினத்தன்று கொடியேற்றுகின்றனர்.

திராவிட மாடல் என்ற ஆட்சி முறையை தற்போ தைய தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் முன்வைத் துப் பேசுகிறார். ஆனால், இந்த திராவிட மாடலின் பெரும் சாதனைகளாகக் குறிப்பிடப்படுபவனவற்றில் மு. கருணாநிதியின் பங்கு மிகக் கணிசமானது.

கை ரிக்ஷாக்களை ஒழித்தது, குடிசைகளில் வசிப்போருக்கு வீடுகளைக் கட்டி அளிப்பதற்காக குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கியது, அரசு நிகழ்ச்சிகளின் துவக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடச் செய்தது, பிற்படுத்தப்பட்டோருக்கென தனி அமைச்சரவையை உருவாக்கியது, நில உச்ச வரம்புச் சட்டத்தை முடிந்த அளவு செயல்படுத்தி யது, விவசாயி களுக்கு இலவச மின்சாரம், பெண்களுக்கு சொத்தில் பங்கு அளிக்கும் சட்டம், ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவி, விவசாயி கள் தங்கள் பொருட்களை விற்பனை செய்ய உழவர் சந்தைகளை அமைத்தது, எல்லா சாதியின ரும் ஒன்றாக வசிக்க சமத்துவபுரங்களை உருவாக்கி யது, மாணவர்களுக்கு இலவசப் பேருந்து போன்ற மு. கருணாநிதி அறிமுகப்படுத்திய திட்டங் களே திராவிட மாடல் ஆட்சியின் முக்கிய அம்சங்களாக அமைந்திருக்கின்றன.

மு. கருணாநிதியின் மற்றொரு முக்கிய அம்சம், மாநிலத்திற்கென ஒரு நீண்ட காலப் பார்வையை உருவாக்கியது. அந்தப் பார்வையாலேயே 1971லேயே தமிழ்நாடு முழுமையாக மின்மயமானது. இந்தப் பார்வையின் அடிப்படையிலேயே இந்திய உணவுக் கழகத்தைப் போல தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் உருவாக்கப்பட்டது. குக்கிராமங்களுக்கும் பேருந்து வசதியை ஏற்படுத்தும் நோக்கில், தனியார்



பேருந்து நிறுவனங்கள் நாட்டுடமையாக்கப்பட்டு மிகப் பெரிய போக்குவரத்துக் கழகங்கள் உருவாக்கப்பட்டன.

தகவல் தொழில்நுட்பத் துறை மிகப் பெரிய புரட்சியை ஏற்படுத்தப் போகிறதென கணித்து நாட்டி லேயே முதல் மாநிலமாக 1997ல் அதற்கென தனிக் கொள்கையை உருவாக்கினார் கருணாநிதி. இதற்கு ஏழாண்டுகளுக்குப் பிறகுதான் தேசியக் கொள்கை உரு வாக்கப்பட்டது. இதற்குப் பிறகு கட்டப்பட்ட டைடல் பார்க், முதலீடுகளை ஈர்ப்பதில் முக்கியப் பங்கு வகித் தது. தற்போது திரும்பிப் பார்க்கையில், தமிழ்நாடு அடைந்த தொழில் முன்னேற்றத்தின் குறியீடாக காட்சி யளிக்கிறது அந்தக் கட்டடம்.

மு. கருணாநிதியின் நீண்ட ஆட்சிக் காலத்தில் நிறை வேற்றப்பட்ட முன்னோடித் திட்டங்களையும் சிறப் பான கொள்கைகளையும் தொடர்ந்து பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். ஆனால், தற்போதைய சூழலில் மிக முக்கியமானதாக இருப்பது அவர் வலியுறுத்திய கூட்டாட்சித் தத்துவம்தான்.





## கார்த்தியுடன் அரவிந்த் சாமி

கார்த்தியின் புதிய படப் பணிகள் தொடங்கியுள்ளன. இந்த படத்தை 96 படத்தின் இயக்குநர் பிரேம் குமார் இயக்குகிறார்.

இந்த படத்தை நடிகர் சூர்யாவின் 2டி எண்டர்டெயின்மெண்ட் நிறுவனம் தயாரிக்கிறது. இப்போது இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க நடிகர் அரவிந்த் சாமி இணைந்துள்ளார் என கூறப்படுகிறது. விரைவில் இந்த படம் குறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும்.



## பிரபுதேவாவுடன் வேதிகா

நடன இயக்குநரும், நடிகருமான பிரபுதேவா நடித்து சமீபத்தில் வெளி வந்த எந்தத் திரைப்படமும் எதிர்பார்த்த வெற்றியை பெறவில்லை.

இந்நிலையில், அடுத்த புதிய படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

எஸ். ஜே. சீனு இயக்கும் இந்த படத்திற்கு 'பேட்ட ராப்' என்று தலைப்பு வைத் துள்ளனர். பிரபுதேவா நடித்த காதலன் படத்தில் இடம்பெற்ற பாடலை வைத்து இந்த தலைப்பை வைத்துள்ளனர். நாயகியாக வேதிகா நடிக்கிறார். காஞ்சனா 3 படத்திற்கு பின் இந்த படத்தில் இவர் நாயகியாக நடிக்கிறார்.





## படப்பிடிப்பு நிறைவு

ரஜினி நடித்துள்ள 'ஜெயிலர்' படத்தின் படப் பிடிப்பு நிறைவடைந்துள்ளதாக பட தயாரிப்பு நிறுவனமான சன் பிக்சர்ஸ் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் படம் 'ஜெயிலர்'. தமன்னா, ரம்யாகிருஷ்ணன், சிவராஜ் குமார், மோகன்லால், சுனில், ஜாக்கி ஷெராஃப், வசந்த் ரவி, யோகிபாபு, ரெடின் கிங்ஸ்லீ உள்ளிட்ட பலர் நடிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார்.

இந்தப் படம் எதிர்வரும் ஓகஸ்ட் 10ஆம் திகதி திரை யரங்குகளில் வெளியாக உள்ளது. விரைவில் படத்தின் முதல் சிங்கிள் வெளியாகும் என கூறப்படுகிறது.

## தமன்னாவின் புதிய படம்



கடந்த சில ஆண்டுக ளாக தமிழில் தமன்னாவுக்கு பட வாய்ப்புகள் இல்லாமல் இருந்த நிலையில் தற்போது ரஜினியின் ஜெயிலர் மற்றும் சுந்தர். சி இயக்கி வரும் அரண்மனை- 4 ஆகிய படங்களில் நடித்து வரு கிறார்.

அரண்மனை-4 படத்தில் விஜய் சேதுபதி நாயகனாக நடிப்பார் என்று கூறப்பட்ட நிலையில் தானே நாயக னாகி விட்டார் சுந்தர்.சி. இப்படத்தில் நாயகிகளாக ராசி கண்ணா, தமன்னா ஆகிய இருவரையும் ஒப்பந்த செய்திருக்கிறார் சுந்தர்.சி. இப்படத்தில் தமன்னாவுக்கு ஜோடியாக சந்தோஷ் பிரதாப் என்பவரை நடிக்க வைத்திருக்கிறார்.

## ரஜினிக்கும் வில்லன்



ரஜினிகாந்த் "ஜெய் பீம்" பட இயக்குநர் தா.சே.ஞான வேல் இயக்கத்தில் தனது 170ஆவது படத்தில் நடிக்கவுள் ளார்.

இந்த படத்தில் வில்லன் கதாபாத்திரத்தில் நடிக்க விக் ரம் உடன் பேச்சு நடந்தது. கணிசமான சம்பளம் தருவதாக கூறியும் அவர் நடிக்க சம்மதம் சொல்லவில்லை. இந்த நிலை யில் இப்போது இந்த படத்தில் வில்லனாக நடிக்க நடிகர் அர்ஜுன் உடன் இறுதிகட்ட பேச்சுநடக்கிறது.

சமீபகாலமாக நடிகர் அர்ஜுன் குணச்சித்ரம் மட்டு மல்லாது வில்லன் வேடங்களிலும் நடித்து வருகிறார். விஷாலின் இரும்புத்திரை படத்தில் வில்லனாக நடித் தார். தற்போது நடிகர் விஜய்யின் லியோ படத்தில் வில்லனாக நடிக்கிறார். அடுத்து ரஜினி படத்திலும் வில்லனாக நடிக்க போகிறார்.


## த்ரிஷாவுடன் இணையும் மூவர்



லோகேஷ் கனகராஜ் இயக்கத் தில் விஜய் நடித்து வரும் லியோ படத் தில் அவருக்கு நாயகியாக த்ரிஷா நடித்து வருகிறார். இதையடுத்து மகிழ்திரு மேனி இயக்கத்தில் அஜித் நடிக்கவிருக்கும் விடா முயற்சி படத்திலும் த்ரிஷா நடிக்கவுள்ளார்.

இந்த நிலையில் அடுத்தபடியாக வேல்ஸ் இன்டர்நேஷனல் தயாரிக்கும் படத்தில் கதையின் நாயகியாக த்ரிஷா நடிக்கப் போகிறார். கௌரவ் நாராயணன் இயக்கும் இந்த படத்தில் மூன்று பிரபல நாயகர்கள் சிறப்பு தோற்றத்தில் நடிக்கிறார்கள்.

**திரைப்படம் - காதர் பாட்சா என்ற முத்துராமலிங்கம்**
**இயக்கம் - முத்தையா**
**இசை - ஜிவி பிரகாஷ்குமார்**
**நடிப்பு - ஆர்யா, சித்தி இத்னானி, பிரபு**




கிராமத்துக் கதைகளாகவே தொடர்ந்து இயக்கிக் கொண்டிருப்பவர் இயக்குநர் முத்தையா. அவருடைய படங்கள் சாதிப் பெருமை பேசும் படங்களாகத்தான் அதிகம் இருக்கும். இந்தப் படத்தில் அதை சற்றே மாற்றி மத ஒற்றுமையைக் கொஞ்சம் சேர்த்து, தமிழ் திரையுலகம் பார்த்து சலித்த பழி வாங்கல் கதையாகக் கொடுத்திருக்கிறார்.

ஒரு படத்தை பார்க்க ஆரம்பித்ததுமே படம் பார்க்கும் ரசிகர்கள் அந்தக் கதைக்குள் செல்ல வேண்டும். ஆனால், எதுவுமே புரியாமல் ஒரு குழப்ப மான மனநிலையில் படத்தைப் பார்க்க ஆரம்பித்தால் அது ரசிகர்களை எந்தவிதத்திலும் ஈர்க்காது. படத்தின் கதாநாயகியான சித்தி இத்னானியிலிருந்துதான் கதை ஆரம்பமாகிறது. அவரைத் திருமணம் செய்து கொள்ளத் துடிக்கும் முறைமாமன்கள், அதனால் நடக்கும் குடும்ப சண்டை என நகர ஆரம்பிக்கும் கதை, பின்னர் எங்கெங்கோ நகர்ந்து, எப்படியோ போய், இப்படி சுற்றி, அப்படி சுற்றி ஒரு வழியாக வந்து முடிவதற்குள் நமக்கு தலையே சுற்றி விடுகிறது.

யாரின் ஆதரவும் இல்லாமல் தனியே இருக்கும் சித்தி இத்னானியை அவருடைய முறைமாமன்கள் திருமணம் செய்து கொள்ள நினைக்கிறார்கள். அவரை பெண் கேட்டு வருபவர்களைக்கூட கொலை செய்கிறார்கள் அவர்களின் குடும்பத்தினர். இந்நிலையில் சித்தி இத்னானி, சிறையில் இருக்கும் ஆர்யாவை சந்திக்கப் போய் அவரை சந்திக்காமலேயே திரும்புகிறார். பிணை பெற்று வெளியில் வரும் ஆர்யா, சித்தி ஊருக்குச் செல்கிறார். அங்கு சென்ற பின் அவருக்கு பல உண்மைகள் தெரிய வருகிறது. ஆர்யாவைக் கொல்ல சித்தி முறை மாமன்களும், வேறு சிலரும் முயற்சிக்கிறார்கள். அதன்பின் என்ன நடக்கிறது என்பதுதான் படத்தின் மீதிக் கதை.




'நான் கடவுள், அவன் இவன்' என ஒரு சில படங்களில் ஆர்யாவின் நடிப்புத் திறமை வெளிப் பட்டது. ஆனால், இந்தப் படத்தில் அவரா இவர் என ஆச்சரியப்பட வைக்கிறார். அவருடைய தோற்றமும் சரி, அவருடைய நடிப்பும் சரி சராசரிக் கும் கீழாகத்தான் உள்ளது. உணர்ச்சிகரமான வசனங்க ளைக் கூட மனப்பாடம் செய்து ஒப்பித்திருக்கிறார். சண்டைக் காட்சிகளில் மட்டும் வாங்கிய சம்பளத் துக்கு உண்மையாக இருக்க வேண்டுமென அடித்து உதைக்கிறார்.

சித்தி இத்னானி முதல் காட்சியிலேயே கிராமத்துப் பெண்தான் இவர் என நம்ப வைக்கிறார். அதன்பின் அவர் கதாபாத்திரம் மீது ஓர் அனுதாபம் வருகிறது. அவருடைய கதாபாத்திரத்தை மையப்படுத்தியே திரைக்கதையை நகர்த்தியிருந்தால் ரசித்திருக்கலாம்.

படத்தில் எண்ணற்ற துணை கதாபாத்திரங்கள். எல்லாருக்கும் ஒரு சீன்களைக் கொடுத்தாக வேண்டிய கட்டாயம். எல்லாமே தனித் தனி காட்சிகளாக நகர்ந்து போகின்றன. பிரபு கதாபாத்திரம் மட்டும் மற்ற கதாபாத் திரங்களில் தனித்து தெரிகிறது. மது சூதன ராவ், அவினாஷ், ஆடுகளம் நரேன், தமிழ், விஜய் முருகன் என படத்தில் நான்கைந்து வில்லன்கள். எல்லாருமே கிராமத்து வில்லன்கள். பாக்யராஜ் ஒரு சில காட்சிகளில் வந்து போகிறார்.

இடைவேளை வருவதற்குள் படத்தில் இருபது சண்டைக் காட்சிகள் வந்துவிட்டதோ என்ற உணர்வு. சண்டை இயக்குநர் அனல் அரசு இடைவேளை வரைக்கான இயக்குநரின் சம்பளத்தை முழுவதுமாகக் கேட்டு வாங்கிக் கொள்ளலாம். இடைவேளைக்குப் பின்னும் உச்சக்காட்சியிலும் அடிக்கடி அவருக்கான வேலைகள் அதிகம். ஜி. வி. பிரகாஷ்குமார் சண்டைக் காட்சிகளுக்கு வாசித்துத் தள்ளியிருக்கிறார். பாடல் கள் 'கறிக்குழம்பு' பாடலில் மட்டும் கொஞ்சம் வாசம் வீசுகிறது.

முத்தையா இயக்கிய படங்களில் ஏதோ ஒரு பாச உணர்வு காட்சி அந்தப் படத்தைக் கொஞ்சம் காப் பாற்றும். இந்தப் படத்தில் பல பாச உணர்வு காட்சி களை வைத்தாலும் அது படத்தைக் காப்பாற்ற வில்லை.

# இதுதான் உண்மையான போர்



ஐ.பி. எல். காய்ச்சல் முடிவடைந்து விட்டது. அடுத்து உண்மையான கிரிக்கெட் போட்டி இந்தியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் இடையே நடைபெறும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிதான். ஓவல் மைதானத்தில் வரும் 7ஆம் திகதி புதன்கிழமை நடைபெறுகிறது இந்த இறுதிப் போட்டி.

இரு அணிகளுமே முதல் டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டம் வெல்ல ஆர்வமாக துடிப்புடன் ஆடுவர். இங்கிலாந்து ஆடுகளம் என்பதால் அவுஸ்திரேலியாவுக்கு அதிக வெற்றி வாய்ப்பு என்று ரிக்கி பொண்டிங்கும் வேறு வீரர்களும் கூறுகின்றனர். ஆனால், இந்தியாவுக்கும் வாய்ப்பு என்று சொல்ல முடியாததற்கு காரணம், ரிஷப் பந்த், ஜஸ்பிரித் பும்ரா, ஸ்ரேயாஷ் ஐயர், கே. எல். ராகுல். காயம் காரணமாக இந்த டெஸ்ட் போட்டியின் இறுதியில் ஆட மாட்டார்கள். இது இந்திய அணிக்கு பெரிய பின்னடைவுதான்.

ஆனாலும் முகமது ஷமி, சிராஜ் உள்ளனர். அஸ்வின் இருக்கிறார். ஜடேஜா எப்படியும் ஆடுவார். அவுஸ்திரேலியா கடந்த 18 மாதங்களாக டெஸ்ட் அரங்கில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. பட் கம்மின்ஸ் தலைமையில் அவுஸ்திரேலியா 10 போட்டிகளில்






தோற்கவே இல்லை. வெற்றிகள்தான். பாகிஸ்தானுக்கு சென்று அங்கு மோசமான ஆடுகளத்தில் தொடரை வென்று வரலாறு படைத்தனர் அவுஸ்திரேலியர்கள்.

இலங்கைக்கு எதிரான தொடரில் காலியில் வென்றது ஆஸி. இந்தியாவுக்கு வந்து ஸ்டீவ் ஸ்மித் தலைமையில் இந்தூரில் வென்றனர். ஆனால், தொடரை இழந்தனர். அனைத்தும் குழி ஆடுகளம். இந்தியாவில் நடந்த சமீபத்திய தொடரில் இந்தியா வென்றதால் ஒரு பக்கம் அவுஸ்திரேலியாவுக்கு இந்திய

சுழல் வீரர்கள் குறித்த அச்சம் இருக்கவே செய்யும். ரிஷப் பந்த் இல்லாதது பெரிய நிம்மதியை அவர்களுக்கு அளித்திருக்கும். பட் கம்மின்ஸ், ஸ்காட் போலண்ட், ஹசில்வூட், ஸ்டார்க் பவுலிங் சேர்க்கை, நேதன் லயனுடன் இந்தியாவை படுத்தி எடுத்து விடும் என்று நம்பலாம்.

ரிக்கி பொண்டிங் சமீபத்தில், “ஆடுகளம் கொஞ்சம் அவுஸ்திரேலிய சாயலில்தான் இருக்கும். ஆகவே, அவுஸ்திரேலியாவுக்கு வெற்றி வாய்ப்பு அதிகம். இந்தியாவில் ஆடப்பட்டிருந்தால் இந்தியாவை வீழ்த்துவது கடினம். அவுஸ்திரேலியாவில் ஆடினால் அவுஸ்திரேலியாவுக்கே வாய்ப்பு அதிகம். ஆனால், இங்கிலாந்தில் ஆடப்படுவதால் இரு அணிகளுக்குமே சம வாய்ப்பு உள்ளதாகவே தெரிகிறது” என்றார்.

**போட்டி நடைபெறும் இடம், நாள் :**

ஜூன் 7-11 புதன்கிழமை - லண்டன் ஓவல் மைதானம்.

டெஸ்ட் போட்டி இலங்கை நேரப்படி மதியம் 3.30 மணிக்குத் தொடங்கும். மதிய போசனம் 5.30-6.15, தேநீர் இடைவேளை 8.15. இறுதி கட்டம் 8:30-10:30

**மேலதிக நாள் :**

இந்த உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு மேலதிக நாள் உண்டு. மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டால் அந்த நாளை ஈடுகட்ட கூடுதல் நாள் உண்டு.

போட்டி சமநிலையானால், இரு அணிகளுக்கும் கிண்ணம் பகிர்ந்தளிக்கப்படும்.

**என்ன பந்து?**

கொக்கபரா பந்துதான் என்று சில ஊடகங்கள் சொல்லி வந்தாலும் இங்கிலாந்தில் டெஸ்ட்களில் பயன் படுத்தப்படும் டியூக்ஸ் பந்துகளில்தான் டெஸ்ட் போட்டி நடைபெறும் என்று ஐ. சி. சி. அறிவித்துள்ளது.

**அவுஸ்திரேலிய அணி:**

பட் கம்மின்ஸ் (அணித்தலைவர்), ஸ்கொட் போலண்ட், அலெக்ஸ் கேரி, கமரூன் கிறீன், மார்கஸ் ஹாரிஸ், ஜோஷ் ஹசிவூட், டிராவிஸ் ஹெட், ஜோஷ் இங்கிலிஸ், உஸ்மான் கவாஜா, மோர்னஸ் லாபுசாக்னே, நாதன் லியோன், மிற்செல் மார்ஷ், டொட் முர்பி, மத் தியூ ரென்ஷா, ஸ்ரீவ் ஸ்மித் , மிற்செல் ஸ்ரார்க், டேவிட் வோர்ணர்

**இந்திய அணி :**

ரோஹித் சர்மா (அணித்தலைவர்), ஷூப்மன் கில், சேதேஷ்வர் புஜாரா, விராட் கோலி, அஜிங்க்யா ரஹானே, கே. எஸ். பாரத், ஆர். அஷ்வின், ரவீந்திர ஜடேஜா, அக்சர் படேல், ஷர்துல் தாக்கூர், முகமது ஷமி, முகமது சிராஜ், உமேஷ் யாதவ், ஜெய்தேவ் உனாட்கட், இஷான் கிஷன்.



# சோகமான முடிவு

லண்டன் ஓவல் மைதானத்தில் வரும் 7ஆம் திகதி நடைபெற விருக் கும் ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான இந்திய அணியில் ஹார்திக் பாண்ட்யா இடம்பெற்றிருக்க வேண்டும். ஹார்திக் பாண்ட்யா சகலதுறை வீரராக அணியில் சேர்க்கப்படும்போது பந்துவீச்சு, துடுப்பாட்டம் இரண்டுமே வலுவடையும்

ஹார்திக் பாண்ட்யா 2018இற்குப் பிறகு டெஸ்ட் போட்டிகளில் ஆடவில்லை. அவரின் காயங்கள் அவரை டெஸ்ட் அணியிலிருந்து விலக்கி வைக்க பிரதான காரணமாக இருந்தாலும், ஹார்திக் பாண்ட்யாவே டெஸ்ட் போட்டிகளில் அவ்வளவு ஆர்வம் காட்டுபவராகவும் தெரியவில்லை. ஐ. பி. எல் தொடரில் குஜராத் டைட்டன்ஸ் அணியின் தலைவராக தொடர்ந்து 2ஆவது இறுதிப் போட்டிக்கு அணியை அழைத்துச் சென்றதோடு அனைத்துப் போட்டிகளிலும் பந்து வீசினார், நல்ல வேகத்திலும் வீசியதைப் பார்க்க முடிந்தது.

தொடர்ந்து அவர் டெஸ்ட் போட்டிகளில் ஆடுவது பற்றி யோசிக்க வேண்டும். அவர் காயங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், அவரைப்போன்ற ஒரு சகலதுறை வீரர் வெள்ளைப்பந்து கிரிக்கெட்டில் மட்டும் ஆடுவது பயனளிக்காது.

ஹார்திக் பாண்ட்யா, இதுவரை 11 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 532 ஓட்டங்களை ஒரு சதம், 4 அரைசதங்களுடன் எடுத்துள்ளார். அதிகபட்ச ஓட்டம் 108. பந்துவீச்சில் 11 டெஸ்ட்களில் 17 விக்கெட்களைக் கைப்பற்றியுள்ளார். ஒருமுறை 28 ஓட்டங்கள் வழங்கி 5 விக்கெட்களை கைப்பற்றி அசத்தியுள்ளார்.

ஹார்திக் பாண்ட்யாவை இந்த ஒரே டெஸ்ட் போட்டிக்கு எடுத்திருக்கலாம் என்கிறார் பொண்டிங். ஹார்திக் பாண்ட்யா வேகமாக வீசுகிறார் என்பதை சுட்டிக்காட்டுகிறார். ஹார்திக் பாண்ட்யா இரு அணிகளுக்குள் வித்தியாசத்தைக் காட்டக் கூடியவர், ஆட்டத்தின் போக்கை மாற்றக்கூடியவர் என்கிறார் ரிக்கி பொண்டிங். ஆனால், இறுதிவரை இந்திய அணியில் அவர் இடம்பெறவில்லை என்பது சோகமே.

# தமிழ் நாடகத்துறையில் பிரமிக்க தக்க பாலேந்திராவின் பங்களிப்பு

## கனடா நிகழ்வில் உரை

புலம்பெயர் மடல்

“திரு பாலேந்திரா ஐம்பது வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து இயங்கி 70 நாடகங்களை பல தடவைகள் உலகின் பல பாகங்களிலும் மேடை ஏற்றி இருக்கிறார். இதற்காக மிகப்பெரிய அர்ப்பணிப்பும் உழைப்பும் தியாகமும் இருந்திருக்கும் என்பதை எங்கள் எல்லோருக்கும் விளங்கிக் கொள்ள முடியும். என்னை மிகவும் பிரமிக்க வைக்கும் விஷயம் என்னவென்றால் இந்த அர்ப்பணிப்புக்கும் தியாகத்துக்கும் உழைப்புக்கும் நாடகத்தின் மீதான தீராத காதல் எல்லாவற்றிக்கும் அப்பாற்பட்டு ஒரு மிகப்பெரிய ஆளுமை மேலாண்மை பண்பு - திட்டமிடல் பண்பு எல்லாம் கை வாய்ந்த - கை தேர்ந்த ஒருவரால் அல்லது இருவரால் பாலேந்திரா ஆனந்தராணி என்ற இருவரால் தான் 50 வருடங்களாக தொடர்ந்து செயலாற்றியிருக்க முடியும்

இந்த இரண்டு பண்புகள் நாடகத்தின் மீதான தீராத காதல் கட்டமைக்கின்ற ஒழுங்கமைக்கின்ற மேலாண்மை செய்கின்ற பண்பு ஆகிய இரண்டு பண்புகளும் ஒன்றாக வந்ததால் தான் இந்த இரண்டு பேரும் இவளவு தூரம் ஒரு பிரமிக்கத்தக்க ஆளுமைகளாக தமிழ் நாடக உலகிலே திகழ்கிறார்கள் “

கனடாவில் பாலேந்திராவின் “அரங்க கட்டுரைகள்” நூல் வெளியிடப்பட்டபோது நிகழ்வுக்கு தலைமை வகித்த நாடகர் துஷி ஞானப்பிரகாசம் தனது தலைமை உரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொரோனா காலத்துக்கு பின்னர் நூல் அறிமுகத்துக்கு மண்டபம் நிறைந்த கூட்டம் வந்திருந்தது. அன்றைய தினம் கனடாவில் 30 வருடங்களுக்கு மேலாக வெளிவரும் காலம் சஞ்சிகை ஆசிரியர் செல்வம் அவர்களின் வாழும் தமிழ் புத்தகக் கண்காட்சியும், அவரது பனி விழும் பனைவனம் நூல் அறிமுகமும் நிகழ்ந்தது. முதலில் முன்னாள் சரிநிகர் ஆசிரியர் எஸ் கே விக்னேஸ்வரன் பாலேந்திராவுடனான தனது நாடக அனுபவங்களை கோடிட்டு காட்டி நூலை அறிமுகம் செய்தார். உரைகளுக்கு இடையில் பாலேந்திரா ஆனந்தராணி ஆகியோரின் “அரங்க நினைவலைகள” நாடக ஆற்றுகை இடம் பெற்றது. அதில் யுகதர்மம் நாடகத்தில் நாற்பத்துநான்கு வருடங்களுக்கு முன்னர் முக்கிய பாத்திரமேற்று நடித்த ரவிச்சந்திரா பாஸ்கரன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். பாஸ்கரன் மத்தியகிழக்கு நாட்டில் இருந்து வந்திருந்தார்.

பாலேந்திராவின் நூலை அறிமுகம் செய்து பேசிய எழுத்தாளர், நாடக நெறியாளர் க நவம் பின்வருமாறு கூறினார்.

“இலங்கையிலும், புலம்பெயர் ஈழத்தமிழர் மத்தியிலும், நவீன அரங்கியல், இன்று காத்திரமான ஒரு நிகழ்த்து கலையாக வளர்ந்து வருகின்றமைக்கு, வழியமைத்த நாடகக் கலைஞர்களுள், மிக முக்கியமானவராக மதிக்கப்படுபவர், நண்பர் பாலேந்திரா அவர்கள். அவரது அரங்காடல் அனுபவங்களையும் நினைவுகளையும் சொல்லும் இந்த நூலில், எல்லாமாகப் 18 கட்டுரைகள் உள்ளன. ‘மேடைப் பிரச்சினைகள்’, ‘நாடகச் சர்ச்சைகள்,’ ‘பாலேந்திரா தமிழுக்கு அறிமுகப்படுத்திய சில பிறமொழி இந்திய நாடகாசிரியர்கள்,’ ’புலம்பெயர் நாடக அரங்கு: வளர்ச்சியும் பிரச்சினைகளும்’ என - நான்கு பகுதிகளாக இவை வகுக்கப்பட்டுள்ளன.



இவர் இலங்கையில் வாழ்ந்தபோது 80, 81, 82, 83களில் எழுதிய கட்டுரைகளும், இவரது புலம்பெயர் வாழ்வின்போது 98இல் எழுதிய கட்டுரைகளுமே இதில் இடம்பெற்றுள்ளன. இவையாவும் ஏற்கனவே தினகரன் பத்திரிகையில் பிரசுரமானவை. ஒரு வெகுசனப் பத்திரி கைக்கென எழுதப்பட்டமையால், இலகு மொழிநடை யில் சிக்கனமாகவும், கட்டிறுக்கமாகவும் இக்கட்டுரை கள் வந்தமைந்துள்ள போதிலும், இவரது தேடல், வாசிப்பு, மேடை அனுபவச்செறிவு என்பன இவற்றிற்கு மென்மேலும் உயிர்ப்பினைக் கொடுத்துள்ளன.

87 பக்கங்களைக் கொண்ட இந்த நூலைப் படித்து முடித்தபோது, முதலில் இரண்டு விடயங்கள் தவிர்க்க முடியாதவாறு எனது மனதில் ஆழப் பதிந்தன. ஒன்று இவரது சாதனைகள் இரண்டாவது, இவருக்கு ஏற்பட்ட சவால்கள்! பாலேந்திரா அவர்கள் 50 வருடங்களில் சுமார் 70க்கும் அதிகமான நாடகங்களைத் தயாரித்து, நெறிப்படுத்தி, மேடையேற்றியவர். இந்திரா பார்த்தசாரதியின் மழை நாடகத்தை 40 தடவைகளுக்கு மேலாக, உலகின் பல பாகங்களிலும் மேடையேற்றியவர். யுகதர்மம் நாடகத்தை இலங்கையில் மட்டும், 29 தடவைகள் மேடையேற்றியிருக்கின்றார். ஒரு பாலை வீடு, முகமில்லாத மனிதர்கள், அரையும் குறையும், துக்ளக் ஆகிய நாடகங்களைப் பலமுறை மேடையேற்றியிருக்கின்றார். புலம்பெயர்ந்த பின்னர் லண்டனில் 40க்கும் மேற்பட்ட நாடக விழாக்களையும், அவுஸ்ரேலியா, கனடா, இந்தியா, இலங்கை, நோர்வே, பிரான்ஸ், ஜேர்மனி, நெதர்லாந்து, சுவிற்சலாந்து ஆகிய நாடுகளில் இதுவரை 24 நாடக விழாக்களையும் நடத்தியிருக்கின்றார். லண்டன் தமிழ் நாடகப் பள்ளியினை நிறுவி, 25க்கும் மேற்பட்ட சிறுவர் நாடகங்களையும், இளையோர் நாடகங்களையும் அரங்கேற்றி இருக்கின்றார்.

இவரது அரங்கப் பணிக்காக இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் உள்ள அமைப்புகளால் சுமார் 10 விருதுகள் வழங்கப் பெற்றிருக்கின்றார். இலங்கையில் நவீன நாடக முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்ட தருணத்தில், பிறநாட்டு, பிறமொழி நாடகங்களுக்கான கதைவை இவரே அங்கு அகலத் திறந்துவிட்டவராக விதந்துரைக்கப்பட்டு வருக்கின்றார். இந்திரா பார்த்தசாரதி, பிரமிள், முத்துசாமி, ஞானசேகரன் போன்ற தமிழக நாடகாசிரியர்கள் முதற்கொண்டு, இந்தியாவின் ஏனைய மாநிலங்களைச் சேர்ந்த பாதல் சர்க்கார், மோகன் ராகேஷ், க்ரிஷ் கர்னாட் போன்ற சிறந்த நாடகாசிரியர்களையும், ரென்னிஸி வில்லியம்ஸ், ப்பேர்டோல் ஃப்பிறெடிக்ட், அலெக்ஸி ஆர்புசோவ், கார்ஷியா லோர்கா, அன்ரன் செக்கோவ், சாமுயூவெல் பெக்கெற் போன்ற மேற்கத்தைய நாடகாசிரியர்களையும் இலங்கைவாழ் தமிழ் நாடக ரசிகர்களுக்கு அறிமுகம்செய்து விழிப்புணர்வை ஏற்படுத்தியவரும் இவரேதான்.

இவ்வாறு இவரது சாதனைகளைச் சுருக்கமாகப் பார்த்தபோது மலைப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. ஈழத்தமிழ் நவீன நாடக உலக்குக்கு பாலேந்திரா ஆற்றிய அளப்பரிய பங்களிப்புகளுக்காக, உண்மையில் அவரை நாங்கள் மனம் திறந்து பாராட்ட வேண்டும். அதேவேளை, இத்தகைய சாதனைகளையும் பாராட்டுகளையும் அவர் சுலபமாகச் சம்பாதிக்கவில்லை “

தொடர்ந்து பேசிய நாடக விமர்சகர் ப சிறிஸ்கந்தன், பாலேந்திரா தனது முழுப் பதிவுகளையும் ஆவணமாக தொடர்ந்து நூல் வடிவில் கொண்டு வர வேண்டும் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து நூலின் சிறப்பு பிரதிகள் நாடகர் சொர்ணலிங்கம், தாய்வீடு ஆசிரியர் திலீப்குமார், பாலேந்திராவின் நாடகங்களில் பின்னணியில் இயங்கிய ஆ ஜெயக்குமார் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. வருகை தந்திருந்த பலரும் பாலேந்திராவிடமிருந்து கையொப்பமிடட நூல் பிரதிகளை வாங்கி ஒளிப்படம் எடுத்துக் கொண்டனர்.

---




**எஸ். சுகிர்தகுமார், திருக்கோவில், அம்பாறை.**

**கேள்வி:** மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்ட போது அதற்கு எதிராக குரல்கொடுத்தவர் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுத் தலைவர் ஜனக ரத்நாயக்கா. அவரை அந்தப் பதவியில் இருந்து வெளியேற்றுவதற்காக பாராளுமன்றத்தில் அரசு தீர்மானம் கொண்டு வந்தபோது அரசாங்க எம்.பி.க்கள்தான் அதற்கு ஆதரவாக வாக்களித்தார்கள். ஆனால் அதற்கு எதிராக மக்கள் தமது எதிர்ப்பை- அதாவது அவருக்கு ஆதரவான தமது மனநிலையை வெளிப்படுத்தவில்லையே ஏன்?

**வியுக்தியார்:** அது வேறு ஒன்றும் இல்லை. எல்லாப் பொருட்களும் விலை கூடுகின்றபோது மின்கட்டணமும் கூடும்தானே என்று மக்கள் நினைத்தார்களோ என்னவோ? அதுவல்ல இப்போது அதிகம் பேசப்படுவது. மனுசன் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதாக அறிவித்திருப்பதுதான் கவனிக்கப்பட வேண்டியது. ஓர் அரசியல்வாதியை, அதுதான் மின்சக்தி அமைச்சரையே சமாளித்து ஓர் அலுவலை முடிக்க முடியாதவர், இருநூற்றி இருபத்தி ஐந்து எம்.பி.க்களை, முப்பது அமைச்சர்களை தன்னால் கையாள முடியும் என்று நினைப்பதுதான் வேடிக்கையானது. அவர் பதவியை பறித்த அன்றே மின்சக்தி அமைச்சர் மின்கட்டணத்தை குறைக்கும் அறிவிப்பையும் வெளியிட்டாரே கவனித்தீர்களா?

**கேள்வி:** மதுபானக் கடைகள் குறைந்தது காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரையாவது திறந்திருக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே தெரிவித்திருக்கிறாரே?

**வியுக்தியார்:** காலையில் தேனீர் குடிப்பதற்குப் பதிலாக மதுபானத்தைக் குடிக்கச் சொல்கிறார் போலும்.

---

**க.செல்லத்துரை, கோவில் வீதி, நல்லூர்**

**கேள்வி:** கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்களுக்கு தீ வைத்த ஞானசார தேரர் போன்றவர்களுக்கு எதிராக எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கேள்வி எழுப்பியுள்ளாரே?.

**வியுக்தியார்:** நவாலி தோவாலயத்தின் மீது விமானக் குண்டுவீசி, தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த பலரை படுகொலை செய்த தன் மீதும் என்ன நடிவடிக்கை என்றும் கேட்டிருந்தால் அவர் கேட்பதில் நியாயம் இருந்திருக்கும்.

---

**வி. தனுசன், குருமண்காடு, வவுனியா.**

**கேள்வி:** இலத்திரனியல் ஊடகங்களை கட்டுப்படுத்தும் நோக்கில் ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள தாகவும், அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு எதிர்க் கட்சிக ளும் சிவில் அமைப்புகளும் எதிர்ப்புகளை வெளியிட்டு வருவதாகவும் செய்திகள் வருகின்றனவே. தனக்கு எதுஎது ஆதரவாக இல்லையோ அவற்றையெல்லாம் கட்டுப்படுத்த ரணில் நடவடிக்கை எடுக்கிறாரோ?

**வியுக்தியார்:** இதுபோன்ற அமைப்புக்கள் உலகம் எங்கும் இருக்கின்றனதான். ஆனால் அவை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதில்லை. அவை முழுக்க முழுக்க சுதந்திரமான அமைப்புக்களாகவே இருக்கும். ஆனால் நமது நாட்டில் அரசாங்கமே அதற்கு உறுப்பினர்களை நியமிப்பதால் அவை அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும் என்பது தெரிந்ததுதான். நமது நாட்டில் எதற்கு ஆணைக்குழு இருந்தாலும் அது நியாயமாக நடக்காது என்று எல்லோரும் நம்புகின்றார்கள் என்பதாவது இதன்மூலம் தெரிய வருகின்றது அல்லவா. அதனால்தான் நாங்கள் முள்ளிவாய்க்காலில் நடந்த கொடுமைக்கு சர்வதேச விசாரணை கேட்கிறோம் என்று சொல்வதற்கு நமக்கு இவை உதவும்தானே.

---

**கே.என். ஆனந்தன், கொட்டடி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** தையிட்டியில் அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரையை அகற்ற வலியுறுத்தி மூன்றாவது தடவையாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போராட்டத்தில் ஈடு பட்டு வருகின்றதே. வெசாக் காலத்தில் ஒருதடவை, இப்போது பொசன் போயா தினத்தில் மறுதடவை என்று போராடுகின்றார்களே, இனி ஒவ்வொரு போயா தினத்திலும் அவர்கள் போராட்டம் நடாத்துவார்களோ?

**வியுக்தியார்:** போராட்டம் என்ற வார்த்தையை ஏன் இப்படிக் கொச்சைப்படுத்துகின்றீர்கள். அவர்களை நினைக்க அல்ல, அவர்களுக்கு வாக்களித்த மக்களை நினைக்கின்றபோதுதான் கவலையாக இருக்கின்றது.

சு. கருணாநிதி

# குட்டிநாயும் அவனும்!



சந்திரன் பஸ்சால் இறங்கி சுற்றுமுற்றும் பார்த்தான் வீதியின் பெயரைக் காணவில்லை. சந்தியிலிருந்து பெரியவீதியால் நடந்து திரும்பி உள்ளே போகும் சிறு வீதியாயிருக்கலாம் அதுதான் பெயர் கண்ணிற் படவில்லை போலும். கைத்தொலைபேசியை எடுத்து மகன் சொன்னதின்படி கூகுளினுள் நுழைந்து மப்பைப் போட்டு அந்த மூதாட்டி கொடுத்த முகவரியை பதிந்து தேடினான். இடதுபக்கம் திரும்பு நட... முதலாவது வலது திரும்பு,, நட... கூகிளுக்குள்ளிருந்து பேசும் பெண் குட்டியின் குரல் கரம்பற்றி வழி நடத்த நடந்தான். குட்டிநாய் புதிய இடத்திற்கு வந்திருந்ததால் அது குதூகலத்தோடு துள்ளிக்குதித்து அங்குமிங்குமாய் இடம் வலமாய் இழுத்து அலைக்கழித்துக் கொண்டிருந்தது. டேய் மணி... இஞ்சாலவா... டேய்.சக்... குரலுயர்த்தி கழுத்துச்சங்கிலியை இழுத்துக்குறுக்கி காலடிக்குள் கொணர்ந்தான்.

ஒரு சந்தியிலிருந்து பிரியும் ஒழுங்கையில் நாட்டியிருந்த பெயர்ப்பலகையை உற்றுப்பார்த்தான் ”நாய் பயிற்சியகம்” என எழுதப்பட்டிருந்த வாசகம் நம்பிக்களித்தது. ஓகே கண்டுபிடிச்சாச்சு நிமிர்ந்து நடையை விரைவுபடுத்தினான்.

இப்பிடித்தான் முப்பது மூன்று வருடங்களுக்கு முன்பு யேர்மனியிலிருந்த காலத்தில் ஒருகிராமப் புறத்தில் அவன் தோட்டவேலை தேடிச்சென்ற பாதையில் ‘நாய்ப்பண்ணை’ என்ற பெயர்ப்பலகைப் பார்த்து அடகடவுளே நாய்களிற்கும் பண்ணையிருக்கா இந்தநாட்டில, பிரமித்து வியந்திருந்தான் அப்போது. இப்போ நாய்ப்பள்ளிக்கூடத்தைக்கண்டு அதிர்ச்சியடைந்திருக்கின்றான்.

விதம்விதமான நாய்களின் படங்களைப்போட்டு விளங்கப்படுத்தி நாய் பயிற்சியகம் என எழுதப்பட்டிருந்த அறிவித்தல் பலகையைக்குக்கீழேயிருந்த கதவை தள்ளித்திறப்பதா இழுத்துத்திறப்பதா. தள்ளியும் இழுத்தும் பார்த்தான். திறபட்டது. தள்ளும்போது திறபட்டா இழுக்கும்போது திறபட்டதா தெரியாது திறபட்டதே போதுமானதாகவிருந்தது. மனம் பதட்டபட்டுக்கொண்டிருந்தது. எப்படிக்கதைப்பது எதிலிருந்து தொடங்குவது பக்கத்து வீட்டுப்பெண்மணி கூறியதையும் மகன் சொல்லிக்கொடுத்ததையும் கூட்டிச் சேர்க்கையில் தெரிந்தவார்த்தைகளாகவே இருந்தன. எப்பிடியிருந்தாலும் நாய்க்குட்டிக்கு தன்னிலும்பார்க்க பிரெஞ்சு விளங்கும் என்ற திடம் அவனுக்குள் உற்சாகமளித்தது.

மகன் வேலைக்கு போகத்தொடங்கி சிலமாதங்கள் தான் ஏதாவது பிராணிவளர்க்கவேண்டுமென்ற ஆசை. வீடுகளில் நாய் பூனை முயல் சிறுகுருவிகள் போன்றனவற்றை வளர்ப்பதற்கு வசிப்பவர் யாவற்குமுரிமையுண்டு. சந்திரன் வசிப்பது வாடகைவீடாகிலும் சிறியரக நாய் பூனைகள் மட்டும் வளர்ப்பதற்கு இந்நகரத்தில் அனுமதியுண்டு. மகன்ஆசைப்பட்டானென்று சுத்தம் சுகாதாரம் அது இதுவென சொல்லி மறுத்து தயங்கி மயங்கி ஒருவாறு குட்டிநாய் வளர்க்க அம்மா அப்பா உடன்பட்டனர். ஒருநாள் கூகிளுக்குள் நாய்வாங்கும் பகுதிக்குள் தேடுதல் நடத்தி இடத்தைக்கண்டுபிடித்து குட்டி நாயொன்றை வாங்கிவந்தான். நாய்க்குட்டியை விற்றவர் இவர்கள் வந்தேறுகுடிகள் என்பதால் நாய்வளர்ப்பு பற்றிய ஆலோசனைகளையும் நாயின் குணாம்சங்களையும் எடுத்தியம்பி நாயின் பிறப்பத்தாட்சி, சுகாதார அட்டை, வளர்ப்பிற்கான அனுமதியட்டை போன்ற ஆவணங்களுடன் பராமரிப்புமுறைகளடங்கிய கையேடொன்றையும் வழங்கி உணவுகொடுப்பது, தடுப்பூசி, மருந்துமாத்திரை அது இதுவென சகலவிதிமுறைகளையும் சொல்லி அனுப்பிவைத்திருந்தனர்.

வீட்டிற்கு கொண்டுவந்தநாளிலிருந்து நாய் அதிகம் பேசத்தொடங்கியது.சந்திரன் குடும்பத்தினரைப்பார்த்து உரத்து சிரித்தது.கடிக்காததுதான் குறை. மற்றும்படி நாய் தாறுமாறாக கோபப்பட்டு ஏசியது. இவர்களைப் பிடிக்கவில்லையா அல்லது இடம் பிடிக்கவில்லையாவெனத் தெரியாது. உரத்துக்குரைத்து அயலவற்கு இடைஞ்சலாகவிருந்தது. காலநேரமின்றி உரையாடும் பாணியில் குரைத்துக்கொண்டிருந்தது. நாய்க்குட்டி இவர்களையும் இவர்கள் நாய்க்குட்டியையும் புரிய நாளாகுமெனவும் பழகப்பழக எல்லாம் சரியாகிவிடுமென்றிருந்தனர்.

இவர்கள் நாயின் குணமறிந்து, மனமறிந்து செயற்படும் வேகத்தைக்காட்டிலும் விரைவாக, எளிதாக நாய் இவர்களைப்புரிந்துகொண்டது. வீட்டாரின் பண்பையும் மனதையும் குணநலன்களையும ஸ்க்கான் செய்து அது தனக்குள் பதிவேற்றிவிட்டிருந்தது. சந்தர்ப்பங்களையும், பாவங்களையும், தேவைகளையும் வைத்து வீட்டாருடன் புரிந்துணர்வோடு பழகலானது. சகமனிதனை வாழ்நாள்முழுக்க புரிந்துகொள்ளவிய லாத இவர் களால் நாய்க்குட்டியை புரிந்துகொள்வது ஓரளவு இலகுவாயிருந்தது. நாய்க்கு மொழிதேவைப்படவில்லை. சமிக்கைகளே மொழியாகியிருந்தன.

நாய் ஒண்டுக்கு ரெண்டுக்கு வெளியே போகும் நேரகாலத்தை அதுவாகவே தீர்மா னித்து இவர்களை அழைத்துச் செல்லும்.நாயை மனிதர்கள் நடமாட்ட மற்ற வீதியோரங்களிற்கோ அன்றி சற்று தொலைவான இடங்களிற்கு கூட்டிச்செல்லவேண்டும் இல்லையாயின் நாய் மலத்திற்கு தண்டம் கட்ட நேரிடும். தினமும் காலை மாலை வேளைகளில் சந்திரனுக்கு நல்ல நடைப் பயிற்சியாகவுமிருந்தது. ஓய்வூதியத்திலிருந்து சாப்பிட்டுச்சாப் பிட்டு ரீ வி நாடகங்களைப் பார்த்து நோயாளியா காமல் நாளாந்தம் சீரான அட்டவணை யில் இயங்க நாய் சந்திர னுக்கு பயிற்சியாளனாகியது. நாய் வளர்ப்புபற்றி எதிபார்த்துப் பயந்ததுபோலன்றி கையாள்வதில் சிரம மிருக்கவில்லை, ஆனாலும் அதற் கிடையில் பக்கத்து வீட்டு மூதாட்டி அவசரப் பட்டு விட்டாள்.

“உன்ரநாய் ஏன் எந்தநேரமும் குரைத்துக்கொண்டிருக்கு. நாய்க்கு சாப்பாடுகுடு உனக்கு நாய் வளர்க்கத் தெரியாதா உன்ரநாய் எனக்கு இடைஞ்சலாயிருக்கு. நீ ஏன் நாய்வளர்க்கிற.”

“நாய் கத்துந்தான,அது இசை மீட்காது” சந்திரன் தனக்குத்தெரிந்த பிரெஞ்சுமொழியில் பதிலிறுத்தான்.

கிழவி கோப்பபட்டாவளாய் “உனக்கு விசர்”

“நீயொரு நாய்” கடிந்தாள்.கடித்தாள்.

கிழவி வெள்ளை நிறந்தான் ஆனால் அவள் பிரெஞ்சுக்காரியில்லை. அவளும் வந்தேறு குடியாகத் தானிருப்பாளென அவளது பிரெஞ்சு உச்சரிப்பிலிருந்து புரிந்துந்துகொணடாலும் கூடக்கதைச்சால் அவளும் கதைப்பாள். பிறகு பொலிசுக்கு போன்பண்ணினாளெண்டால் பொலிஸ்வந்து அவளின்ர பக்கம்தான் கதைப்பான். அவள் என்ன நாய் எண்டுறாள். மனதிற்குள் கடிந்துகொண்டு நானும் கதைப்பன் ஏன் வம்பு. சும்மா பேசாமலிருப்பம். மகன் வரட்டும் வந்து கதைப்பான் தானே அப்ப அவ வாங்குவா.

பக்கத்து அறை மூதாட்டிக்கு கணவன்இல்லை. பிள்ளைகளும் பிரிந்து அவரவர் பாதையில் போய்விட்டனர் .தனியாகத்தான் வாழ்ந்துவருகிறாள். ஐரோப்பாவில் தனித்துவாழ்பவர்கள் தம் தனிமையின் கொடுமையைப்போக்க அன்புவைக்க நேசிக்க ஆதரவாகப்பேசி கொஞ்சிக்குலாவ உயிர்த்துணையொன்று தேவையாகவிருந்தது. நாய் , பூனை. முயல் , குருவி போன்ற ஏதாவது உயிரினங்கள் வளர்ப்பது தனிமை வாழ்விற்கு அவசியமானதாகவிருக்கின்றது. இது ஐரோப்பியர்களுக்கு மட்டுமல்ல இன்று அகதிமனிதனாகவந்து வளர்ச்சியடைந்திருக்கும் எம்தமிழ்சமூகங்களினது வாழ்வும் பிறழ்வடைந்து பிளவுபட்டுப்போய் உறவுகளுடன் வாழ்தல் என்பது தயாரிப்புப்பொருளாகிவிட்டது. அன்பு வைத்து ஆதரிக்க ஆரவணைக்க ஆள் தேடும் காலமே நம்கண்முன்விரிந்துகிடக்கின்றது,

மகன் வந்ததும், சந்திரன் மூதாட்டியுடனான உரையாடல்களை விபரித்தான். சந்திரன் தான் கிழவியை கோபப்படுத்தியதால் கிழவியோடு சண்டபிடிக்காதது மெதுவாப் பண்பாகக்கதை சொல்லியனுப்பினான்.

மகனின் நியாயமான பேச்சையும் தர்க்கத்தையும் ஏற்று கிழவி போபந்தணிந்து நாய்க்குட்டியை நல்ல பழக்கவழக்கங்களை கற்றுக்கொடுக்கும் நாய்ப் பள்ளிக்கூடத்திற்கு கொண்டுபோய் காட்டும்படி முகவரியைக் கொடுத்தனுப்பியிருந்தாள். மறுநாள் மகன் வேலைக்குச்செல்லவிருப்பதால் தந்தையிடம் முகவரியைக்கொடுத்து அங்கு என்னென்ன கேள்விகள் கேட்பார்கள் எப்படிப்பதில்சொல்வது என எல்லாவற்றையும் விளங்கப்படுத்தியிருந்தான்,

நாய்ப்பயிற்சியகத்தினுள் நுழைந்ததும் ஒருவெள்ளை நபர் விரைந்துவந்து வரவேற்றான். வெள்ளையர்கள் மட்டும் வந்துபோகுமிடத்தில் ஒருகறுப்பு மனிதன் வந்திருக்கின்றான். இவனும் நாய்வளர்க்கிறானா அல்லது இடம்மாறி வந்திருக்கின்றானா என வியப்புடன் ”ஏன் வந்தாய் நாய்க்குப் பிரச்சினையா” என்று சந்திரனுக்கு விளங்கும் இலகுமொழியில்க்கேட்டான் . ஆம் என்றதும் உள்ளே அழைத்துச்சென்றான்.

ஆவணங்கள் யாவற்றையும் வாங்கி கணினியில் பதிவேற்றிவிட்டு கேள்விகளைக்கேட்கலானான்.

“நாய் எந்த நேரம் அதிகம் குரைக்கிறது”

“பகலிலா, இரவிலா குரைக்கிறது, வேறு ஆட்களைக்கண்டு குரைக்கிறதா”

“பயந்து குரைக்கிறதா”

“பசியில் குரைக்கிறதா”

“மகிழ்ச்சியில் குரைக்கிறதா”

“என்னசாப்பாடு குடுக்கிறநீங்கள் எப்ப குடுக்கிறநீங்கள்”

“உங்கட சாப்பாடு குடுக்கிறநீங்களா உறைப்பு குடுக்கிறநீங்களா”

ஏவுகணைகளாக வந்துவிழும் கேள்விகள் தாக்க திக்குமுக்காடியே பதிலிறுத்தான் மனதிற்குள் சிரிப்பை அடக்கிக்கொண்டு.

இறுதியாக “நாய்க்குட்டிக்கு குரைக்கிறது ஒரு வருத்தமில்லை, பராமரிப்பு சரியாகத்தான் செய்திருக்கிறீங்க நீங்கள் நாயை இங்கே விட்டுவிட்டு செல்லுங்கள் இரண்டுவாரம் கழித்து வந்து எடுத்துச்செல்லலாம்” முகவரி அட்டையைக் கொடுத்து “இந்த இலக்கத்திற்கு போன்செய்து உங்கள் மகனைக்கதைக்கச்சொல்லவும் நன்றி நல்லநாளாகட்டும் போய்வாருங்கள் அடுத்தமுறை சந்திப்போம்”

சந்திரன் மனநிறைவோடு வெற்றிப்பெருமித்துடன் வெளியேறினான், தனக்குள் சிரித்துக்கொண்டே தொலைபேசியை எடுத்து மனைவிக்கு அழைப்பெடுத்து “கலோ சசி,,, மணி யை பள்ளிக்குடத்தில சேத்தாச்சு” மனைவியும் மகிழ்வோடு “என்னப்பா பேரப்பிள்ளைய சேர்த்துவிட்டமாதிரி பெருமிதத்தோட கதைக்கிறீங்க,,, என்ன பகிடி விடுகிறீங்களா” “பெரிய பகிடியப்பா வீட்டவந்து சொல்லுறன்”

பலவருடங்களுக்கு முன் அவன்மனைவி ஒருபிரெஞ்சுப்பெண்மணி வீட்டில் வேலைகாரியாக பணிசெய்தபோது. வீடுகூட்டி, மப் பண்ணி, துடைத்து, உடுப்புகளை வோசிங்மெசினில்ப்போட்டு கழுவி ,உலர்த்தி அயன்செய்து, மடித்துவைத்து மளிகைக்கடைக்குப்போய், சாமான்கள் வாங்கிவைத்து வளர்ப்பு நாயை ஒண்டுக்கு ரெண்டுக்கு வெளியே கூட்டிக்கொண்டு போன அனுபவங்களை மனைவியூடாக தெரிந்து வைத்திருந்தும் மனதினுள் ஒருவித முரண்தயக்கம் சங்கடப்படுத்திக்கொண்டிருந்தது.

பிள்ளைகளை பள்ளிக்குடத்திற்கு கூட்டிக்கொண்டு போனகாலம்போய் பேரப்பிள்ளைகளை பாடசாலைக்கு கொண்டுபோய்விட்டு திருப்பிக்கூட்டிக்கொண்டுவாற வயதில இப்ப பிள்ளைகளின் செல்லப்பிராணி நாய்க்குட்டியை பள்ளிக்குடத்திற்கு கூட்டிக்கொண்டு வந்ததை அவனால் கிரகிக்கமுடியாமலிருந்தது. சம்பளத்திற்கு நாய் மேய்த்த நாட்கள் கடந்து இப்போ பொழுதினைக் கழிக்க நாய் நம்மை மேய்க்கும் காலம் வந்திருப்பதை நினைத்து மனதிற்குள் சிரித்துக்கொண்டான். இதை வளர்ச்சி முன்னேற்றமென்று பெருமைகொள்வதா இல்லை இகழ்ச்சியென இகழ்வதா. அவன் தனக்குள்ளே கேள்விகளைக் கேட்டுக்கொண்டான்.

# பிஜியில் இந்திய வம்சாவழி மக்களுக்கு தேசிய அங்கீகாரம்:

# ஜனநாயக அமைதி வழிக்கு திரும்பிய இராணுவ அரசு !

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

அரசியல் மற்றும் இனக் கொந்தளிப்பு அதிகமாக வரலாற்றில் இருந்த போதிலும், கிட்டத்தட்ட 3500 ஆண்டுகள் பழமையான பிஜி தீவுகள் ஒருசிறந்த சுற்றுலாத் மையமாகவே என்றும் இருந்து வருகிறது.

பிஜியில் சிதிவேனி ரபுகா எனும் பிஜி ஆளும் தலைவர் இத்தீவில் இந்திய - பிஜியன் சமூகம் ஆற்றிய முக்கிய பங்கைப் பற்றிய அவரது ஆழமான புரிதலை எடுத்துக் காட்டி உள்ளார்.

இந்திய வம்சாவழியினர் செய்த மகத்தான பங்களிப்பையும், அவர்களில் பலர் விவசாயிகளாகவும், நிலத்துடனான அவர்களின் தொடர்பையும் நன்றியுடன் ஒப்புக் கொண்டு அவர் அமைதிக்கு வலியுறுத்தி உள்ளார்.

இந்திய - பிஜிய விவசாய சமூகம், பிஜியின் முதன்மையான சர்க்கரை உற்பத்தியாளர்களாக, நாட்டின் மிகப்பெரிய மற்றும் மிகவும் நிலையான தொழில்துறையின் முதுகெலும்பாக உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றி உள்ளனர்.

**இந்தியர்களின் குடியேற்றம்**

பிஜியில் தோட்டங்களுக்கான தொழிலாளர்களை வழங்குவதற்காக, பிரித்தானிய அரசாங்கம் இந்தியாவில் இருந்து 1789 ஆம் ஆண்டு முதல் 1916 வரை 60,000 இந்தியர்களை பிஜிக்கு அழைத்து வந்தனர்.

இன்று, இந்தத் தொழிலாளர்களின் சந்ததியினர் பிஜி மக்கள் தொகையில் சுமார் 44 வீதம் பேர் உள்ளனர். பூர்வீக பிஜி மக்கள் தொகையில் சுமார் 51 வீதம் பேர்



உள்ளனர். மற்றவர்கள் சீனர்கள், ஐரோப்பியர்கள் மற்றும் பிற பசிபிக் தீவுக்காரர்கள்.

1800 களின் பிற்பகுதியில் இருந்து 1960 கள் வரை, பிஜி ஒரு இனமாக இருந்தது. குறிப்பாக அரசியல் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில். பிஜியர்கள், இந்தியர்கள் மற்றும் ஐரோப்பியர்கள் அனைவரும் தங்கள் பிரதிநிதிகளை சட்டசபைக்கு தேர்ந்தெடுத்து நியமனம் செய்தனர்.

**1960களின் சுதந்திர இயக்கங்கள்**

1960 களின்சுதந்திர இயக்கங்களால் சுய-அரசாங்கத்திற்கான கோரிக்கைகள் எழுப்பட்டது. பிஜி மற்றும் லண்டனில் பேச்சுவார்த்தைகளின் இறுதியில் ஒக்டோபர் 10, 1974 இல் பிஜிக்கு முழு அரசியல் சுதந்திரம் கிடைத்தது.


1974இல் புதிய குடியரசின்ஆரம்ப ஆண்டுகளில் இனவாத பிளவுற்ற அரசாங்கத்தைக் காண முடிந்தது. ஆளும்கூட்டணி கட்சி உள்ளூர் பிஜியர்கள் ஆதிக்கம் செலுத்தினர்.

2000 ஆம்ஆண்டில் மகேந்திர சௌத்ரி பிரதமராக பதவியேற்றார், பிஜி நாட்டின் முதல் இந்திய-பிஜி பிரதமராக ஆனார். துரதிருஷ்டவசமாக, அவரின் ஆட்சி குறுகிய காலமாக இருந்தது.

2000 ஆம்ஆண்டு மே 19 அன்று, வர்த்தகர் ஜார்ஜ் ஸ்பெயைட் தலைமையிலான இராணுவ பிரிவுகள் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தின் அதிகாரத்தை வன்முறையால் கைப்பற்றினர். சௌத்ரி மற்றும் அவரது அமைச்சரவை பல வாரங்களாக பணயக்கைதிகளாக வைக்கப்பட்டனர்.

2000 ஆம் ஆண்டின் நெருக்கடி இராணுவ தளபதி ஃ பிராங்க் பைனீமாராமா, தலையீட்டால் முடிவுற்றது. இதன் விளைவாக, சௌட்ரி ராஜினாமா செய்ய



வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

பல வாரங்கள் பதற்றம் மற்றும் ஆட்சிக்கவிழ்ப்பு அச்சுறுத்தல்களுக்குப் பின்னர், பிஜி நாடு கமாண்டோர் பிராங்க் பெயின்மாமாவின் கட்டுப்பாட்டிற்குள் மீண்டும் டிசம்பர் 5, 2006 அன்று ஒரு இரத்தம் சிந்தப்படாத சதித் திட்டத்தில் அதிகாரம் கைப்பற்றப் பட்டது.

**பிரித்தானியாவிடம் இருந்து பிஜி விடுதலை**

1970 ஆம்ஆண்டில் பிரித்தானியாவிடம் இருந்து பிஜி விடுதலை பெற்றது. பிஜி அரசாங்கத்தில் பிஜி இந்தியர்கள் பெரும்பான்மையாக இருந்ததனால், மக்களாட்சி அமைப்பு 1987 ஆம் ஆண்டில் இருதடவைகள் இராணுவப் புரட்சியால் தடைப்பட்டது.

1987 இல்இடம்பெற்ற இரண்டாவது இராணுவப் புரட்சியை அடுத்து பிஜிய அரசர், மற்றும் ஆளுனர் ஆகியோர் பதவிகளில் இருந்து அகற்றப்பட்டனர். பதிலாக நிறைவேற்றதிகாரமற்ற ஜனாதிபதி ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. நாட்டின் பெயரும் டொமினியன் பிஜி இலிருந்து பிஜி குடியரசு (பின்னர் 1997 இல் பிஜித் தீவுகளின்குடியரசு) என மாற்றப்பட்டது.

**2014 தேர்தலில்பிஜியில் உள்ள இந்திய வம்சாவளியினருக்கு வாக்களிக்கும் உரிமை முழுமையாக அளிக்கப்பட்டது. மொத்தம் 9 லட்சம் பேர் வசிக்கும் இத்தீவில் 40 சதவீதம் பேர் இந்திய வம்சாவளியினர்என்பது குறிப்பிடத்தக்கது**

இந்த மாற்றத்தை அடுத்து ஏற்பட்ட அமைதியின்மையால் பிஜி இந்தியர்கள் பெருமளவில் நாட்டை விட்டு வெளியேறினர். மக்கள்தொகை குறைந்ததனால் அங்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது, ஆனாலும் மெலனீசியர்களான பூர்வ குடிகள் பெரும்பான்மையினமாக மாறினர்.

**மகேந்திராசவுத்திரி பிரதமர்**

1997 ஆம் ஆண்டில் புதியஅரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வரசியலமைப்பை பிஜியர்களும், பிஜி இந்தியர்களும் ஆதரித்தனர். பிஜி பொதுநலவாய நாடுகள் அமைப்பில் மீளச் சேர்த்துக் கொள்ளப்பட்டது. பிஜி இந்தியரான மகேந்திராசவுத்திரி பிரதமரானார்.




2000 ஆம்ஆண்டில் ஜோர்ஜ் ஸ்பைட் தலைமையில் மற்றுமொரு ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தப்பட்டது. பிரதமர் மகேந்திரா சவுத்திரி பதவியில் இருந்து அகற்றப்பட்டார் என்பதனை விட தூக்கி எறியப்பட்டார் என்பதே உண்மை.

அதன்பின்னர் காமிசே மாரா ஜனாதிபதிப் பதவியில் இருந்து கட்டாயமாக விலக, அதற்குப் பதிலாக இராணுவத் தலைவர் பிராங்க் பைனிமராமா நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

2006 நவம்பர் இறுதியிலும், 2006 டிசம்பர் ஆரம்பத்திலும் இடம்பெற்ற இராணுவப் புரட்சிக்கு இராணுவத் தலைவர் பிராங்க் பைனிமராமா தலைமையேற்றார். பிரதமர் கராசே பின்னர் பதவி விலகினார்.

**பைனிமராமா பிரதமர்**

பிஜிநாடு பொதுவாக நாடாளுமன்ற சார்பாண்மை மக்களாட்சிக் குடியரசு முறையில் ஆளப்படுகிறது. பல-கட்சி முறையில் பிரதமர் அரசுத் தலைவராகவும், ஜனாதிபதி நாட்டின் நிறைவேற்றதிகாரமற்ற தலைவராகவும் உள்ளனர்.

பிஜிவிடுதலை பெற்றதில் இருந்து பிஜியில் நான்கு முறை இராணுவத் தலையீட்டுடனான ஆட்சிக் கவிழ்ப்புகள் இடம்பெற்றுள்ளன. 1987 ஆம் ஆண்டில் இருதடவையும், 2000, 2006 ஆகிய ஆண்டுகளிலும் இராணுவப்புரட்ட்சிகள் இடம்பெற்றன. 1987 ஆம் ஆண்டில் இருந்து இராணுவம் ஆட்சியில் நேரடியாகவோ அல்லது அரசாங்கத்தில் செல்வாக்கையோ செலுத்தி வருகிறது என்பது வெளிப்படை.

**பிஜி இந்தியர்களுக்கு உதவிய நியுசிலாந்து**

இந்திய வம்சாவளியினர் பிஜி தீவில் ஆட்சிசெய்யக் கூடாது என்பது உள்பட பல கோரிக்கைகளை முன் வைத்து புரட்சிக்கும்பல் தொடர்ந்து போராட்டம் நடத்தி வந்தது.

பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்ட சில தினங்களில் புரட்சிக்கும்பல் தலைவர் ஜார்ஜ் ஸ்பீடு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அவரைவிடுவிக்கக் கோரியும், இந்திய வம்சாவளியினர்களுக்கு உயர்பதவிகள் கொடுக்கக் கூடாது என்றும்




கூறி பிஜியில் பூர்வகுடிமக்கள் பலஇடங்களில் போராட்டம் நடத்தினர். குறிப்பாக இந்திய மக்களின் வீடுகளில் கொள்ளையடிப்பது, பயிர்களை அழிப்பது, போன்ற செயல்களில் ஈடுபட்டனர்.

இந்திய வம்சாவளியினர் தொடர்ந்து தாக்கப்பட்டு, தலைநகர் சுவாவிலிருந்து பல கிலோமீட்டர் தொலைவிலுள்ள சிகாடாகோ பகுதியில் இந்தியர்களுக்குச் சொந்தமான பள்ளிக்கூடம் ஒன்று தீ வைத்துக் கொளுத்தப்பட்டது.

இதனால்அங்கு வாழும் இந்திய மக்கள் அனைவரும் ஆஸ்திரேலியா மற்றும் நியுசிலாந்து நாடுகளுக்கு புகலிடம் தேடி போக ஆரம்பித்தனர்.

2000 ஆண்டில் அன்றைய நியுசிலாந்து பிரதமர் ஹெலன் கிளார்க், பிஜி தீவில் இந்தியமக்கள் துன்புறுத்தப்படுவது மிகவும் வருத்தம் அளிக்கக் கூடிய விஷயமாகும் என ஐநா சபையில்தெரிவித்தார்.

அத்துடன் நியுசிலாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் பில் கோப் பிஜியில் வசிக்கும் இந்திய மக்களுக்கு ஏற்படும் பிரச்சனை குறித்து விசாரித்து, நியுசிலாந்து அரசு பிஜியில் வாழும்இந்திய மக்களுக்கு உதவி செய்ததும் குறிப்பிடத்தக்கது.

**பிஜியில் மீண்டும் ஜனநாயக தேர்தல்:**

பல ராணுவப் புரட்சி ஏற்பட்ட பிஜி தீவு நாட்டில் ஒரு பொது தேர்தல் 2014 செப்டம்பர் 17 அன்று நடந்தது. 1987 - 2006 இடைப்பட்ட ஆண்டுகளில் அமைந்த 4 முறை அரசுகளை கவிழ்த்து ராணுவம் ஆட்சியை கைப்பற்றிய பின் நடந்த தேர்தலில் 2006-ம் ஆண்டு ராணுவ புரட்சியை நிகழ்த்திய தளபதி வோரேக் பிராங்க் பைனிமராமா ஆட்சியை கைப்பற்றினார்.

2014 தேர்தலில்பிஜியில் உள்ள இந்திய வம்சாவளியினருக்கு வாக்களிக்கும் உரிமை முழுமையாக அளிக்கப்பட்டது. மொத்தம் 9 லட்சம் பேர் வசிக்கும் இத்தீவு நாட்டில் 44 சதவீதம் பேர் இந்திய வம்சாவளியினர் என்பது குறிப்பிடத்தக்கது.

நீண்டகாலமாக நிலவிய பிணக்குகள் சர்வதேச தலையீட்டுடன் தீர்க்கப்பட்டு, தற்போது பிஜித்தீவில் சுமூகமான சமாதான நல்வாழ்வு நிலவுகிறது. வன்முறைகளின் களமான இந்த அழிகிய தீவில் இன்றைய அமைதியும்,

பூர்விககுடிமக்களுக்கும், இந்திய வம்சாவளியினருக்கும் இடையே நல்லுறவு எழுத்துள்ளதையும் நாம் தற்போது காணலாம்.



# கஜேந்திரகுமார் எம்.பி. மீதான தாக்குதல் முயற்சி மிலேச்சத்தனமானது

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. கண்டனம்

வவுனியா,ஜூன்4

கஜேந்திரகுமார் எம் பி மீதான புலனாய்வாளர்களின் தாக்குதல் முயற்சி தமிழ் மக்களுக்கு விடப்படும் அடுத்த கட்ட அச்சுறுத்தல் என்பதோடு மிலேச்சத்தனமானது மாகும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் மீது புலனாய்வாளர்கள் தாக்குதல் முயற்சியை மேற்கொள்ள முனைந்தமைக்கு கண்டனம் தெரிவித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்கள் குறைகேள் செயற்பாடுகளையும் அரசியல் செயற்பாடுகளையும் முன்னெடுக்கும் போது புலனாய்வாளர்களின் இடையூறுகள் தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

எனினும் இவற்றை பொருட்படுத்தாது பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது செயற்பாடுகளை முன்னேடுத்து வருகின்றனர்.

தமிழ் மக்களின் காவலர்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட்டு வரும் நிலையில் அவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விடும் வகையிலான செயற்பாடுகளை இலங்கை அரசாங்கம் புலனாய்வாளர்களை வைத்து செயற்படுத்த முனைவதானது தமிழ் மக்களுக்கே இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லை என்பதை புடம்போட்டுக் காட்டுகின்றது.

இந்நிலையில் கஜேந்திரகுமார் மீதான தாக்குதல் முயற்சிக்கு தகுந்த விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறாத வகையில் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைய வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# “ரூபாவின் பெறுமதி வலுப்பெற்ற போதிலும் பொருட்களின் விலை குறைவடையவில்லை”

கொழும்பு, ஜூன் 04

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வலுப்பெற்றுள்ள போதிலும், பொருட்களின் விலை குறைவடையவில்லை என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலைகள் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளமையால், நிறுவனங்கள் பொருட்களின் விலையை குறைக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இதேநேரம், ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ள போதிலும், சந்தையில் பொருட்களின் விலை குறைக்கப்படவில்லை என வாடிக்கையாளர்கள் தெரிவித்தனர்.

அதேநேரம், பல அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைப்பதற்கு உற்பத்தியாளர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அச்சிடல் மற்றும் எழுதுகருவிகளின் விலை குறைக்கப்படவில்லை.

சிறிய அளவிலேயே அவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

உணவுப் பொருட்கள் தயாரிக்க பயன்படுத்தப்படும் பொருட்களின் விலையிலும் சிறிய அளவிலேயே மாற்றம் ஏற்பட்டுள்ளது.

மொத்த சந்தையில் பொருட்களை கொள்வனவு செய்யும்போது அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்படுகிறது.

இது தொடர்பில் மொத்த விற்பனையாளர்களிடம் வினவும் போது அவர்கள் பொருட்களின் விலையை மாற்ற முடியாது என தெரிவிக்கின்றனர்.

இதன் பின்னணியிலேயே தாங்கள் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக சில்லறை விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(அ)

# யாழ். பல்கலை துணைவேந்தர் பதவிக்கு நால்வர் விண்ணப்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு நான்கு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என அறிய வருகிறது.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவின் பதவிக் காலம் எதிர்வரும் ஒகஸ்ட் 28 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில், பல்கலைக் கழகப் பேரவையின் பதவி வழிச் செயலாளரான பதிவாளரால் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

அதற்கான இறுதித் தினம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் பிற்பகல் 3:00 மணியுடன் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் நிறைவடைந்தவேளையில் யாழ்.பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் மூவரும், கிழக்குப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவருமாக நான்கு பேர் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பேராசியர் செ. கண்ணதாசன், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி ஆகியோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்தும், விலங்கியல் துறைப் பேராசிரியர் பி. வினோபாபா கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இருந்தும் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளனர்.

பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு அமைய எதிர்வரும் ஜூலை மாத முற்பகுதியில் நடத்தப்படவுள்ள விசேட பேரவைக் கூட்டத்தில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நிபுணர் ஒருவரின் முன்னிலையில் தெரிவுக்கான புள்ளிகள் வழங்கப்பட்டு, புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களின் விவரங்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

பல்கலைக்கழகச் சட்டத்தின் படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையினால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரைத் தெரிவு செய்து துணைவேந்தராக ஜனாதிபதி பிரகடனம் செய்வார்.

(அ)






# மக்கள் பிரதிநிதிகளுக்கே இந்நிலையெனில் மக்களின் நிலைமையை எண்ணிப்பாருங்கள்

## சந்திரகுமார் கண்டனம்

கிளிநொச்சி, ஜூன் 04

வடமராட்சியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதல் சம்பவம் நாட்டில் தமிழ் மக்கள் எப்படி நடத்தப்படுகின்றார்கள் என்பதனை தெளிவாக வெளிப்படுத்தி நிற்கிறது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி ஒருவர் நாட்டில் சுந்திரமாக செயற்பட முடியாத ஜனநாயக சூழல் காணப்படுகிறது என்றால் அப்பாவி தமிழ் மக்களின் நிலைமையை எண்ணிப்பாருங்கள்? அவர்கள் எப்படி நடத்தப்படுவார்கள் என்பதனை சிந்தித்து பாருங்கள் என அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தன்னுடைய மக்களை சந்தித்து அவர்களுடைய குறைகளை, பிரச்னைகளை கேட்டறிவதற்குக் கூட ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு இந்த நாட்டில் சுதந்திரம் இல்லாத நிலைமை வடக்கு-கிழக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொடர்ச்சியான கண்காணிப்புக்கள், அச்சுறுத்தல்கள் என்பன தமிழ் மக்கள் மீது யுத்தம் நிறைவுற்று 14 ஆண்டுகள் கடந்தும் இடம்பெற்று வருகிறது. இது இனங்களின் நல்லிணக்கத்திற்கும், நிலையான சமாதானத்திற்கும் ஏற்புடையதல்ல. இவ்வாறான சம்பவங்கள் இனங்களுக்கிடையே குரேதத்தை மேலும் மேலும் வளர்த்துக்கொண்டே செல்லும்.

எனவே இச் சம்வபங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான தாக்குதல் மற்றும் அவரது செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தல் விடுத்தவர்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.(அ)

### தரமற்ற ரின்மீன் உற்பத்தி:

# நடவடிக்கை எடுப்பதற்கு தவறியது நுகர்வோர் விவகார அதிகார சபை

கொழும்பு, ஜூன் 04

தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையின்படி, தரமற்ற ரின்மீனை உற்பத்தி செய்த ஐந்து நிறுவனங்களுக்கு எதிராக நுகர்வோர் விவகார அதிகாரசபை சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையின்படி, கடந்த 2021 ஆம் ஆண்டில் தரமற்ற ரின் மீன்களை விற்பனை செய்த கடைக்காரர்கள் குழுவுக்கு எதிராக மட்டுமே ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாதிரிச் சோதனையின் பின்னர் இந்த ரின் மீன்கள் தரமற்றவை என உறுதி செய்யப்பட்டுள்ளதாக கணக்காய்வு அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை, அதிகாரசபையின் பொது முறைப்பாட்டுத் தொலைபேசி சேவைக்கு கடந்த 2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 8056 முறைப்பாடுகளில் 2646 முறைப்பாடுகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அலுவலகம் தெரிவித்துள்ளது.

816 முறைப்பாடுகள் தொடர்பாக மட்டுமே சோதனை நடத்தப்பட்டதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபை அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த வருடாந்த அறிக்கையில் இந்தத் தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# அழகிகளிடம் இலஞ்சம் பொலிஸ் அதிகாரி கைது!

கொழும்பு, ஜூன் 04

கடவத்தை பிரதேசத்தில் அமைந்துள்ள மசாஜ் நிலையமொன்றில் இருந்து 10,000 ரூபாவை இலஞ்சமாக பெற்றதாகக் கூறப்படும் முன்னாள் பொலிஸ் பரிசோதகர் இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பில் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மசாஜ் நிலையத்தின் செயற்பாடுகள் தடையின்றி தொடர்வதற்கு கடவத்தை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் பரிசோதகர் ஒருவருக்கு வழங்குவதற்காக மசாஜ் நிலைய முகாமையாளரிடம் பணம் கோரப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மசாஜ் நிலைய முகாமையாளர் இதனை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் தெரிவித்துள்ளார்.

முகாமையாளர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், ஆணைக்குழுவினர் கடவத்தைப் பகுதியில் சோதனை நடத்தி, முகாமையாளரிடம் இருந்து உரிய தொகையை இலஞ்சமாக பெற்றதாக சந்தேகத்தின் பேரில் காரில் சென்ற முன்னாள் பொலிஸ் பரிசோதகரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சப்புகஸ்கந்த பொலிஸில் கடமையாற்றும்போது கடமைக்கு சமூகமளிக்காத காரணத்தினால் கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி முதல் சேவையை விட்டு விலகியவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை ஆணைக்குழுவின் புலனாய்வு அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பொசன் போயாவை முன்னிட்டு 440 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

கொழும்பு, ஜூன் 04

பொசன் போயா தினத்தை முன்னிட்டு 440 சிறைக்கைதிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது மன்னிப்பு வழங்கவுள்ளார்.

அதன்படி கைதிகள் நேற்று சனிக்கிழமை காலை விடுவிக்கப்பட்டனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி 434 ஆண் கைதிகளும் ஆறு பெண் கைதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

24 சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக மேலதிக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

பல்லேகலவில் 87 பேரும் மஹரவில் 43 பேரும், தல்தெனைவில் 39 பேரும், வீரவிலவில் 37 பேரும் பல்லன்சேனவில் 26 கைதிகளும், வெலிக்கடையில் 22 கைதிகளும், மட்டக்களப்பில் இருந்து 21 கைதிகளும் நேற்று காலை விடுதலை செய்யப்பட்டனர்.

(அ)

# குற்றச்செயல்மயமான அரசியலும்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற அவர் அது காலாவதியானதும் புதிய தைப் பெற விண்ணப்பித்தபோது ஐக்கிய இராச்சி யத்தின் குடியுரிமையை அவர் கைவிட்டதாக ஆவணம் எதையும் சமர்ப்பிக்கவில்லை என்ற காரணத்தால் அந்த கடவுச்சீட்டை வழங்குவது சாத்தியமில்லை என்று குடிவரவு, குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டளர் பாதுகாப்பு அமைச்சு செயலாளருக்கு கடிதம் அனுப்பினார். அந்த கடிதத்தை எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கடந்த வருட இறுதியில் சபையில் சமர்ப்பித்தார்.

டயானா கமகே குடிவரவு, குடியகல்வு சட்டத்தை மீறியிருந்தால் அவரைக் கைதுசெய்வதற்கு உத்தரவொன்றை நீதிமன்றம் பிறப்பிக்கத் தேவையில்லை. நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் அவரைக் கைது செய்வதற்கு குற்றப்புலனாய்வு பொலிசாருக்கு அதிகாரம் இருக்கிறது என்று கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றம் அறிவித்து ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. இன்னமும் அவர் கைது செய்யப்படவில்லை. அரசாங்கத் தரப்புக்கு மாறாமல் அவர் எதிர்க்கட்சியில் தொடர்ந்தும் இருந்திருந்தால் நிலைமை நிச்சயமாக வேறு விதமாகவே அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சட்டத்தை மீறிச் செயற்படுகின்ற அரசியல்வாதிகள் தண்டனைக்குள்ளாவது அவர்கள் எந்தப் பக்கத்தில் இருக்கிறார்கள் என்பதை பொறுத்ததாகவே பெரும்பாலும் இருக்கிறது.

மாகாண முதலமைச்சராக இருந்தபோது தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி செய்த உதவிக்கு கைமாறாக பெருந்தொகைப் பணத்தை தருமாறு வர்த்தகர் ஒருவரை அச்சுறுத்திய அரசியல்வாதியொருவருக்கு கொழும்பு மேல்நீதிமன்றம் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் அபராதமும் விதித்தது. அந்த தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டைச் செய்த அவர் இன்றைய அரசாங்கத்தில் மிக முக்கியமான அமைச்சராக பதவி வகிக்கக்கூடியதாக இருக்கிறது.

போலிக்கடவுச்சீட்டுடன் இலங்கைக்குள் பிரவேசிக்க முயன்ற சீனப்பிரசை ஒருவரை குடிவரவு அதிகாரிகள் விமானநிலையத்தில் தடுத்துவைத்தபோது இராஜாங்க அமைச்சர் ஒருவர் அவர்களுக்கு உத்தரவிட்டு அவரை விடுவித்தார். இலங்கையில் முதலீடு செய்வதற்கு வந்திருப்பதாக இராஜாங்க அமைச்சர் கூறிய அந்த சீனர் தனது நாட்டில் போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றத்துக்காக தேடப்படும் ஒருவர் என்று நீதிமன்றத்தில் சட்டமா அதிபரின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. எத்தகைய பேர்வழிகளிடம் இருந்து அரசியல்வாதிகள் முதலீடுகளை எதிர்பார்கிறார்கள் என்று பாருங்கள்.

சீனரை விடுவிக்குமாறு அதிகாரிகளைக் கேட்டுக் கொண்ட அமைச்சருக்கு எதிராக எந்த விசாரணையும் நடத்தப்படமாட்டாது என்று உள்நாட்டு பாதுகாப்புக்கு பொறுப்பான அமைச்சர் அறிவிக்கவும் தயங்கவில்லை. இவ்வாறாக தங்கள் தரப்பு சட்டமீறல்களை அரசாங்கந்தரப்பு முடிமறைப்பது அல்லது அவற்றைச் செய்தவர்களைப் பாதுகாப்பது ஒரு கலாசாரமாகவே வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது.

கோட்டாபய ஆட்சிக்காலத்தில் அரசியலமைப்புக்கான 20 வது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த நாளில் இருந்து அரசாங்கத்துக்கு சார்பாக செயற்பட்டு வந்த அலி சப்ரி றஹீம் பொதுப்பயன்பாட்டு வசதிகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை பதவி நீக்குவதற்கு அரசாங்கம் பாராளுமன்றத்தில் கொண்டு வந்த பிரேரணையை எதிர்த்தே வாக்களித்தார். ஏன் அவ்வாறு செய்தீர்கள் என்று அவரிடம் கேட்கப்பட்டபோது ஆபத்தில் மாட்டிக்கொண்டவேளையில் தன்னைக் காப்பாற்றுவதற்கு ஜனாதிபதியோ பிரதமரோ முன்வரவில்லை. எதற்காக அவர்களின் அரசாங்கத்தை நான் ஆதரிக்கவேண்டும் என்று பதில் கேள்வியையே கேட்டார்.

முன்னர் அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்த சந்தர்ப்பங்களில் எல்லாம் 'ஆபத்துகளில்' இருந்து தன்னை அரசாங்கத் தலைவர்கள் காப்பாற்றியதற்கான கைம்மாறைத்தான் அவர் செய்தாரோ?

சட்டவிரோதமான வழி முறைகளில் பெரும் பணம் பண்ணுபவர்களுக்கு குறிப்பாக அரசியல்வாதி களுக்கு அரசியல் அதிகாரத்தின் உதவி தேவைப்படு கிறது. அந்த உதவி கிடைப்பதைப் பொறுத்தே எந்தப் பக்கத்துக்கு ஆதரவாக செயற்படுவது என்பதை அவர்கள் தீர்மானிக்கிறார்கள் போலும்.

என்னைப் பதவிநீக்குவதற்கு பாராளுமன்றத்தில் அரசாங்கம் பிரேரணையைக் கொண்டுவந்தாலும் நான் நீக்கப்படப் போவதில்லை என்று எனது உள்மனம் கூறுகிறது. ஏனென்றால் அரசாங்கம் மின்கட்டணங்களை முன்னென்றும் இல்லாத அளவுக்கு அதிகரித்த சந்தர்ப்பங்களில் அதை கடுமையாக எதிர்த்து மககளின் பக்கத்தில் நான் நின்றதால் சபையில் பெரும்பாலான உறுப்பினர்கள் எனக்கு எதிராக வாக்களிக்கமாட்டார்கள் என்று முதல்நாள் கூறிய ஜனக ரத்நாயக்க மறுநாள் தான் பதவி நீக்கப்பட்ட பிறகு அரசியல்வாதிகள் தங்களது விருப்புவெறுப்புகளுக்கு ஏற்பவே தீர்மானங்களை எடுக்கிறார்கள் என்று கூறியதை காணக்கூடியதாக இருந்தது. எமது அரசியல்வாதி களைப் பற்றிய ஒரு சரியான மதிப்பீட்டை அவரால் செய்யமுடியவில்லையே!

1978 ஆம் ஆண்டில் ஜே. ஆர். ஜெயவர்தன அரசாங்க காலத்தில் ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினரான அநுரா டானியல் தங்கப்பாளங்களை கடத்திக்கொண்டுவந்து விமானநிலையத்தில் பிடிபட்ட சம்பவத்துக்கு பிறகு அதாவது 45 வருடத்துக்கு பிறகு தங்கத்தை கடத்த முயன்றபோது பிடிபட்ட அடுத்த பாராளுமன்ற உறுப்பினர் றஹீம் என்று கூறப்படுகிறது. ஆனால் அந்த நான்கரை தசாப்தங்களில் இந்த இரு அரசியல்வாதிகள் மாத்திரமே இதுவரையில் விமான நிலையத்தின் ஊடாக கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்று நம்பமுடியுமா?

முறைகேடான வழிகளில் பழிபாவத்துக்கு அஞ்சாமல் சொத்துக்களை குவித்தவர்கள் பெருவாரியானோர் இன்று அரசியலில் ஈடுபட்டிருக்கிறார்கள். கட்சிகளின் தலைவர்களும் அவர்களையே திரும்பத்திரும்ப தேர்தல்களில் வேட்பாளர்களாக நிறுத்துகிறார்கள்.

பெரும் பணபலமும் அடியாள் பலமும் அரசியலுக்கு முக்கியமான 'தகுதியாக' விளங்கும் இன்றைய மோசமான அரசியல் கலாசாரத்தில் அரசியல் குற்றச்செயல்மயப்படுத்தப்பட்டிருக்கிறது குற்றச்செயல் அரசியல்மயப்படுத்தப்பட்டிருக்கிறது.

## தையிட்டியில்...

போராட்டம் நேற்று நான்காவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ், ஊடகப் பேச்சாளர் கனகரட்ணம் சுகாஸ் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

## வடக்கு...

காண உள்ளூர் நடவடிக்கைகளை எடுக்க தமிழ் அரசியல்வாதிகள் நட வடிக்கை எடுக்க வேண்டும்-என்றார்.

அண்மையில் வவுனியா - வெடுக்குநாறி ஆதிசிவன் கோவிலின் சிவலிங்கம் உடைக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களும் அரசியல்வாதிகளும் பௌத்த மயமாக்களை நிறுத்த கோரிப் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

அத்தோடு யாழ்ப்பாணம் தையிட்டிப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பௌத்த விகாரையை அகற்றக் கோரி போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மூன்று...

பெங்களூர் நகரில் இருந்து மேற்கு வங்காளத்தின் ஹவுரா நகரம் நோக்கிப் பயணித்த அதிவேக சுப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரயில் -

மற்றும் காகிதாதிகளை ஏற்றிச் செல்கின்ற சரக்கு ரயில் ஒன்று -

ஆகிய மூன்று ரயில்களுமே இந்தப் பேரனர்த்தத்தில் சிக்கிச் சின்னாபின்னமாகி இருக்கின்றன.

இவற்றில் சென்னை கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயிலே முதலில் தடம்புரண்டுள்ளது. அதன் பெட்டிகள் அருகே உள்ள தண்டவாளங்களில் தூக்கி வீசப்பட்டன. அதனால் அங்கு தரித்து நின்ற சரக்கு ரயிலும் தடம் புரண்டுள்ளது. அதேசமயம் எதிர்த் திசையில் மின்னல் வேகத்தில் வந்து கொண்டிருந்த பெங்களூர் - ஹவுரா எக்ஸ்பிரஸ் ரயில் தண்டவாளங்களில் வீசப்பட்டுக் கிடந்த கோரமண்டல் ரயிலின் பெட்டிகள் மீது வேகமாக மோதிச் சிதறியுள்ளது.

விபத்துக்குத் தொழில்நுட்பக் கோளாறுகளா அல்லது மனிதத் தவறா காரணம் என்பது தெரியவில்லை. உயர் மட்டக் குழு ஒன்று விபத்துக்கான காரணத்தைக் கண்டறிவதில் ஈடுபட்டிருக்கிறது. இதற்கிடையில் -

சென்னை கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் மணிக்கு 123 கிலோ மீற்றர்கள் வேகத்தில் அதன் வழக்கமான தடத்தில் இருந்து தடம்மாறிப் பயணித்துள்ளது என்றும், அந்தத் தடத்தில் தரித்து நின்ற சரக்கு ரயில் வண்டி மீது அதுவே முதலில் மோதியதால் இந்த விபத்து நேர்ந்துள்ளது என்றும் பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

விபத்து நடந்த கிழக்கு மாநிலம் ஒடிசாவில் உள்ள பாஹாநகர் ரயில் நிலையத்தை அண்டிய பிரதேசம் பெரும் போர்க்களம் போன்று இரத்தம் தோய்ந்து காட்சியளிக்கிறது என்று அங்கு சென்றுள்ள செய்தியாளர்கள் வர்ணித்திருக்கின்றனர். பார்க்கும் இடம் எங்கும் இரத்தமும் உடல்களும் உடற்பாகங்களுமே காட்சியளித்தன என்று விபத்தில் உயிர் பிழைத்தவர்கள் செவ்வியளித்துள்ளனர்.

தேசிய பேரிடர் மீட்புக் குழுக்கள் அங்கு முழு வீச்சில் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

சென்னையை நோக்கிப் பயணித்த பல நூற்றுக்கணக்கான பயணிகளும் இந்த அனர்த்தத்தில் சிக்க நேர்ந்துள்ளதால் தமிழக அரசு இன்று சனிக்கிழமை ஒரு நாள் துக்கம் அறிவித்திருக்கிறது. (அ)

## எரிபொருள்...

பெற்றுக்கொள்ளாத எரிபொருள் நிலையங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார்.

எரிபொருள் நிலையங்கள் குறைந்த பட்சம் 50 வீத இருப்பு வைத்திருக்க வேண்டும். ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறிய எரிபொருள் நிலையங்களின் உரிமங்கள் பரிசீலனைக்குப் பிறகு நிறுத்தப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## ஐ.நா...

பதவியை ஏற்றுக்கொள்கின்றது. ஆபிரிக்கா சார்பாக கொங்கோ, சாம்பியா, மொராக்கோ, செனகல், உகாண்டா, சாம்பியாவும் ஆகிய நாடுகளும் ஆசியா பசிபிக் நாடுகளுக்கு ஈரான், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளும் தேர்ந்தெடுக்கப்பட் டுள்ளன.

கிழக்கு ஐரோப்பியாவுக்கு எஸ்டோனியாவும், இலத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் தீவுகளுக்கு பொலிவியாவின் ப்ளுாரினேஷனல் ஸ்டேட், சுரினாம் போன்ற நாடுகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் ஐ.ந. பொதுச் சபையின் 78ஆவது அமர்வுக்கு துணைத் தலைவர்களாக மேற்கு ஐரோப்பிய மற்றும் பிற மாநிலங்களுக்கு ஐஸ்லாந்து, நெதர்லாந்து ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட துணைத் தலைமை நாடுகள், ஐ.நா. பாதுகாப்புச் சபையின் வீட்டோ அதிகாரம் கொண்ட ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளான சீனா, பிரான்ஸ், ரஷ்யா, பிரித்தானியா, அமெரிக்கா ஆகியவற்றுடன் இணைந்து செயற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## தேர்தல்...

பாராளுமன்றத்திலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்தாலும் 50 வீத பலத்தை பெற்றுக்கொள்ள முடியாது.

எனவே தேர்தலுக்காக ஒன்றுபடுவதை விடுத்து பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெ டுக்க சகலரும் ஒன்றுபட வேண்டியது அவசியம்.

தற்போது இந்நாட்டு மக்களில் பெரும்பாலானோர் தேர்தல் மற்றும் அரசியல் மீது நம்பிக்கை இழந்துள்ளனர்.

சட்டம் மற்றும் ஒழுங்கு, அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்பட்டிருப்பதால் நெருக்கடியிலிருந்து இலங்கை முற்றாக மீண்டுவிட்டது என்று கருத முடியாது. இந்தச் செயன்முறையின் வெற்றிக்கு எதிர்காலத்தில் பாரிய அர்ப்பணிப்புக்களை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

தேசிய சட்ட மாநாட்டில் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டம் மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து ஆராயப்படும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

எவ்வாறாயினும் தற்போது சட்டம் ஒழுங்கு, அரசியல் பொருளாதார ஸ்திரத்தன்மையும் உருவாகியுள்ளது. இந்த நிலைமை குறுகிய காலத்திற்குரியது என்பதால் நாம் இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது என்பதை உணர வேண்டும்.

முன்னொருபோதும் காணாத வகையிலான சவாலை இந்நாட்டின் பொருளாதாரம் கடந்த பத்து மாதங்களுக்கு முன்பாக கண்டிருந்தது.

இருப்பினும் சட்டம் ஒழுங்கு, அரசியல் பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை நாம் அர்ப்பணிப்புடன் முன்னெடுத்திருந்தாலும் நாடு நெருக்கடியிலிருந்து முழுமையாக மீண்டுவிட்டதென கூற முடியாது-என்றார். (அ)

# குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதில் பொலிஸாருக்கு ஆளணிப் பற்றாக்குறை!

### யாழ்.பொலிஸ் அதிகாரிகள் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 04

யாழ்.மாவட்டத்தில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதில் பொலிஸாருக்கு ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதாக தெரிவித்த பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் ஆளணியை அதிகரிப்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டம் கடந்த புதன்கிழமை யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ்.மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் ஆகியோரின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

யாழ். மாவட்டத்தில் குற்ற செயல்கள் அதிகரித்து இருப்பதாக தெரிவித்த பிரதேச செயலர்கள், அதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பொலிஸ் அதிகாரிகள், பல இடங்களில் பொலிஸ் ஆளணிப் பற்றாக்குறை இருப்பதைச் சுட்டிக்காட்டியதுடன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொலிஸ் ஆளணியை அதிகரிப்பதற்கு தனது செல்வாக்கை பயன்படுத்தவேண்டும் என கோரிக்கையும் விடுத்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எனக்கு கடிதம் மூலம் ஒரு கோரிக்கையை விடுத்தால் தான் அதனை ஜனாதிபதியுடன் கதைத்து பொலிஸ் ஆளணியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்,சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ்

நிலைய பொறுப்பதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் பிரதேச செயலர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# இலங்கையில் 10-24 வயதுடையவர்களில் 39 வீதம் பேர் மன அழுத்தத்தால் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 04

இலங்கையில் 10 தொடக்கம் 24 வயதுக்குட்பட்ட இளைஞர், யுவதிகளில் 39 வீதம் பேர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் களனிப் பல்கலைக்கழகத் தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் குழு ஒன்று நடத்திய ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

ஜேர்மனியில் உள்ள சமூக மனநலம் மற்றும் மனநோய் தொற்றுநோயியல் பற்றிய மதிப்புமிக்க இதழில் வெளியிடப்பட்ட இந்த ஆய்வின் முடிவு கள், நாட்டில் உள்ள மனநலப் பிரச்சினையின் ஆபத்தான புள்ளி விவரங்களை வெளிப்படுத்தி யுள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் களனிப் பல்கலைக்கழகத் தைச் சேர்ந்த குழு 20 வருட காலப்பகுதியில் 52,000 இலங்கை யர்களிடம் 33 ஆய்வுகளை மதிப்பீடு செய்துள்ளது.

ஆராய்ச்சி முடிவுகளின்படி, மொத்த இலங்கை சனத்தொகை யில் 19.4 வீதம் பேர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் மன அழுத்த பாதிப்பானது குறிப்பிடத் தக்க வகையில் அதிகமாக உள்ள தாக இந்த ஆய்வில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

2003 முதல் 2023 வரை நீடித்த இந்த ஆய்வு, 52,778 நபர்களைக் கொண்ட விரிவான பங்கேற்பாளர் குழுவை உள்ளடக்கியுள்ளது.

10 முதல் 24 வயதுக்குட்பட்ட இளைஞர்களிடையே மனச்சோர்வு அதிகமாக இருப்பது ஆய்வின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும்.

அதிர்ச்சியூட்டும் வகையில், இலங்கையில் ஏறக்குறைய 39 வீத இளைஞர்கள் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களில் 18.4 வீதம் பேர் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து தாய்வழி மக்கள் மற்றும் 25 முதல் 60 வய துக்குட்பட்ட பெரியவர்கள் முறையே 16.9 வீதம் மற்றும் 8.7 விகிதம் இருப்பதாகவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. (அ)

## பொருளாதார...

கலந்துரையாடல்கள் மூலம், பொருளாதார ரீதியாக இலங்கை எதிர்கொள்ளும் சவால்களை எவ்வாறு முறியடிப்பது என்பது குறித்து நன்கு அறிந்துகொண்டதுடன், சர்வதேச நாணய நிதியத்தின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்த அது உதவுகிறது.

பொருளாதார சீர்திருத்தம், ஸ்திரத்தன்மை, கடன் நிலைத்தன்மையினை மீட்டெடுப்பது, ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்தல், நிர்வாக திறனை வலுப்படுத்துவது மற்றும் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாத்தல் போன்ற விடயங்களில் அவர்கள் ஆர்வம் காட்டுவது மகிழ்ச்சியளிக்கிறது.

கடன் வழங்குநர்களுடன் தொடர்ச்சியான வெளிப்படையான கருத்து பரிமாற்றம், திட்ட இலக்குகளுக்கு ஏற்ப கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கான மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை எட்ட எதவும்.

நிதித்துறையின் ஸ்திரத்தன்மையை பாதுகாப்பது குறித்த செயல்பாடு மிகவும் அவசியமானது-என்று கூறியுள்ளார். (அ)

## பௌத்த...

அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை இடம்பெற்று வந்தாலும் இறுதித் திட்டம் இன்னும் வகுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# பொருளாதாரப் பாதிப்பிலிருந்து நாடு தற்போது வழமை நிலைக்கு!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகிறார்



கொழும்பு, ஜூன் 04

**பாரிய பொருளாதாரப் பாதிப்பில் இருந்து நாடு தற்போது வழமைக்கு திரும்பியுள்ளது. அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளன என வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

கம்பஹா பகுதியில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்துக்கு எதிராக எதிர்வரும் எட்டாம் திகதி நாட்டு மக்களை ஒன்றுத்திரட்டுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். மக்கள் போராட்டத்தை நாங்களும் எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறோம்.

அரசாங்கத்துக்கு எதிராக நாட்டு மக்கள் எவரும் போராட்டத்தில் ஈடுபடமாட்டார்கள். எரிபொருள், மின்சார விநியோகம் ஆகிய அத்தியாவசிய சேவைகளில் ஏற்பட்ட பாதிப்பால் மக்கள் கடந்த ஆண்டு போராட்டத்தில் ஈடுபட்டார்கள். மக்களின் ஜனநாயகப் போராட்டத்தை மக்கள் விடுதலை முன்னணியினர் கொள்ளையடித்தார்கள்.

பாரிய பொருளாதாரப் பாதிப்பில் இருந்து நாடு தற்போது வழமைக்கு திரும்பியுள்ளது. அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளன.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண்பதற்கு மக்கள் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள். அரசியல்வாதிகள் மாத்திரமே போராட்டத்தில் ஈடுபடுவார்கள்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னிலை தரப்பினர்கள் ஒட்டுமொத்த மாணவர்களின் எதிர்காலத்தையும் இல்லாதொழிக்கிறார்கள். பலவந்தமான முறையில் தான் பல்கலைக் கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்-என்றார். (அ)

# 300 ரூபாவால் குறைவடையும் சமையல் எரிவாயுவின் விலை

கொழும்பு, ஜூன் 04

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை இன்று நள்ளிரவு முதல் குறைக்கப்படவுள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஷ் தெரிவித்தார்.

12.5 கிலோ எடைகொண்ட எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை 300 ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையொன்றினால் குறைவடையும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# பாதுகாப்புச் செயலராக சாகல?



கொழும்பு, ஜூன் 04

பாதுகாப்பமைச்சின் புதிய செயலாளராக சாகல ரத்னாயக்கவை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசித்துவருவதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போதைய செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவின் இடத்திற்கே ,சாகல நியமிக்கப்படும் வாய்ப்பு இருப்பதாக தெரிகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மேற்கு தொகுதியின் புதிய அமைப்பாளராகவும் ஜனாதிபதி பணியாளர் குழாமின் பிரதானியாகவும் சாகல ரத்நாயக்க தற்போது செயற்படுகிறார்.

இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறலாம் என்று கருதப்படுவதால் அதற்கு முன்னதாக அரச நிர்வாக சேவையில் பல மாற்றங்களைச் செய்ய ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக அறியமுடிகின்றது. (அ)

# லாப்ஸ் எரிவாயு விலை 400 ரூபாவால் குறையும்!

கொழும்பு, ஜூன் 04

லாப்ஸ் எரிவாயுவின் விலையிலும் திருத்தம் மேற்கொள்ள எதிர்ப்பார்ப்பதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

விலை திருத்தம் இடம்பெறும் முறை தொடர்பில் விரைவில் அறிவிக்கப்படும் என அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, எரிவாயு விலை திருத்தத்தின் பயனை மக்களுக்கு வழங்குவதற்கு நுகர்வோர் அதிகாரசபையின் தலையீட்டுடன் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார். (அ)

# 140,000 மில்லியன் ரூபாய் திறைசேரி உண்டியல் ஏலம்!

கொழும்பு, ஜூன் 04

ஒரு இலட்சத்து 40 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், எதிர்வரும் 7 ஆம் திகதி ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 65 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும்,

182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 30 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 45 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

# ஊடகங்கள்மீது அடக்குமுறை பிரயோகிக்கும் அரசாங்கத்தின் முயற்சியை முறியடியுங்கள்!

## மக்கள் போராட்ட இயக்கம் ஐ.நாவிடம் முறைப்பாடு

கொழும்பு, ஜூன் 04

ஒளி, ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்தின் ஊடாக ஊடகங்கள்மீது அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சியில் உடனடியாகத் தலையீடு செய்யுமாறு வலியுறுத்தி மக்கள் போராட்ட இயக்கம் ஐக்கிய நாடுகள் சபையிடம் முறைப்பாடளித்துள்ளது.

ஒளி, ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்தை அறிமுகப்படுத்துவது குறித்து அண்மையில் அமைச்சரவையில் ஆராயப்பட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியானதையடுத்து, அதற்குப் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

அதன் ஓரங்கமாக மக்கள் போராட்ட இயக்கத்தின் பிரதிநிதிகள் இது குறித்து ஐக்கிய நாடுகள் சபையிடம் முறைப்பாடளித்துள்ளனர்.

ஒளி, ஒலிபரப்பு ஒழுங்குபடுத்த சட்டத்தின் ஊடாக அரசாங்கம் ஊடகங்களுக்கு எதிராக அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதற்குத் தயாராகிவருவதாகவும், எனவே இவ்விடயத்தில் உடனடியாகத் தலையீடு செய்யுமாறும் அந்த முறைப்பாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்டுள்ள மக்கள் போராட்ட இயக்கத்தின் பொதுச் செயலாளர் சானக பண்டார, ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை ஓர் உறுப்புநாடு எனவும், ஆகவே மக்களின் ஜனநாயகத்தை ஒடுக்குவதற்குத் தயாராகிவரும் அரசாங்கத்தின் இந்நடவடிக்கையில் ஐ.நா உடனடியாகத் தலையிடவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

“பொதுமக்கள் தகவல்களை அறிந்துகொள்வதற்குத் தாம் கொண்டிருக்கும் உரிமையை ஊடகங்களின் வாயிலாகவே அனுபவிக்கின்றனர். இருப்பினும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் அவரது அரசாங்கமும் மக்களின் ஜனநாயக உரிமையைப் பறிப்பதற்கு முற்படுகின்றனர்“ என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் “ஊடகங்கள்மீது ஒடுக்குமுறையைப் பிரயோகிப்பதற்கு அரசாங்கம் பொதுவானதொரு கொள்கையை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றது. ஆனால் சர்வாதிகாரிகளால் எப்போதும் நாட்டை ஆளமுடியாது என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ளவேண்டும். ஏனெனில் அத்தகைய ஆட்சியாளர்களை மக்கள் விரட்டியடித்துவிடுவார்கள்“ என்றும் சானக பண்டார எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நீரில் மூழ்கி இருவர் பலி!

கொழும்பு, ஜூன் 04

மஹவெல மற்றும் கல்கிரியாகம பகுதிகளில் நீரில் மூழ்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.

மஹவெல - ரஜகம்மன சுதுகங்கையில் நீராடச் சென்றவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாதமுல்ல கிஹிலுவ பகுதியை சேர்ந்த 22 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இதனிடையே, கல்கிரியாகம உஸ்ஸான பாலத்திற்கு அருகில் ஹெவென்வெல்ல ஓயாவில் நீராடச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தேவஹூவ பகுதியை சேர்ந்த 37 வயதான நபரே உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, அபாயம் மிக்க பகுதிகளில் நீராடச் செல்வதைத் தவிர்க்குமாறு பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சட்டத்தரணி நிஹால் தல்துவ பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

பொசொன் பண்டிகையை முன்னிட்டு அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் உள்ள நீர்நிலைகளை அண்மித்த பகுதிகளில் உயிர் காப்புப் பிரிவின் 355 அதிகாரிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# உணவுப்பொருள்கள் தொடர்பான விளம்பரங்களுக்குக் கட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 04

உணவு பொருள்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விளம்பரங்களை புதிய ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தி கடுமையாகக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, 1980ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் கீழ் புதிய ஒழுங்குவிதிகள் கொண்டு வரப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய ஒழுங்கு விதிகளுக்கு அமைய உணவு பொருள்கள் தொடர்பான விளம்பரங்களை மூன்றாம் தரப்பினர் ஊடாக செய்யும்போது அதற்கு, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியை பெற்றுக்கொள்வது கட்டாயமாகும்.

விளம்பரங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் உணவுச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், அரச அச்சக திணைக்களத்தின் இணையத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது.

அடுத்த 6 மாதங்களில் இந்த புதிய ஒழுங்குவிதிகள் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.